கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–15, இதழ் – 10 Volume - 15, Issue - 10	புரட்டாசித் திங்கள் September 2024	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

"Delivered by India Post"

www.indiapost.gov.in

PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு
திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஓரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

மகளிர் விடுதி திறப்பு விழா

சென்னை கார்காத்தார் சங்கத்தின் சூளைமேடு மகளிர் விடுதி 01.09.2024 ஞாயிறு காலை 11.30 மணியளவில் சென்னை ராதா இன்ஜினியரிங் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. **வி.ஆர். செந்தில்குமார்** அவர்களால் திறந்து வைக்கபட்டது. திறப்பு விழாவில் மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர், சென்னை கார்காத்தார் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள், அண்ணா நகர், நங்கநல்லூர், போரூர், குரோம்பேட்டை, ஒய் எம் கே சங்க நிர்வாகிகள் மற்றும் கார்குல சொந்தங்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

Member
CREDAI
DAC
DREAM ASCEND CONQUER
SAVE BIG | STAY COOL
சூப்பர்
சேவர்
செப்டம்பர்
சேமிப்பு ₹10* லட்சம் வரை
NO SHOCKS
அபார்ட்மெண்ட்ஸ் | பிளாட்ஸ்
வில்லாஸ்
₹ 39* லட்சம் முதல் ₹ 2* கோடி வரை
சேமியுங்கள்
பணத்தில் சேமிப்பு : PRE - EMI சலுகைகள் பெறலாம்
நேரத்தில் சேமிப்பு : குறித்த நேரத்தில் ஒப்படைத்தல், எல்லா காலமும்.
வாடகையில் சேமிப்பு : வாடகை சுமையில்லை / வீட்டை வாங்கி வாடகைக்கு விடலாம்.
அலைகழிப்பில் சேமிப்பு : உங்கள் எல்லா தேவையையும் ஒரே இடத்தில் பெறலாம்.
புத்திசாலித்தனமான சேமிப்பு : நம்பிக்கையான நிறுவனத்தில் முதலீடு செய்து உங்கள் பணத்தின் சிறந்த மதிப்பை பெறலாம்.
தாம்பரம்
Avenue One
₹39* லட்சம் முதல்
சோழிங்கநல்லூர்
Save upto 6* Lakhs
PRATHYANGIRA
₹98* லட்சம் முதல்
கூடுவாஞ்சேரி
Save upto 6* Lakhs
MIDTOWN
₹69* லட்சம் முதல்
மேடவாக்கம்
Save upto 5* Lakhs
MEDALLION
₹84* லட்சம் முதல்
தாம்பரம்
Save upto 7* Lakhs
DAC MARSHAL
₹89* லட்சம் முதல்
மணப்பாக்கம்
Save upto 3.5* Lakhs
DAC MANAPARK
₹91* லட்சம் முதல்
பல்லாவரம்
AEROPOLIS
₹60* லட்சம் முதல்
புதிய மேடவாக்கம்
Save upto 9* Lakhs
VILVA
₹1.65* கோடி முதல்
பள்ளிக்கரணை
Save upto 10* Lakhs
PALISADE
₹1.73* கோடி முதல்
நாவலூர்
DAC Silicon Valley
₹1.75* கோடி முதல்
100+ PROJECTS
2M+ SQFT CONSTRUCTION
2500+ HAPPY FAMILIES
TN/35/Layout/2645/2024 dated 08.07.2024 | TN/29/Building/0189/2023 dated 05/05/2023 | TN/35/Building/0383/2024 dated 05.06.2024 | TN/35/Building/0436/2023 Dated.20.10.2023 | TN/35/Building/0386/2024 dated 06.06.2024 | TN/01/Building/0217/2023 dated 17/05/2023 | TN/35/Building/0444/2024 dated 06.08.2024 | TN/01/Layout/3092/2023 dated 21/08/2023 | TN/29/Layout/4130/2023, dated 07.11.2023 | TN/29/Building/00172/2023 dated 24/04/2023
*T&C Apply
Scan QR for Website
For More Details Call:
93003 93003
www.dacdevelopers.com
Get Picked & Dropped in Our Own Sanitized Cars

Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

108 Rooms & Suites | 03 Banquet Halls

[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com

Thiruvasantham
PURE VEG

A Traditional South Indian Pure Vegetarian Restaurant

Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

மணமகன் / மணகள் தேவை

பெயர்	**செல்வி ஆ. அபிராமி**
படிப்பு	B.E. (EEE),
வேலை	தனியார் துறை (Software)
பிறந்த தேதி	14.12.2001
உயரம்	157 cm
நட்சத்திரம்	கேட்டை
கோத்திரம்	காருட
பூர்வீகம்	பரதூர் – சிதம்பரம்
தகப்பனார்	**பூ. ஆனந்தசபேசன்**
தாயார்	**த. அனுராதா** (அரியலூர்)
முகவரி	மனை எண். 84, பத்மாவதி நகர் பிரிவு, பிரதான சாலை, (மோகன் நகர் பின்புறம்), மாடம்பாக்கம், சென்னை – 600 126. Cell : 94447 01201, 94441 23022, 99944 51992



பெயர்	**செல்வன் S. கௌசிக்**
படிப்பு	B.Tech, MBA.,
வேலை	Sr. Project Engineer, Qatar
பிறந்த தேதி	21.05.1995
உயரம்	181 cm
நட்சத்திரம்	அவிட்டம்
கோத்திரம்	நன்னுட
பூர்வீகம்	மழவராயநல்லூர் – சிதம்பரம்
தகப்பனார்	**V. சங்கர்,** தலைமை மருந்தாளுநர்
தாயார்	**S. வித்யா,** (பாலாகுடி) இல்லத்தரசி
முகவரி	53, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம் – 608 001. Cell : 94862 23517, 70100 41488
விருப்பம்	சமபடிப்புடன் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன்.

மணமகன் / மணகள் தேவை

பெயர் செல்வி தி. அனுப்பிரியா
படிப்பு MBA.,
பிறந்த தேதி 04.07.1998
உயரம் 158 cm
நட்சத்திரம் விசாகம்
கோத்திரம் சாத்தனுட
பூர்வீகம் பெருந்தோட்டம்
தகப்பனார் ம. திருஞானம்
தாயார் தி. விஜயலெட்சுமி
(சித்தர்காடு, மயிலாடுதுறை)
முகவரி 3/658, அண்ணா நகர்,
3வது தெரு, சட்டநாதபுரம்,
சீர்காழி
Cell : 98656 44234, 89738 37613

பெயர் செல்வி M. தேசிகா
படிப்பு M.C.A.,
பிறந்த தேதி 07.09.2001
உயரம் 172 cm
நட்சத்திரம் பரணி
கோத்திரம் கூடலுட
பூர்வீகம் கீழ்அதங்குடி,
காட்டுமன்னார்கோயில் வட்டம்
தகப்பனார் V. மதியழகன்,
Flowwell Casting Pvt. Ltd., Supervisor, Chennai
தாயார் காந்திமதி (இல்லதரசி)
(கும்பகோணம்)
முகவரி 40/44, வன்னியபதி தெரு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
Cell : 88380 81400, 8754 56273
விருப்பம் தகுதியான வரன்

பெயர் செல்வன் P. ஸ்டாலின்
படிப்பு B.E. (Civil)
வேலை Project Engineer,
Sobha Ltd.,
Bengaluru
Rs. 5,00,000/PA
உயரம் 176 cm
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் ஒகலுட
பூர்வீகம் அவளிவநல்லூர், வலங்கைமான் (Tk)
தகப்பனார் S. புஷ்பநாதன், M.A.,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு)
தாயார் P. இந்திராணி (இல்லத்தரசி)
மாடாகுடி, கும்பகோணம் (TK)
முகவரி 86, செந்தமிழ் நகர்,
வலங்கைமான் (PO & Tk.),
திருவாரூர் (Dt.) – 612 804.
Cell : 94436 78542, 96008 48462
E-mail : pushpatnrdoa61@gmail.com
விருப்பம் படித்து பணியில் உள்ள (அ) படித்து பணியில் இல்லாத வரன்.

பெயர் செல்வன் S. ஜெகநாதன்
படிப்பு B.E., MBA.,
வேலை Technical Support Engineer,
ZOHO Corp, Chennai
Rs. 5.7 Lakhs/PA
பிறந்த தேதி 24.07.1996
உயரம் 180 cm
நட்சத்திரம் சுவாதி (4 பாகம்)
கோத்திரம் யெனுகுடையர்
பூர்வீகம் செங்கோட்டை
தகப்பனார் L. சரவணன்
தாயார் S. சாந்தி
முகவரி வடக்கு ரத வீதி,
செங்கோட்டை – 627 809.
தென்காசி மாவட்டம்
Cell : 94872 46698

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

- பிறந்தநாள் விழா, மஞ்சள் நீராட்டு விழா மாணவ / மாணவிகளின் Get together போன்ற சிறிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக எங்கள் விடுதி அமைந்துள்ளது.
- மருத்துவ காரணங்கள் மற்றும் தற்காலிகமாக சில நாட்கள் தங்க சமையலறை வசதியுடன் கூடிய தங்குமிடம் எங்களிடம் உள்ளது. இவ்வசதி வேண்டுவோர் மேற்கண்ட செல் நம்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
- Free Driver Accommodation Available

இதழின் உள்ளே....

இந்தியாவைப் பற்றிய அற்புதமான பெருமைக்குரிய செய்திகள் 11

"தீர்க்க சுமங்கலி பவா" 15

புவிசார் குறியீடு 17

சங்க பலகை 20

சிறுவர் பகுதி 25–28

"அவ்வினைக்கு இவ்வினையாம்" 41

மணமகன் / மணமகள் தேவை 44–47

சங்க நிகழ்வுகள் 48

கார்காத்தார் ஒப்புரவு

கார்காத்தார் சங்கம் (சென்னை)

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

ஆயுள் சந்தா ரூ. 2000/-

ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

கார்குல உறவுகளுக்கு மனம் நிறைந்த வணக்கங்கள் பற்பல. புரட்டாசி மாதம் பெருமாளுக்கு உகந்த மாதம் மட்டுமல்ல; அம்பிகையை வழிபடக் கூடிய நவராத்திரி, முன்னோர்களை வழிபடும் மஹாளய அமாவாசை ஆகிய புண்ணிய தினங்களும் வருகின்றன. நமது சொந்தங்கள் மனமுருகி இறைவனை வழிபட்டு நலம் பெற வாழ்த்துகிறோம்.

2022ஆம் ஆண்டின் தேசிய திரைப்பட விருதுகள், ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது. சிறந்த திரைப்படமாக, மலையாளப் படமான 'ஆட்டம்' தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. தமிழ்ப்படமான பொன்னியின் செல்வன் I நான்கு விருதுகளை வென்றுள்ளது. சிறந்த பொழுதுபோக்குப் படமாக கன்னடப்படம் 'காந்தாரா' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற அனைவரையும் கார்காத்தார் ஒப்புரவு மனமாரப் பாராட்டுகிறது.

2019ஆம் ஆண்டு காஷ்மீருக்கு வழங்கி இருந்த சிறப்பு அந்தஸ்தை நீக்கி, இருயூனியன் பிரதேசங்களாக அம்மாநிலம் பிரிக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு ஜம்மு, காஷ்மீரில் செப்டம்பர் 18, 25, அக்டோபர் 1 என மூன்று கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் வன்முறைகளின்றி, அமைதியான முறையில் நடைபெறுவதையும், அரசியல் கட்சிகள் அதுபோன்றே தேர்தல் பிரசாரம் செய்வதையும் உறுதி செய்வது மத்திய அரசு மற்றும் தேர்தல் கமிஷனின் முக்கிய கடமையாகும்.

ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி இரவு, கல்கத்தாவின் R.G. கார் அரசு மருத்துவமனையில், ஒரு இளம் பெண் பயிற்சி மருத்துவருக்கு நடந்த கொடூரம், நமது நாட்டினையே கொந்தளிக்க வைத்துள்ளது. இந்தியா முழுவதிலும் மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இரவு பகல் பாராது மக்களுக்காக உழைக்கும் மருத்துவர்களுக்கு மருத்துவமனையிலேயே பாதுகாப்பில்லை எனில்... என்னவென்று சொல்வது? நமது தேசம் சுதந்திரம் அடைந்த போது, மகாத்மா காந்தி அவர்கள் எப்போது நடுநிசியில் ஒரு பெண் தனியாக சாலையில் நடந்து செல்ல முடிகிறதோ, அன்று தான் நமக்கு சுதந்திரம் கிடைத்ததாக கொள்வேன் என்று கூறினார். எவ்வளவு சத்தியமான வார்த்தை!

உலகில் நடக்கும் கொடுமை தாங்காமல் தான் இயற்கை அன்னை சீற்றம் கொண்டாளோ? 2024ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் தேதி அதிகாலையில் கேரளாவில் உள்ள வயநாடு மாவட்டத்தில் புஞ்சிரி மட்டம், முண்டக்கை, சூரல்மலா மற்றும் வெள்ளரிமலா கிராமங்களில் நடந்த தொடர் நிலச்சரிவுகளும், வெள்ளமும் வரலாறு காணா அளவில் உயிர் சேதத்தையும், பொருட் சேதத்தையும் ஏற்படுத்தி உள்ளது. சுமார் 318 பேர் இறக்க, 200 பேர் காயமடைய, 220 பேரைக் காணவில்லை என அரசு அறிவித்துள்ளது. நமது ராணுவமும், தீயணைப்பு படையினரும் மற்றும் பொதுமக்களும் போராடி பலரை மீட்டுள்ளனர். இயற்கையின் கோபம் வடக்கில் உத்தரகாண்ட் மாநிலம் தாருசுலாவில் நிலச்சரிவும், இமாச்சல்பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் குஜராத் மாநிலங்களில் வெள்ளமுமாக மிகுந்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆசிரியத் தொழில் ஒரு உன்னதமான தொழில். இளைய சமுதாயத்தை உருவாக்கும் அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும், ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் பெருமையும், மகிழ்ச்சியும் கொள்கிறது எனில் அது மிகையன்று.

தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)
(சென்னை கார்காத்தார் சங்கம்)

Reg. No. S.9 of 1928 - 1929

64, சௌராஷ்டிரா நகர், 10–வது தெரு,
சூளைமேடு, சென்னை–6000904.

*** 102-வது பொதுக்குழு கூட்ட அறிவிப்பு ***

அன்புடையீர் வணக்கம்.

நமது சங்கத்தின் 102–வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் வருகின்ற 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஹோட்டல் பாம்குரோவ், எண். 13, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை– 600034–ல் நடைபெறவுள்ளது. சங்க உறுப்பினர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

27–8–2023 கைலை. சண்முகம்,
சூளைமேடு. செயலாளர்.

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044 24724882

அன்புடையீர் வணக்கம்.

சென்னை சூளைமேடு சௌராஷ்டிரா நகர், 10வது தெருவில் அமைந்துள்ள கார்காத்தார் இல்லத்தில் உள்ள 'B' பிளாக்கில் மகளிர் தங்கும் விடுதி 10.9.2024 முதல் செயல்பட உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறோம். வேலைக்கு செல்லும் மகளிர் மற்றும் கல்லூரியில் பயிலும் மகளிர் மாத வாடகையில் தங்குவதற்குரிய அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தேவையுள்ளவர்கள் மேற்படி முகவரியில் / 044-2472 4882 / 94454 82798 தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

இந்தியாவைப் பற்றிய அற்புதமான பெருமைக்குரிய செய்திகள்

மேலையூர் ச. அன்பழகன் 9841373184

நடந்து முடிந்த பொதுத் தேர்தல்கள் முடிவு அறிவிக்கப்பட்டபிறகுஒருநாள்நான்மயிலாடுதுறைக்கு ஒரு குடும்ப விழாவுக்குச் சென்றிருந்தேன். முக்கிய சடங்குகள் முடிந்து சாப்பிட காத்திருந்த போது பேசிக்கொண்டிருந்த உறவினர்கள்/ நண்பர்கள் பேச்சு அரசியல் பற்றித் திரும்பியது. சென்னை வாசிகள் அதிக அளவில் வாக்கு அளிக்காததைப் பற்றி ஒருவர் குறை கூறினார். பண நாயகம் வென்றது என தோற்ற அரசியல் கட்சி சார்ந்த அன்பர் ஒருவர் கூறினார். அதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கிராமப் பெரியவர் ஒருவர் என்னிடம் , " தம்பி , இந்த பசங்க எப்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே தான் இருப்பார்கள். நம் நாடு எவ்வளவு பெரிய நாடு . சுதந்திரம் அடைந்து இவ்வளவு நாட்களில் எவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளோம். அண்டை நாடுளில் ஜனநாயகம் கேலிக்கூத்தாக இருக்கையில் எவ்வளவு அமைதியாக தேர்தல் நடந்துள்ளது என்றெல்லாம் கூறி விட்டு நம் நாட்டுப் பெருமைகள் பற்றி ஒரு சில தகவல்களையும் கூறினார். அதை மனதில் கொண்டு வந்த நான் அத்துடன் இதர அமசங்களையும் சேர்த்து இக்கட்டு ரையை எழுதியுள்ளேன்

கண்டு பிடிப்புகள்

1. சந்திரனில் தண்ணீர் இருப்பதை முதலில் கண்டு பிடித்தது இந்தியா.

ஆம் இந்தியாவின் இஸ்ரோ அனுப்பிய சந்திராயன் –1 தன்னிடமிருந்த

Moon Mineralogy Mapper ஐ பயன் படுத்தி சந்திரனில் தண்ணீர் இருப்பதை 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கண்டு பிடித்தது.

2. வைரங்களை முதலில் வெட்டி எடுத்த நாடு இந்தியாதான் ஆரம்ப காலங்களில் வைரம் வண்டல் மண்ணில் குண்டூர் மற்றும் கிருஷ்ணா மாவட்டங்களில் படிவங்களாகத்தான் கிடைத்தது. 18 ஆம் நூற்றாண்டில் ப்ரேசில் நாட்டில் வைரம் கண்டு பிடிக்கும் வரை உலகில் வைர உற்பத்தியில் இந்தியாதான் முன்னணியில் இருந்தது.

3. செஸ் எனப்படும் ஞாயவயசயதேய டிச ஹளாவய ஞயனய " சதுரங்க ஆட்டத்தை கண்டு பிடித்தது இந்தியாதான். செஸ் ஆட்ட நிபுணர் ஆனந்த் "ஸ்பெயின் " நாட்டுக் குடியுரிமை பெற்றிருந்தாலும் நம் நாட்டைச் சேர்ந்தவர்

4. தலைக்குப் போடும் ஷாம்ப்பூ எனப்படும் தலை கழுவும் திரவம் சீப்ப நெய் கண்டு பிடிக்கப்பட்டதும் இந்தியாவில் தான், இப்போது விற்பனையில் உள்ளது போன்றவை அல்ல. அந்த காலங்களில் மூலிகைகளில் எடுக்கப்பட்டது ஷாம்பூ. ஷாம்பூ என்ற சொல்லே சமஸ்க்ருத வார்த்தை "Champu" யிலிருந்து பிறந்ததுதான், அந்த சொல் மசாஜைக் குறிக்கும்

5 பாம்புகளும் ஏணிகளும் விளையாட்டும் இங்கு கண்டு பிடிக்கப் பட்டதுதான் " மோக்ஷா படமு"' எனப்படும் பரம பத பட விளையாட்டு குழந்தைகளுக்கு வாழ்வின் கர்மா மோஷம் ஆகியவற்றைச் சொல்லிக் கொடுக்கக் கண்டு பிடிக்கப்பட்ட விளையாட்டு. பிற்காலத்தில் வாழ்வில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும் என்பதைக் காட்டும் மிகப் பிரபலமான விளையாட்டாக உலகெங்கும் பரவியது.

6. இந்தியாவின் இதர சில கண்டு பிடிப்புகள் எண் கணிதத்தையும் கணிதத்தில் பூஜ்யத்தையும் ஆர்ய பட்டா trigonometry, algebra, calculus. வையும் மருத்துவத்தில் காடராக் எனப்படும் கண் புரை அறுவை சிக்கிச்சையும் ப்ளாஸ்டிக் சர்ஜரியும் " யோகாவும் " நம் கண்டு பிடிப்புகள் தான்.

பெருமைக்குரியவர்கள்

50% சதவீதம் சம்பளம் பெற்றுக் கொண்ட குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர ப்ரசாத் அவர்கள் ஜனாதிபதியான போது 50 சம்பளமே பெற்றுக் கொண்டார். தனக்கு அதற்கு மேல், தேவையில்லை என்று கூறி விட்டார் அவர் பதவி வகித்த 12 ஆம் ஆண்டு இறுதியில் 25 பெற்றுக் கொண்டார்.

மனித கணினி

சகுந்தலாதேவி மனித கணினி என்ற பட்டம் கொடுத்து கௌரவிக்கப் பட்டார். அவர் 13 இலக்க எண்கள் இரண்டினை பெருக்கிக் காட்டினார். அதே போல் அவற்றை அவர் 28 வினாடிகளுக்குள் செய்து காட்டினார்

(she demonstrated the calculation of two 13 digit numbers: 7,686,369,774,870 [2,465,099,745,779 which were picked at random. She answered correctly within 28 seconds)

ஒரு குடும்பத்தில் 31 மருத்துவர்கள்

ரஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் உள்ள ஒரு குடும்பத்தில் பெரும்பாலான வர்கள் மருத்துவர்கள் அந்த குடும்பத்தில் there are 7 physicians, 5 gynecologists, 3 ophthalmologists, 3 ENT specialists, orthopedic, urologist, psychiatrists, pathologists and neurologists are there as per the reports of the Times of India.

இதர பெருமைகள்

உலகின் மிகப்பெரிய பழமையான தொடர்ச்சியாக நாகரீகம் அடைந்த நாடு

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு

ஆயிரம் ஆண்டுகால சரித்திரத்தில் இந்தியா எவர் மீதும் படை எடுத்ததில்லை

உலகில் பல நாடுகளில் மக்கள் காடுகளில் வசித்துவந்த காலத்திலேயே 5000 ஆண்டுகளுக்கு முன்னால் சிந்து சமவெளி மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரீகத்தைக் கொண்டிருந்த நாடு

இந்துக்கள் அதிக மாக வசிக்கும் மதசார்பற்ற நாடாகிய இந்தியாவில் நன்றக வழிபாடு நடக்ககூடிய 3,00,000 மசூதிகள், இஸ்லாமிய நாடுகளில் கூட இல்லாத அளவிற்கு உள்ளன.

நம் நாட்டு மொழியான சமஸ்க்ருதம் ஐரோப்பிய மொழிகளுக்குத் தாய் என்று கூறப்படுகிறது .கணினி எனப்படும் கம்ப்யூட்டரின் மென் பொருளுக்கு Software இந்த சமஸ்க்ருதம் தான் ஏற்றது என ஜூலை 1987 ல் " Forbes " magazine ல் வந்த ஒரு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது

உலகில் ஆங்கிலம் பேசக்கூடிய மிகப்பெரிய நாடு இந்தியா

உலகில் அமெரிக்கா மற்றும் ஜப்பானை அடுத்து உள் நாட்டுப் பொருட்களைக் கொண்டே அதி உன்னத கணினி யை சூப்பர் கம்ப்யூடர் செய்த நாடு இந்தியா மட்டுமே

உலகிலேயே மிக அதிகமான தபால்நிலையங்களையும் 1,55, 015 ஸ்ரீ நகர் டால் ஏரியில் மிதக்கும் தபால் நிலையத்தையும் கொண்ட நாடு நம் நாடு

உலகிலேயே ஒரு மில்லியன் மக்களுக்குமேல் வேலையில் அமர்த்தியுள்ள மிகப் பெரிய முதலாளி இந்தியன் ரயில்வேதான்.

17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வரும் வரை இந்தியா உ;லகின் மிகப்பணக்கார நாடுகளில் ஒன்றாக இருந்தது., கொலம்பஸ் இந்தியாவின் செல்வச்செழிப்பால் கவரப்பட்டு இந்தியாவுக்கு ஒரு கடல் வழியைக் கண்டு பிடிக்க முயற்சித்த போதுதான் தவறுதலாக அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்

ஹிமாலயா மலைப்பகுதியில் லடாக் பள்ளத்தாக்கில் ட்ராஸ் மற்றும் சுரு நதிகளுக்கிடையில் கட்டப்பட்டுள்ள பாலம் தான் மிக உயரமான பாலமாகும். இந்திய ராணுவத்தால் 1982 ஆம் ஆண்டுஆகஸ்ட் மாதம் தான் கட்டப்பட்டது.

10 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட திருப்பதி வெங்கடாஜலபதி கோயில் மிகப்பெரிய மத யாத்திரை செல்லக்கூடிய இடமாக விளங்குகிறது. ரோமாபுரியுன் வாடிகன் மற்றும் மெக்காவை விடப் பெரியதாக உள்ளது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 30, 000 பார்வையாளர்கள் பக்தர்கள் 6 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

பெனாரஸ் எனப்படும் வார்னாசி மிகப்பழமையான நகரமாகக் கருதப்படுகிறது . கி.மு. 500 ல் புத்த பிரான் வந்த மிகப் பழமையான இந்த நகரம் அன்றிலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக மக்கள் வசித்துவரும் ஒரு நகரமாகத் திகழ்கிறது

East or west, India is the best

1. ஏறத்தாழ 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா ஒரு தீவாக இருந்ததாம்

2. இந்தியா என்ற பெயர் " இந்தஸ்" என்ற நதியின் பெயரிலிருந்து வந்தது

3 இந்துப் பள்ளத்தாக்கு நாகரீகம் தான் உலகின் மிகப்பழமையான நாகரீகமாகும்

4. அதனால் மிகவும் பழமை வாய்ந்த தொடர்ந்து நாகரீகமாகவாழ்ந்து வரும் நாடாகும்

5. ஐ.நா. சபையின் அமைதிப்படைக்கு அதிக அளவில் படையை அனுப்பியது இந்தியாதான்

6 உலகிலேயே அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்த படியாக செயல் பாட்டில் உள்ள பெரிய ராணுவத்தை வைத்துள்ள நாடு இந்தியாதான்'

7 உலகில் அதிக இஸ்லாமிய மக்களைக் கொண்ட மூன்றாவது மிகப்பேரிய நாடு இந்தியா.

8. 12 ஆண்டுகளுக்கொரு முறை கூடும் கும்பமேளாவின் பெரும் கூட்டம் விண் வெளியிலிருந்து பார்த்தாலே தெரியுமாம்

9. உலகிலேயே அதிக மாணவர்களைக் கொண்ட மிகப் பெரிய பள்ளி இந்தியாவில் தான் உள்ளது.. லக்னொவில் உள்ள நகர மாண்டி சேரி பள்ளியில் 45,000 க்கும் அதிகமான மாணவர்கள் பயிலுகிறார்கள்.

10. இந்தியாவில் 2014 ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் 54 கோடிக்கும் அதிகமான மக்கள் வாக்களித்துள்ளனர். இந்த எண்ணிக்கை அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் மொத்த ஜனத்தொகையை விட அதிகமாகும். இவ்வாறு இந்தியாவின் பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம். மேலும் பல பெருமைகளைப் பற்றி அறிய கார்காத்தார் ஒப்புரவு வாசகர்கள் விரும்பினால் மற்று மொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

கூகுள், ஸ்கூபூப்.காம், ட்ராவெல்ஜி.காம், ஃபாக்ட்ஸ் எபௌட் இந்தியா மற்றும்யூத் கனெக்ட்.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

வாழ வழியுண்டு!

இன்றைய தலைமுறையினர் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து படித்து, பட்டம் பெற்று, தங்களின் கல்வித் தகுதிக்கேற்ற வேலையைத் தேடி அதற்கான ஊதியம் பெற்று வாழ வழி வகுத்துக்கொண்டனர். நூற்றுக்கு தொந்நூறு சதவீதம் பேர் ஆண்கள், பெண்கள் இருபாலரும் வேலைக்கு செல்கின்றனர். ஆனால் நம்மின் முந்தைய தலைமுறை, அதற்கு முன் வாழ்ந்தவர்கள் வாழ்நாளை ஆய்ந்து பார்த்தால் அரசு பணி என்பதும், தனியார் நிறுவனத்தில் வேலை என்பதெல்லாம் மிக மிகக் குறைவு. சொந்தத்தொழில் அல்லது விவசாயம் இப்படித்தான் அவர்களின் வருமானம். ஆனாலும் இன்றைய தலைமுறையினரை விட மிக மிக மகிழ்ச்சியாக அமைதியாக வாழ்ந்துள்ளனர் என்பதே நிதர்சனமான உண்மை. ஆம்பளைங்க வியாபாரம், விவசாய வேலை என வெளியில் சென்று விடுவார்கள். வீட்டு பொம்பளைங்க மாடு கறவை, பால், மோர் விற்றல் என வீட்டில் இருந்தபடியே வருமானம் ஈட்டுவார்கள். அந்த வருமானம் அவர்களுக்கு ஒரு பொழுது போக்காகவும் அமைந்தது. கையில் காசு தட்டுப்பாடு இல்லாமல் காசு புழக்கமும் இருந்தது.

மாட்டுக்கொட்டகையில் சானம் அள்ள சனம் வைத்திருப்பர். வீட்டுக்கொரு பண்ணை ஆள் உண்டு. தீபாவளி என்றால் வீட்டில் இருப்பவர்களுக்கு ஜவுளி உண்டோ இல்லையோ, வேலை செய்பவர்களுக்கு ஜவுளி வந்து இறங்கிவிடும். பலகாரம் வாங்க வருபவர்களுக்கு கொடுப்பதற்காகவே பலகாரம் செய்ய எண்ணெய் டின் வந்து விடும். பெரிய பெரிய தகர டின்களில் முறுக்கு சுட்டு அடுக்குவோம். இனிப்பு என்றால் அதிரசமும், லட்டும் கண்டிப்பாக செய்ய வேண்டும். இதற்கெல்லாம் நேர்மாறாக இன்றைய தலைமுறையினரின் நிலைமை மாறிவிட்டது. மாடும் கிடையாது கறவையும் கிடையாது. விவசாயம் கிடையாது. நிலம் இருந்தாலும் விற்று பணமாக்கி விடுகின்றனர். நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு நகர வாழ்க்கைக்கு சென்று விடுகின்றனர். குழந்தைகளை படிக்க வைப்பதற்காக என்று ஒரு காரணத்தை சொல்கின்றனர். இதெல்லாம் முடிந்து போன விஷயம். இனி திரும்ப வர போவதில்லை. மலரும் நினைவுகள்.

முந்தைய தலைமுறை, இன்றைய தலைமுறை இதற்கு இடைப்பட்ட தலைமுறையினர் அநேகமாக 50, 60 வயதுகளில் இருப்பர். என் போன்ற நிலையில் இருப்பவர்கள். ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு படிக்கும் போது பெரிய மனுஷி ஆகிவிட்டால் போதும், வீட்டில் இருக்கும் தாத்தா, பாட்டியின் கட்டளை படித்தது போதும், வயசுப் பெண்ணை வெளியில் அனுப்பக் கூடாது, காலம் கெட்டுக்கிடக்குது என்று சொல்லி வீட்டில் இருக்க வைத்து, பதினெட்டு, பத்தொன்பது வயதில் மாப்பிள்ளை பார்த்து மணம் முடித்து அனுப்பிவிடுவர். அது தான் தங்களின் தலையாய கடமை என நினைப்பர். இந்நிலை 100 க்கு 60 சதவீதம் பேர் குடும்பங்களில் நடந்தேறியது. இக்குடும்ப பெண்கள் தங்களின் கைசெலவிற்கு கணவனின் கையை எதிர்பார்த்தோ, கூட்டுக் குடும்பமாக இருந்தால் மகன் (அ) மகள் களின் கையை எதிர்பார்க்க வேண்டும். இந்நிலை இல்லாமல் நாம் நம் காலில் நிற்க வேண்டும், வருமானத்திற்கு வழி செய்து, நம் கையில் காசு பழக்கம் இருக்க என்ன செய்யலாம் ?

கறவை மாடு வைத்து பால் மோர் விற்று வருமானம் ஈட்டலாம். அதற்கு வாய்ப்பு இல்லையெனில் வீட்டிலிருந்தபடியே, அதிக முதலீடு இல்லாமல், கையில் இருக்கும் பொருள்களை வைத்து, விற்பனைக்கு பொருள்கள் தயார் செய்து வருமானம் பெறலாம். நம்முடைய தயாரிப்புகள் தரமானதாகவும், ருசியானதாகவும் இருக்க வேண்டும். இட்லி மாவு அரைத்து ஒரு கிலோ, அரை கிலோ விகிதத்தில் பாக்கெட் போடுதல், பருப்புப் பொடி, இட்லி பொடி, பூண்டு பொடி என பொடி வகைகள் தயாரித்து, 100 கி, 200 கிராம் என்ற அளவுகளில் பாக்கெட் போட்டு விற்பனைக்கு அனுப்பலாம். பலகாரம் என்ற வகையில் எள்ளடை, கைமுறுக்கு, நாடா பகோடா போன்ற கார வகைகள் செய்து நூறு கிராமிலிருந்து கிலோ கணக்கில் பாக்கெட் போட்டு விற்றால், அவரவர் குடும்பத் தேவைக்கேற்ப வாங்கி பயன் பெறுவர்.

இன்னும் ஒரு பயனுள்ள வேலை, சாப்பிடுவதற்கு உணவு தயாரித்துக் கொடுத்தல். நம்மின பெண்களின் கைப்பக்குவமே தனி ருசி. பணியிலிருந்து ஓய்வு பெற்று, அறுபது வயது தாண்டியவர்கள், தானாக சமைத்து சாப்பிட இயலாதவர்களுக்கு மூன்று வேலையும் சாப்பாடு தயார் செய்து கொடுப்பது பயனாளிக்கு பெரிய உதவியாக இருக்கும். செய்து தரும் நமக்கும் ஒரு ஆத்ம திருப்தி கிடைக்கும். Cheap & best என்றளவில் மூன்று வேலை சாப்பாட்டிற்கு நூறு ரூபாய் வாங்கினால் போதும். வாங்குபவர்களுக்கு இந்த ரூபாய் ஒரு பெரிய சுமையாக தெரியாது. பத்து வீடு தெரிந்தெடுத்து அவர்களுக்கு சமைத்துக் கொடுத்தால் மாதம் முப்பதாயிரம் வருமானம் கிடைக்கும். இதைத் தாண்டி நமக்கு தேவை இருக்க போவதில்லை. இந்த இடத்தில் இந்த வேலை நிறைவு, நம் குடும்பத்திற்கு கௌரவக் குறைச்சல் என்ற எண்ணங்களுக்கு இடம்

கொடுக்காமல், உழைத்து வாழவும், உண்மையாக, நேர்மையாக சம்பாதித்து நிம்மதியாக வாழ வேண்டும் என்ற ஒரு உயர்ந்த எண்ணம் இருந்தால் மட்டுமே போதுமானது, வாழ வழி கிடைக்கும்.

சமையல் ஒரு அற்புதமான கலை. பச்சையாக இருக்கும் பயிர்கள், காய்கறிகள், தானியங்கள் இவற்றை பக்குவமாக, சாப்பிடுவதற்கு உகந்த வகையில் ருசியாக சாப்பாடு தயார் செய்யும் அழகே ஒரு அலாதியான அனுபவம். சமைக்கும் போது சமைப்பவரின் மனநிலை சந்தோஷமாக முழு ஈடுப்பாட்டுடன், விருப்பத்தோடு சமைக்க வேண்டும். அந்த சாப்பாடே ருசியாக அமையும். நாம் சாப்பாட்டிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை குறித்து கூறும் போது தின்னே அழிந்தவன் வெள்ளாளன் என்று சொல்வார்கள். திருமண வீடு என்றால் பொண்ணு, மாப்பிள்ளை பொருத்தம் பற்றியோ, பொண்ணு, மாப்பிள்ளை வீட்டார் பற்றியோ விமர்சனம் இருப்பதை விட கல்யாண சாப்பாடு எப்படி இருந்தது என்பது குறித்த பேச்சுதான் முக்கியத்துவம் பெறும். சாப்பாடு என்றால் இப்படித்தான் இருக்கணும். அருமையான சாப்பாடு என்று வந்தவர்கள் பாராட்ட வேண்டும். பெண்ணுக்கு சீர் செய்யும் செலவை விட, சாப்பாட்டுக்கு செலவு செய்யும் தொகையே அதிகமாக இருக்கும். கண்டிப்பாக இது அவசியமான செலவு, இன்னொரு முறை செய்து பார்க்க முடியாது. விருந்து உபசரிப்பில் நம்மவரை தட்டிக்க யாராலும் முடியாது.

புகுந்த வீட்டிற்கு செல்லும் பெண்கள் தங்களின் குடும்பத்தை பராமரிப்பதில் எந்தக் குறையும் இல்லாமல், மாமியார், மாமனாருக்கு நல்ல மருமகளாக இருக்க வேண்டும். கணவனுக்கு நல்ல மனைவியாகவும், பெற்ற குழந்தைகளிடத்து அன்பையும், பாசத்தையும் காட்டுவதோடு, வளர்ப்பதில் அக்கரையும் கவனமும் காட்டக்கூடிய நல்ல தாயாக தன் குடும்ப வட்டத்தில் வலம் வர வேண்டும். இதை எல்லாம் தாண்டி, வேலைக்கு போகாத பெண்கள் வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்கும் வழியையும் அறிந்து, உழைக்கும் பெண்கள் தன் புகுந்த வீட்டிற்கு உயர்வை தேடி தருபவள் என்பது நிச்சயமான உண்மை. மருமகள் புகுந்த வீட்டின் குத்துவிளக்கு. அவளால் ஏற்றப்படும் தீபம் வீட்டிற்கு ஒளியையும், உயர்வையும் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பெண் நினைத்தால் குடும்பத்தை குப்பை மேட்டிலிருந்து கோபுரத்திற்கு கொண்டு செல்லலாம். ஆக்குவதும், அழிப்பதும் அவள் கையில்தான் உள்ளது.

குடும்ப பாசத்தை சுமந்து, சுமந்து அலுத்துப் போன மாமியார், மருமகள் வீட்டிற்கு வந்ததும், கொத்து சாவியை கொடுத்து, இன்றிலிருந்து இந்தக் குடும்பத்தின் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன் என்று மருமகளிடம் குடும்ப பாரத்தை (இறக்கி) ஒப்படைக்கும் பழக்கம் சில வீடுகளில் நடைமுறையில் உள்ளது. வாழ்க்கை வழங்கும் அத்தனை நன்மைகளையும், பண்பாடுகளையும் வழங்கும் தகுதியான மருமகளாக, புதுபெண் தன் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்க ஆயுத்தமாகிறாள்.

மக்களுக்கு பயன்படும் வகையில் எதெல்லாம் தயாரிக்க முடியும் என்பது குறித்தும், புதுமையான, வித்தியாசமான பெயரில் தயார் செய்யப்படும் உணவு வகைகள் சிலவற்றை அடுத்த இதழில் தருகிறேன்.

– இரா. திலகம், வையூர்.

Cell : 9789412635



நெல்லை மேயருக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்து மடல்

உண்மை உழைப்பு உயர்வு
நம் அரசின் தாரகமந்திரம்
உழைப்பு உழைப்பு உழைப்பு
ஓயாத உழைப்பு தலைவரின் மந்திர தந்திரம்!
அனைத்து மந்திரங்களையும் மனதில் நிறுத்தி
ஆசை, ஆசையாய், ஆர்வத்துடன் உழைத்தவன் நீ!
ஏழை எளியோருக்காக உழைத்திட்ட
ஏழை பங்காளன் நீ!
உன் உழைப்பிற்கு கிடைத்த பரிசுதான்
நெல்லை மாநகரத்தின் வணக்கத்திற்குரிய

மேயர்

பதவியில் நீ பெருமை கொள்பவன் அல்ல
பதவியே உன்னால் பெருமை கொள்கிறது
உன்னால் நம் கார்குலம் பெருமை
கொண்டு மகிழ்ந்து கொண்டாடுகிறது
உன்னை என்றும் காக்க உன்
ஸ்ரீ வேணுவ குமாரனின் வேல் சுற்றி
வந்து எந்நாளும் துணை நிற்கும்!
நீதியுடன் தொண்டு செய்வதில் ஸ்ரீராமனாக
சுற்றிவரும் சூழ்ச்சிகளை அழிப்பதில் ஸ்ரீகிருஷ்ணராக
சிறப்புடன் செயல்பட ராமகிருஷ்ணன் (எ) கிட்டுவை
வாழ்த்தி வணங்கி மகிழ்கிறது நம் கார்குலம்.

வீர.சே.ச. செந்தில்குமரன் MA.,
வீரசிகாமணி. 7338646569

"தீர்க்க சுமங்கலி பவா" - வின் மகத்துவம்

பெண்களை "தீர்க்க சுமங்கலி பவா" என்று ஆசீர்வதிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.... அதனுடைய மகத்துவம் என்ன என்பதை பார்ப்போம்....

"தீர்க்க சுமங்கலி பவா" என்ற ஆசீர்வாதத்திற்கு மனைவி கணவனிடம் 5 முறை திருமாங்கல்யம் பெற வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள். அவை பின் வருமாறு....

முதலாவது – திருமணத்தன்று

இரண்டாவது – ஷஷ்டியப்த பூர்த்தியில் (60 வயது)

மூன்றாவது – பீமரத சாந்தியில் (70 வயது)

நான்காவது – சதாபிஷேகத்தில் (80 வயது)

ஐந்தாவது – கனகாபிஷேகத்தில் (96 வயது)

திருமணம் :

முதல் திருமாங்கல்யம் திருமணத்தின் போது, உற்றார் உறவினர் ஆசியுடன் கழுத்தில் ஏறுகிறது. வாழ்க்கையின் முதல் பிணைப்பின் சாட்சியாகிறது மாங்கல்யம். அதனைத் தொடர்ந்து ஷஷ்டியப்த பூர்த்தி, பீமரத சாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம் போன்ற சடங்குகளை நடத்திக்கொள்வது என்பது எல்லோருக்கும் வாய்த்து விடுவதில்லை. இது போன்ற வைபவங்கள் பொதுவாக ஆயுள் விருத்தியைப் பிரதானமாகக் கொண்டே அமைகின்றன. மிகுந்த புண்ணியம் செய்தவருக்கே இந்த பாக்கியம் கிடைக்கிறது.

ஷஷ்டியப்த பூர்த்தி (60 வயது) :

சகல தேவர்களையும் மகிழ்விக்கும் பொருட்டு அன்றைக்கு வேத பாராயணங்களும், ஹோமங்களும், நடைபெறுகின்றன. உறவு முறைகள் கூடி நின்று சந்தோஷப்படும் போது ஷஷ்டியப்த பூர்த்தி தம்பதியரின் மனம் மகிழும். நமக்கென்று இத்தனை சொந்தங்கள் இருக்கின்றன என்கிற பூரிப்பு அவர்களின் மனதில் ஏற்படும்.

பூமி 360 பாகைகளாகவும் அந்த 360 பாகைகளும் 12 ராசி வீடுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 360 பாகைகளையும் கடந்து சென்று ஒரு வட்டப்பாதையை பூர்த்தி செய்வதற்கு, சூரியனுக்கு ஓர் ஆண்டும், செவ்வாய் ஒன்றரை ஆண்டும், சந்திரனுக்கு ஒரு மாதமும், புதனுக்கு ஒரு வருடமும், வியாழனுக்கு 12 வருடங்களும், வெள்ளிக்கு ஒரு வருடமும், சனிபகவானுக்கு 30 வருடங்களும், ராகுவுக்கு ஒன்றரை வருடங்களும், கேதுவுக்கு ஒன்றரை வருடங்களும் ஆகின்றன.

இந்த சுழற்சியின் அடிப்படையில் ஒருவர் ஜனித்து, அறுபது வருடங்கள் நிறைவடைந்த தினத்துக்கு அடுத்த தினம், அவர் பிறந்த நாளன்று இருந்த கிரக அமைப்புகளும் வருடம், மாதம் போன்றவையும் மாறாமல் அப்படியே அமைந்திருக்கும். மிகவும் புனித தினமான அன்றுதான், சம்பந்தபட்டவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் மிகவும் ஆச்சாரமான முறையில் தெய்வாம்சத்துடன் நடத்த வேண்டும்.

வேத சாஸ்திரம் படித்தவர் முன்னிலையில் ஷஷ்டியப்த பூர்த்தி நிகழ்த்தப்படும். பூஜையின் போது 84 கலசங்களில் சுத்தமான நீரை நிரப்பி வேத மந்திரங்களை உச்சரித்து ஹோமங்கள் நடைபெறும். அங்கே உச்சரிக்கப்படும் வேத மந்திரங்களின் மூலம் கலசத்தில் உள்ள நீர் புனிதம் அடைகிறது. அந்தக் கலசங்களில் உள்ள நீரைக்கொண்டு ஷஷ்டியப்த பூர்த்தி தம்பதியினருக்கு அபிஷேகம் நடைபெறும். பிறகு கணவர் இரண்டாவது முறையாக திருமாங்கல்யம் கட்டுவார்.

84 கலசங்கள் ஏன் என்று பார்ப்போம்....

தமிழ் வருடங்கள் மொத்தம் அறுபது என்பது நமக்கு தெரியும். இந்த அறுபது ஆண்டுகளுக்கான தேவதைகளையும், இந்த தேவதைகளின் அதிபதிகளாகிய.... அக்னி, சூரியன், சந்திரன், வாயு, வருணன், அஷ்டதிக் பாலகர்கள் (8) பாலாம்பிகை, அமிர்தகடேஸ்வரர், நவகிரகங்கள் (9) சேர்த்து குறிப்பதற்காகத்தான் 84 கலசங்கள்.

பீமரத சாந்தி (70 வயது) :

69 வயது முடிந்து 70 வது வயது துவங்கும் போது செய்ய வேண்டிய விசேஷமான நிகழ்ச்சிக்கு பீமரத சாந்தி என்று பெயர். சௌனகர், போதாயனர் உள்ளிட்ட மகரிஷிகள் இதற்கான விதிகளைத் தெளிவாக வகுத்திருக்கிறார்கள். நமது ஆயுளின் ஒவ்வொரு கலக்கட்டத்திலும் வெவ்வேறு அதிபதிகள் கட்டுப்பாட்டில் வாழ்கிறோம்.

பிரபவ முதல் விஷு வரையான 15 ஆண்டுகளுக்கு அக்னி பகவானும், சித்ரபானு முதல் துன்முகி வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு சூரிய பகவானும், ஹேவிளம்பி முதல் விரோதிகிருது வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு சந்திரபகவானும், பரிதாபி முதல் அட்சய வரையுள்ள 15 ஆண்டுகளுக்கு வாயு பகவானும்.... அதிபதிகள் ஆவார்கள். தன்னுடைய 60–வது வயதில் ஐம்புலன்களால் வரும் ஆசையை வென்ற மனிதன் 60 வயதில் இருந்து தான் தனது என்ற பற்றையும் துறக்க முயல வேண்டும். தன்னுடைய மகன், மகள், சொந்த பந்தம் என்ற கண்ணோட்டம் மறைந்து உற்றார், உறவினர் அனைவரும் தன் மக்களே.... எல்லோரும் ஒரு குலமே என்கிற எண்ணம் 70 வயது நிறைவில் பூர்த்தி ஆக வேண்டும். தான், தனது என்ற நிலை மறந்து அனைவரையும் ஒன்றாகக் காணும் நிலை பெற்றவர்களே 70–வது நிறைவில் பீம ரத சாந்தியைக் கொண்டாடும் தகுதியைப்பெறுகிறார்கள். இப்போது திருமாங்கல்யத்தை மூன்றாவது முறையாக மனைவி கழுத்தில் கட்டுவார்.

சதாபிஷேகம் (80 வயது) :

ஒவ்வொரு உயிரிலும் உறையும் இறைவன் பேச பழகிக் கொள்ள வேண்டும். அவருக்கு ஜாதி, மதம், இன பேதம் எதுவும் இருக்காது. இப்படி அனைத்திலும் இறைவனாகக் காணும் நிலையை ஒரு மனிதன் 80 வயதில் பெறும் போதுதான் சதாபிஷேகம் (ஸஹஸ்ர சந்திர தர்ஸன சாந்தி ஆயிரம் பிறை கண்டவன்) காணும் தகுதியை அவர் அடைகிறார்.

80 வயது 8 மாதம் முடிந்த நிலையில், ஆயிரம் சந்திர தரிசனம் கண்டவர்களுக்கு சதாபிஷேகம் நடத்துவர். இவர்கள் தங்களின் 80 வயதில், மாதம் ஒன்று வீதம் 960 தரிசனமும், இந்த 80 ஆண்டுகளுக்குள் 22 ஆண்டுக்கு ஒன்று வீதம் 32 தரிசனங்களையும் அதிகம் காண்பர். மேலும் 8 மாதங்களில் 8 தரிசனம் கண்டதும், ஆயிரம் தரிசனம் பூர்த்தியாகிறது. அப்போது தான் சதாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்.

சதாபிஷேக தம்பதிகள் இன்சொல்லும், பணிவுடைமையும் இயல்பாகக் கொண்டவர்கள். மற்றவர்களுக்கு உதவுவது என்பது இவர்களது கைவந்த கலை ஆகும். இளமை குன்றாதவராக, தளர்நடை இல்லாமல், இன்முகத்தோடு வாழ்ந்து வருபவர்கள், அவர்களைப் பற்றி கூறவேண்டுமாயின் நாள் போதாது. இளவயது முதல் எதைச் செய்தாலும் அவற்றில் நற்பலன்கள் விளைந்திட வேண்டுமென்று, எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்றும் நினைப்பவர்கள். நான்காவது திருமாங்கல்யம் சதாபிஷேகத்தில் மகன், மகள், பேரன், பேத்திகள் என 2 தலைமுறை வாரிசுகளின் மகிழ்ச்சி ததும்ப நான்காவது முறையாக திருமாங்கல்யம் அணிவிக்கிறார்.

கனகாபிஷேகம் (96 வயது) :

கடவுள் விக்கிரகம் அல்லது மகான் போன்றோருக்கு பொன் நாணயங்களால் செய்யும் அபிஷேகம்.

இறையோடு இரண்டறக் கலந்து இறைச் சிந்தனை கொண்ட தம்பதிகளுக்கு தன் சீமந்தப் புத்ரனுக்குப் பிள்ளை (பேரன்) பிறந்து அவனுக்கும் புத்ரன் (பொள்ளுபேரன்) பிறக்க வேண்டும். அவன் கையால் அபிஷேகம் கிடைத்தால் கனகாபிஷேகம். இதுவே 'அஷ்டோத்தர சதருத்ர கலசாபிஷேகம்' என்றும் சொல்லப்படும். மற்றும் தனக்கென்று வாரிசு இல்லாதவர்கள் தனது 96–வது வயதில் கனகாபிஷேகம் செய்து கொள்ளலாம்.

இவர்கள் செயற்கரிய செயல்களை செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தமக்கு சம்பந்தப்பட்டவைகளையும் தாம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விடுபவர்கள்.

இந்த ஜென்மாவின் ஐந்தாவது திருமாங்கல்யம் கணவரிடம் இருந்து மனைவி பெறுகிறார் என்றால் மிக நிறைவான வாழ்க்கை என்பதின் உச்சம் இதுதான். இந்த பெரும்பேறு எல்லா பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே "தீர்க்க சுமங்கலி பவா" என்ற ஆசியின் மகத்துவம்.

இத்தனை பாக்கியங்களும் ஒருவர் வாழ்வில் கிடைத்துவிட்டால், அவர் நிச்சயம் அதிர்ஷ்டசாலி தான். மேலும் "தீர்க்க சுமங்கலியாக வாழ்க" என்ற ஆசிக்கு உரியவளாகவும் மாறுகிறாள். "தீர்க்க சுமங்கலி பவா" என்ற ஆசி நம்மை நீண்ட நெடுங்காலம் நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வை தொடர்வோம்....!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை–90. செல் : 9943702054

புவிசார் குறியீடு

(Geographical Indication - GI Tag)

Dr. D. Kalyanakumar, Trichy-18.

Geographical Indication

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சிறப்பான பொருட்கள் இருக்கும். அது மற்ற ஊரில் உள்ள பொருட்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும். அத்தகைய சிறப்பு மிக்க பொருட்களுக்கு அங்கீகாரம் செய்து கௌரவிக்கும் வகையில் கொடுக்கப்படுவது தான் புவிசார் குறியீடு ஒரு பொருள் உருவாகும் இடத்தின் பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துரைக்க மற்றும் அடுத்த தலைமுறைக்கு அதை பத்திரமாக கொண்டு சேர்க்க நினைத்து இந்திய அரசால் அறிமுகம் செய்யப்பட்டதுதான் புவிசார் குறியீடு பாதுகாப்புச் சட்டம். உலக வணிக அமைப்பில் (WTO) உறுப்புநாடான இந்தியாவில் புவிசார் குறியீடுகள் சட்டம் பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்டம்) ஆண்டு 1999 நிறைவேற்றப்பட்டு செப்டம்பர் 2003–ல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு இந்தியாவில் தனித்துவமாக இருக்கும் பொருட்களுக்கு இன்று வரை புவிசார் குறியீடு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊரில் இருக்கும் அந்த ஊரின் சிறப்பான பொருட்களுக்கு புவிசார் குறியீடு வாங்கிக் கொள்ளலாம்.

இந்தியா பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பாரம்பரியங்கள் கொண்ட இடமாகும். இங்குள்ள ஒவ்வொரு மாநிலமும் அதன் தனித்துவமான விஷயங்களுக்குப் புகழ்பெற்றது. இத்தகைய தனித்துவமான தயாரிப்புகளை ஒரே மாதிரி உருவாக்குதல் மற்றும் தவறாக பயன்படுத்துவதில் இருந்து பாதுகாத்து மேம்படுத்த, புவிசார் குறியீடு என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த குறியீடு நம்பகத்தன்மையின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. சில தயாரிப்புகள் அவற்றின் சொந்த இடத்துடன் பிரத்யேகமாக தொடர்புள்ளதாகக் காட்டுவதை இந்தக் குறியீடு உறுதி செய்கிறது. ஒரு பொருளுக்கு இத்தகைய அந்தஸ்து கிடைக்க, அந்தத் தயாரிப்பின் புவியியல் தோற்றம், தனித்துவமான தரம், நற்பெயர் மற்றும் பிற குணாதிசயங்கள் முக்கியக் காரணங்களாகப் பார்க்கப்படுகின்றன. இது அந்தப் பொருள் உருவாகும் இடத்தின் காலநிலை, மண், பாரம்பரியம் மற்றும் மனிதர்களின் நிபுணத்துவம் போன்ற காரணிகளின் விளைவாக இருக்க வேண்டும். இவற்றின் அடிப்படையிலேயே ஒரு பொருளுக்கு புவிசார் அந்தஸ்து வழங்கப்படுகிறது.

உதாரணத்துக்கு வாழைப்பழத்தையே எடுத்துக் கொள்வோம். எல்லா வாழைப்பழத்தையும் கவுண்டமணியிடம் செந்தில் சொல்வதைப் போல இதான்னே அது என்று சொல்லி விட முடியாது. திண்டுக்கல் அருகேயுள்ள சிறுமலை வாழைப்பழத்துக்கு தனிச்சுவை, தன்மை, ஆரோக்கிய குணங்கள் உள்ளன. அப்பழத்துக்கான ஈர்ப்பு அதிகமாக இருப்பதால் தான், அதற்கு 'புவி சார் குறியீடு' கிடைத்துள்ளது.

இதன் மூலமாக போலியாக தயாரித்து விற்பது தடுக்கப்படுவதானது மட்டுமின்றி அந்தந்த ஊரில் உள்ள தொழிலாளர்களுக்கு பயனுள்ளதாகவும் இருக்கும். இதனால் அப்பொருளை வாங்குவதற்கு அந்த ஊரைத் தேடி மக்கள் வருவார்கள். இதனால் அப்பொருளின் உற்பத்தி பெருகி ஏற்றுமதியும் அதிகரிக்கும். மேலும் அந்த குறிப்பிட்ட பொருளுக்கும், அது உருவாகும் ஊரில் உள்ள மக்களுக்குமான வரலாற்றுப் பிணைப்பு என்றும் மாறாமல் பாதுகாக்கப்படும்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள பொருட்களுக்கு தான் அதிகமாக புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இந்தியாவில் புவிசார் குறியீடு அந்தஸ்து வழங்கப்பட்ட 430 பொருட்களில் 58 பொருட்கள் தமிழகத்தைச் சேர்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் தற்போது தமிழகத்தைச் சேர்ந்த மேலும் 3 பொருட்களுக்கு புவிசார் அந்தஸ்து கொடுக்கப்பட்டு தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளது. இந்தியாவில் முதன் முதலாக டார்ஜிலிங் தேநீரானது 2004–05–ஆம் ஆண்டில் புவிசார் குறியீட்டைப் பெற்றது.

இதுவரை புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் சேலம் சுங்கடி, காஞ்சிப்பட்டு, பவானி, ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலை, கோவை வெட் கிரைண்டர், தஞ்சாவூர் ஓவியம் தஞ்சாவூர் ஓவியத்தட்டு, நாச்சியார், கோயில் விளக்கு, ஆரணிப்பட்டு, கோவை கோரா பருத்திப் புடவை, சேலத்துப்பட்டு, கிழக்கிந்திய தோல் தொழிற்சாலை, தலையாட்டி பொம்மை, ஈத்தாமொழி, நெட்டை தென்னை, யூகலிப்டசு தைலம், விருப்பாச்சி வாழை, சிறுமலை மலை வாழைப்பழம், தோடா பூந்தையல், பத்தமடைபாய், தஞ்சாவூர் வீணை, ஈரோடு மஞ்சள், மதுரை மல்லி, திருவில்லிபுத்தூர் பால்கோவா, மகாபலிபுரம் கற்சிற்பம், சுவாமிமலை வெண்கலச் சிலை, சீரக சம்பா அரிசி, பழநி பஞ்சாமிர்தம், கொடைக்கானல் மலைப்பூண்டு, கோவில்பட்டி கடலை மிட்டாய், அரும்பாவூர் மர வேலைப்பாடுகள், நரசிங்கம்பேட்டை நாகசுரம், வேலூர் முள்ளு கத்தரிக்காய், ராமநாதபுரம்

குண்டு மிளகாய், தஞ்சாவூர் நெட்டி வேலைப்பாடு, கன்னியாகுமரி கிராம்பு, மணப்பாறை முறுக்கு, மார்த்தாண்டம் தேன், மயிலாடுதுறை தைக்கால் பிரம்பு வேலைப்பாடு, ஆத்தூர் வெற்றிலை, கம்பம் பன்னீர் திராட்சை, சோழவந்தான் வெற்றிலை, நகமம் காட்டன் சேலை, மயிலாடி கல் சிற்பம், சேலம் ஜவ்வரிசி, மானாமதுரை மண்பாண்டம் ஊட்டி வர்க்கி, பண்ருட்டி பலாப்பழம் முதலியன. சமீபத்தில் திருவண்ணாமலை ஐடேரி நாமக்கட்டி, கன்னியாகுமரி மட்டி வாழைப்பழம் மற்றும் திருநெல்வேலி வீரநல்லூர் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் செடிபுட்டா புடவை உட்பட 3 பொருட்களுக்கு புவிசார் குறியீடு அந்தஸ்து வழங்கப்பட்டது.

உணவுப் பொருள்கள் கைவினைப்பொருட்கள், தொழில்துறை பொருள்கள், பானங்கள் மற்றும் விவசாய தயாரிப்புகளுக்கு புவியியல் குறிச்சொற்கள் வழங்கப்படுகின்றன. இதனால் அப்பொருள்களுக்கு உரிய அறிவுசார் பாதுகாப்பு கிடைக்கிறது. இப்பொருள்களின் தரம் குறைந்தாலோ, கலப்படம் செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

புவிசார் குறியீடு பெறுவதற்கு எப்படி பதிவு செய்வது ?

முதலில் புவிசார் குறியீடு அந்தஸ்து வாங்க விரும்பும் தயாரிப்பைக் கண்டறிந்து, அவற்றை உற்பத்தி செய்யும் சங்கத்தில் இணைய வேண்டும். சங்கம் எதுவும் இல்லை எனில் புதிதாக ஒன்றை ஒருவாக்க வேண்டும். இதுதான் விண்ணப்பத்தின்போது அந்தப் பொருளின் மீதான நம்பகத்தன்மையை அதிகரிக்கும் பொருள் குறித்த விரிவான ஆய்வு நடத்தி, அதன் வரலாறு, பாரம்பரியம், தனித்துவமான குணங்கள் குறிப்பிட்ட பகுதியுடனான தொடர்பு உள்ளிட்ட அனைத்தையும் ஆவணப்படுத்த வேண்டும். அதன் பிறகு புவிசார் குறியீடு வழங்கும் Geograpical Indications Registry-ஐ தொடர்பு கொண்டால், நீங்கள் எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என்பது குறித்த அனைத்தையும் அவர்கள் சொல்வார்கள். ipindia.gov.in இணையதளத்திற்குச் சென்று Contact Us பக்கத்தில் நீங்கள் அவர்களைத் தொடர்புகொள்ள முடியும். அவர்களிடமே பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தைப் பெற்று அனைத்தையும் பூர்த்தி செய்து அந்த இணையதளத்திலேயே பதிவு செய்யலாம். இதற்கான பதிவுக் கட்டணமாக ரூபாய். 5000 செலுத்த வேண்டும் இறுதியாக உங்களுடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்தால், குறிப்பிட்ட அந்த பொருளுக்கான புவிசார் குறியீடு அந்தஸ்து வழங்கப்படும்.

பொதுவாக இப்படி ஊர் பெயருடன் தயாராகும் பொருட்களுக்கு என்று ஒரு தனி விலை சந்தையில் கிடைக்கும். அதற்கு காரணம் அந்த பொருளின் தரம் மற்றும் நம்பகத் தன்மை இப்படி புவிசார்க் குறியீடுகளைக் கொடுப்பதால் மற்ற யாரும் அந்த பெயரைப் பயன்படுத்தி போலி பொருட்களை விற்க முடியாது. இப்படி பொருட்களுக்கு புவிசார் குறியீடு கொடுப்பதால் அந்த பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு ஒரு பொருளாதார பாதுகாப்பு கிடைக்கிறது. இந்த புவிசார் குறியீட்டை யாராவது தவறாகப் பயன்படுத்தினால் அவர்கள் மீது வழக்கே தொடுக்கலாம். ஒரு முறை வழங்கப்படும் புவிசார்க் குறியீடு 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். அதன் பின் மீண்டும் நீட்டிப்பு செய்யப்படும். குறிப்பாக புவிசார் குறியீடு உலக வர்த்தக அமைப்புச் சட்டங்களுக்கு உட்பட்டது.

காப்புரிமை, வர்த்தகக் குறியீடு போன்றவற்றை ஒரு தனி நபர் அல்லது நிறுவனங்கள் உரிமையாக்கிக் கொள்ளலாம். ஆனால் புவிசார் குறியீடு என்பதை, எந்த ஒரு தனி நபரும் சொந்தம் கொண்டாட முடியாது. புவிசார் குறியீடு வாங்குவது பெரிய சவால் தான். ஆனால் அதை வைத்து, உங்களின் வர்த்தகத்தை, வாழ்வாதாரத்தை எப்படி நீங்கள் மேம்படுத்தப் போகிறீர்கள் என்பது தான் அதை விடப் பெரிய காரியம். ஆனால் இன்றைய மின்னனு உலகில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களை பிரபலப்படுத்தி, சர்வதேச சந்தையைக் கைப்பற்றுவது மிக எளிதான வழிமுறைதான் இதைப்பெற்றுவிட்டால், விளம்பரப்படுத்துதல், சந்தைப் படுத்துதல், ஏற்றுமதி தொடர்பு எல்லாமே இலகுவாகிவிடும். அது உங்களின் வர்த்தகத்தைப் பெருக்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஐரோப்பாவில் நடத்தப்பட்ட ஆய்வில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் தயாரிப்புச் சங்கிலியில் உள்ளோரின் ஒட்டுமொத்த பொருளாதாரம் 10 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் நல்லதைத் தேடி வாங்குவதற்கு இங்கே மட்டுமில்லை உலகம் முழுவதும் பல கோடி மக்கள் பரிதவிப்போடு காத்திருக்கிறார்கள். குறிப்பாக வம்சாவளி இந்தியர்கள், நம் தமிழ் மண்ணின் தடங்களை தயாரிப்புகளை நேசிக்கிற தமிழர்கள் உலகெங்கும் பரவிக்கிடக்கிறார்கள். அவர்களுக்கு நம்மூர் பொருளின் மகத்துவம் தெரியும். அதை வாங்குவதால் ஏற்படும் நன்மைகள் புரியும். இந்த ஆர்வமும், உலகளாவிய ஆதரவும் தான், புவிசார் குறியீடு பெற்ற பொருட்களுக்கு காசில்லா விளம்பரம்.

இதே போல பல பாரம்பரியமிக்க பொருள்கள் இக்குறியீடு பெற்று உலகளவில் செல்ல வேண்டும் விவசாய இடுபொருள்கள் மற்றும் பாரம்பரிய பொருள்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதால் இத்தொழிலில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். ஒன்று மட்டும் இருந்தால்தான் மதிப்பு ஒன்றுக்கு மேல் இருந்தாலே சாய்ஸ்தான் என்பார்கள். ஒன்றுக்கு மேல் அதிக பொருள்கள் வரும்போது நல்ல பொருள்களைக் கூட புறக்கணித்துவிடுவோம். அவ்வாறு இல்லாமல் பாரம்பர்ய தனித்துவமான அடையாளத்தை ஆக்கபூர்வமாக ஒரு பொருளுக்கு அளிப்பதுதான் புவிசார் குறியீடு (Geographical indication) தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் கொடுக்கிறது. இந்திய அரசின் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அறிவுசார் சொத்துரிமை துறை புவிசார் குறியீடு அங்கீகாரத்தை வழங்கி வருகிறது. (This tag is issued by the Geographical Indication Registry under the Department of Industry Promotion and Internal Trade, Ministry of commerce and Industry)

உலகம் முழுவதும் தமிழர்கள் வசிக்கும் நாடுகளில் இட்லி பயன்பாடு உள்ளது. இட்லி மட்டுமல்லாமல் அதிகம் விரும்பி சாப்பிடக்கூடிய செட்டிநாடு கைமுறுக்கு சீடை, ராமநாதபுரம் பனைவெல்லம், கோவில்பட்டி சீவல், பட்டறை கருவாடு ஆகியவற்றுக்கு புதிதாக புவிசார் குறியீடு பெறத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்துக்கும் விரைவில் முறைப்படி விண்ணப்பித்து புவிசார் குறியீடு பெறப்படும்.

தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதன் மூலம் அந்த பொருட்களுக்கு சந்தையில் தேவை அதிகரிக்கும். இதன் விளைவாக அவற்றின் உற்பத்தி அதிகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு உருவாகும்.

* முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.
- கார்காத்தார் ஒப்புரவு

சங்கப்பலகை

பங்கு பெறுவோர்: ஆண்டாள், பிரியா, மீனா, சித்ரா, வசுமதி, கோமதி, தீபிகா, கௌரி.

இடம்: எலியட்ஸ் கடற்கரை

மகளிர் மாலை சுமார் 5 மணி அளவில் கடற்கரையில் குழும, அவர்களின் அரட்டைக் கச்சேரி ஆரம்பமானது.

கௌரி : ஆண்டாளக்கா! புரட்டாசி மாச சிறப்புகளைக் கூறுங்க! எனக்குத் தெரிஞ்சவரை நவராத்திரி இந்த மாதம் தான் வரும்.

ஆண்டாள் : புரட்டாசி மாசம் பெருமாளுக்கு மிகவும் விசேஷம் ஆனது. அம்பிகைக்கும் உகந்த மாதம். முத்தேவியரையும் வணங்கும், பெண்களின் பண்டிகையான நவராத்திரி இம்மாதத்தில்தான் கொண்டாடப்படுகிறது. முன்னோர்களை வழிபடும் மஹாளய அமாவாசை மிக முக்கியமான தினமாகும்.

சித்ரா : அக்கா! புரட்டாசி சனிக்கிழமை இல்லங்களில் தளிகை போடுவார்களே!

மீனா : ஆமா! ஆமா! மஹாளய அமாவாசை பற்றிக் கூறுங்க.

கோமதி : நான் சொல்றேன்பா! மறைந்த நம்முடைய முன்னோர்கள் ஒன்று சேரக் கூடும் காலமே மஹாளயபட்சம் என்பர். மஹாளய அமாவாசை அன்று பக்தியுடனும், நம்பிக்கையுடனும் முன்னோர்களுக்கு, அரிசி பாயசம், வடை போன்றவற்றை நைவேத்தியம் செய்து வணங்குவதால், நமக்கும், நமது சந்ததியினருக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும் என்பது நம்பிக்கை.

பிரியா : நான் சின்னதா இருக்கும்போது, புரட்டாசி சனிக்கிழமைகளில், குழந்தைகள் நாமம் போட்டுக் கொண்டு, கையில் சொம்புடன் வீடு, வீடாக நாராயணமூர்த்திக்கு கோவிந்தா! கோவிந்தா! கோபாலா! கோபாலா!ன்னு கூவிக்கொண்டு வந்து அரிசி, காசு வாங்கிச் செல்வது நினைவுக்கு வருகிறது.

சித்ரா : ஏதாவது ஒரு புரட்டாசி சனிக்கிழமையில் தளிகை போடுவது இப்பக்கூட வழக்கத்தில் உள்ளது. சில வீடுகளில் உறவினர்கள் ஒன்று கூடியும் படைக்கின்றனர். சர்க்கரைப் பொங்கல், புளிச்சாதம், தேங்காய்சாதம், எள்ளுச்சாதம், தயிர்சாதம், வடை, சுண்டல், அவல் பாயசம், பானகம், துளசித் தீர்த்தம், முருங்கைக்கீரை துவட்டல் நைவேத்தியம் செய்வர். வீட்டில் அனைவரும் திருமண் அணிந்திருப்பர்.

வசுமதி : புரட்டாசி மாச சர்வ ஏகாதசிக்கு 'அஜா ஏகாதசி' என்று பெயர். இன்று விரதமிருந்து பெருமாளை வழிபடின், குடும்ப ஒற்றுமை வளரும் என்பார்கள். திருப்பதியில் புரட்டாசி மாசம் ஏகக் கூட்டமாக இருக்கும். பிரம்மோற்சவமும் நடக்கும்.

ஆண்டாள் : இந்த ஆண்டு நவராத்திரி அக்டோபர் 3ஆம் தேதி வியாழனில் தொடங்கி 12ஆம் தேதி சனிக்கிழமை விஜயதசமியுடன் முடியுது. அநேக வீடுகளில் நவராத்திரி கொலு வைத்து தோழிகளையும், சொந்தங்களையும் வரவேற்று, இனிப்பு, சுண்டல், வெற்றிலைப் பாக்கு, பழம், தேங்காய், சீப்பு, கண்ணாடி, மஞ்சள், குங்குமம், காசு, ரவிக்கைத்துணியுடன் இப்போது ஒரு பரிசுப் பொருளும் அளித்து உபசரிப்பார்கள். தினம் ஒரு சுண்டல் தேவிக்குப் படைப்பர்.

தீபிகா : வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் கொலுவைப் பார்க்க நமக்கு அறிமுகம் இல்லாத குழந்தைகளும் வந்து, சுண்டல் வாங்கிச் செல்வர். கோவில்களில் அழகான பெரிய பொம்மைகளுடன் கூடிய கொலுவும், இறைவிக்கு அருமையான அலங்காரமும் நமது கண்களுக்கு விருந்தாகும்.

ஆண்டாள் : சரஸ்வதி பூஜையன்று வடை, பாயசம், சுண்டல் போன்றவைகளை காலையிலும், மாலையில் பால் கொழுக்கட்டையையும் சரஸ்வதிதேவிக்குப்படைப்பர்.காலையில்படைப்பதற்கு முன் வீட்டில் உள்ள கதவுகள், பொருட்களுக்கு (T.V. Fridge, பீரோ) பொட்டிட்டு, புத்தகங்கள், எழுதுகோல், கத்தி, அரிவாமணை போன்றவைகளையும் வைத்து, மஞ்சள், குங்குமமிட்டு படைப்பது வழக்கம். அடுத்த நாள் விஜயதசமியன்று பால், பழம் வைத்து படைத்த பின், குழந்தைகளை புத்தகத்தை எடுத்து கட்டாயம் படிக்கச் சொல்வர். அதுபோன்றே நடனம், பாட்டு, இசைக்கருவிகளைக் கற்பவர்களும் அன்றைய தினம் குருவை வணங்கி, தனது கலையை பயிற்சி செய்வர்.

சித்ரா : எங்கள் கிராமத்தில் விஜயதசமியன்று பெருமாள் ஆற்றங்கரைக்கு எழுந்தருளி அம்பு போடுவார். இராமர் இராவணனை யுத்தத்தில் வெல்வதாக ஐதீகம். நம்மில் முடிந்தவர்கள் குடந்தை சென்று கோவில்களில் கொலுவைக் கண்டு ரசித்து வருவோம்.

ஆண்டாள் : மஹாளய அமாவாசை அன்று கடலில் நீராடுதல் மிகவும் புண்ணியம் என்று அக்காலத்தில் கூறுவர். இம்மாதம் 15ஆம் தேதி அறிஞர் அண்ணாவின் 115ஆம் வருட ஜெயந்தி வருகிறது என படித்தேன்பா. அவருக்கு நமது மாயூரம் மிகவும் பிடித்த ஊர் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். வேறென்ன topic பேசப் போறோம் ? ஆரம்பிங்கப்பா!

வசுமதி : சிங்கப்பூர் பல்கலைக்கழகம் 13738 நபர்களிடம் மேற்கொண்ட ஆய்வில், தினமும் பழங்கள் சாப்பிடுபவர்களுக்கு மற்றவர்களை விட மன அழுத்தம் தொடர்பான நோய்கள் 21% குறைவாக ஏற்படுவதாக கண்டறிந்துள்ளது.

கௌரி : நீ பழம் குறித்து பேசினதும், அது குறித்த ஒரு செய்தியைத் தொடருகிறேன். பேரிக்காயை ஏழைகளின் ஆப்பிள் என்பர். உலகில் 3000க்கும் மேற்பட்ட பேரிக்காய் வகைகள் உள்ளன. ஒவ்வொரு வகையும் தன் தனித்துவமான சுவை, அமைப்பைக் கொண்டுள்ளன. இதில் வைட்டமின் சி, பொட்டாசியம், நார்ச்சத்து உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்துள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. மத்திய ஆசியாவின் மலைத்தொடரான தியான்ஷான் மலை அடிவாரத்தில், இன்றைய மேற்கு சீனாவில் இம்மரம் தோன்றியதாக கருதப்படுகிறது. உலகின் மிகப்பெரிய பேரிக்காய் மரம் அமெரிக்காவில் உள்ளதாம்.

கோமதி : நாங்க இப்பல்லாம் வாரத்தில் இரண்டு நாள் காலை உணவாக ஓட்ஸ் சாப்பிடுறோம். உடல் பருமனைக் குறைக்க தரப்படும் மருந்தைப் போலவே ஓட்ஸில் உள்ள சத்துக்கள் நம் உடலில் வேலை செய்யுமென அரிசோனா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஓட்ஸில் உள்ள சில நார்ச்சத்துக்கள் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை அகற்றுவதே, உடல் மெலிவதற்கு காரணம் என்றும் கண்டுபிடிச்சிருக்காங்க!

பிரியா : என்ன ஒரு கொடூரம் ? கல்கத்தாவில் அந்த இளம் பெண் மருத்துவருக்கு நடந்த கொடுமையைத் தாங்கவே முடியலை. எப்படி இப்படி எல்லாம் மிருகத்தனமா இல்ல! இல்ல! அசுரத்தனமா ஒருத்தன் நடந்துப்பான் ? கோர்ட், கேஸ் என வருடங்கள்தான் போகும். அந்த பொண்ணுக்கு என்ன நீதி கிடைக்கும் ?

மீனா : இவனுக்கு எல்லாம் அரபு நாடுகள் போல தண்டனை கொடுத்தால்தான், மற்ற காமுகன்களுக்கெல்லாம் ஒரு பயம் வரும். நமது ஜனாதிபதி அவர்களே மிகவும் கவலைப்பட்டு பேசியிருக்காங்க!

சித்ரா : ஆமாம்! அதுமட்டுமல்ல; வங்காள முதல்வர் திருமதி. மம்தா பானர்ஜி அவர்கள் ஒரு வாரத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

தீபிகா : இந்த ஆண்டு பருவமழையும் வழக்கத்திற்கதிகமாக பெய்து, மக்களுக்கு சிரமத்தை அளித்துள்ளதே! கேரளாவில் வயநாட்டின் சீரழிவைக் கண்டு மனம் கலங்குகிறது.

கௌரி : வயநாட்டில் மக்களைக் காப்பாற்ற பாடுபட்ட ராணுவத்தினரையும், தீயணைப்பு படை வீரர்களையும், பொதுமக்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதுவும் ஒரு குடிசையில் மாட்டிக்கொண்ட மூன்று குழந்தைகளை இராணுவ வீரர்கள் காப்பாற்றிய செய்தியில், அந்த குழந்தைகளின் ஏக்கமான முகங்கள் இன்னமும் மனதில் நிழலாடுகிறது.

ஆண்டாள் : போதும்பா! இந்த மாதிரி செய்திகள் மனதை மிகவும் கனக்க செய்கிறது. வேறேதாவது பேசுவோம். இந்த மாசம் எந்த கோவில் ? யார் சொல்லப் போறீங்க ?

தீபிகா : நான் சொல்றேன்கா! கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் காவிரியின் வடகரையில் உள்ள திருத்தலம் கொட்டையூர். பிரளயத்தின் போது உடைந்த கலசத்திலிருந்த அமுதத்துளி இக்கோவில் திருக்குளத்தில் விழுந்ததாம். கிழக்கு நோக்கி 5 நிலை கோபுரமும், இரண்டாம் கோபுரம் 3 நிலையும் கொண்டுள்ளது. மையப் பகுதியில் கோடீஸ்வரர் அருள்பாலிக்கிறார். இறைவி பந்தாடுநாயகி. ஏரண்ட முனிவர், மார்க்கண்டேயர், பத்திரயோகியார் வழிபட்ட தலம். அத்திரி முனிவர் மரபில் வந்த ஏரண்ட முனிவர், ஏரண்டம் எனும் ஆமணக்கு மரத்தினடியில் தவம் செய்ததாக வரலாறு. ஆமணக்கு காடாக இருந்தமையாலும், ஈசன் சுயம்புவாக ஆமணக்குச் செடியின் கீழ் இருந்ததாலும், இத்தலம் கொட்டையூர் ஆயிற்று. பத்திரயோகி முனிவர் கடுந்தவத்தில் இருந்ததை அறியாத ஒரு அரசன், அவர் அவனை அவமதித்ததாக எண்ணி, அவர் முன் தகாத செயல்களைச் செய்ய, கண் விழித்த முனிவர் அவனைப்

பிசாசாக சபித்து விட்டார். பின்னர் மனம் வருந்திய முனிவர், கோடி மூர்த்திகளைத் தரிசனம் செய்து இப்பழியிலிருந்து விடுபடுவேன் என உறுதிபூண்டு, கோவில், கோவிலாகச் சென்று வழிபட்டு வந்தார். இக்கோவிலில் அமுதக் கிணற்றில் நீராடி, மூலவரைத் தரிசித்தபோது, ஈசன் அசரீரியாக 'கோடி இறைவனைத் தேடி நடக்க வேண்டாம்; இத்தலத்தினைத் தரிசித்ததே கோடி லிங்கங்களுக்குச் சமம்' என்று கூறி அருளினார். லிங்க மேனியில் முள், முள்ளாகத் தெரிவது கோடி லிங்கங்களாகும். 1300 வருடங்கள் பழமையான இக்கோவிலில் வணங்கினால் கோடி லிங்கங்களைத் தரிசித்த புண்ணியத்துடன், இங்கு செய்யப்படும் புண்ணியம் மற்றும் பாவம் இரண்டுமே கோடி மடங்காகும் என்பது ஐதீகம்.

வசுமதி : OK ப்பா! நேரமாயிட்டுது! ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைக் கூறி நமது அரட்டையை முடிப்போம். நமது தேசத்தின் குடியரசுத் தலைவர் Dr. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்தநாளை ஆசிரியர் தினமாக கொண்டாடி வருகிறோம். கல்லூரி ஆசிரியராக பணிபுரிந்த ஒருவர், நாட்டின் தலையாய பதவிக்கு வந்ததே ஆசிரியர்களுக்கு பெருமைதானே!

மீனா : ஆமாம்பா! நமது இளைய தலைமுறையாம், வருங்காலத் தூண்களை வடிவமைக்கும் சிற்பிகள் தான் ஆசிரியர்கள். நாட்டின் முன்னேற்றத்தில் அவர்களுக்கு பெரும் பங்கு உள்ளது. எங்கள்பள்ளியில் ஆசிரியர் தினத்தன்று, பத்தாம்வகுப்பு மாணவ, மாணவிகள் ஆசிரியர்களாக அனைத்து வகுப்புகளையும் நடத்துவர். ஆசிரியர்களுக்கு அன்றைய தினம் மாணவர்களின் கலை நிகழ்ச்சியுடன், மதிய விருந்து அளிப்பது வழக்கம். நம்மை உருவாக்கிய, உருவாக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நமது மனப்பூர்வமான ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைக் கூறி விடை பெறுவோம்.

ஆண்டாள் : அடுத்த மாசம் அண்ணாசதுக்கத்தில் சந்திப்போம்! இம்முறை புதுமருந்து, வியாதி என ஒன்றுமே கூறலை. அடுத்த சந்திப்பிலாவது ஏதாவது சொல்லுங்க!

அனைவரும் ஆமோதித்து, கடற்கரையின் தேங்கா, மாங்கா, பட்டாணி சுண்டலை ரசித்த பின் கலைந்து சென்றனர்.

நன்றி! வணக்கம்!!

நினைவேந்தல்

அழகுக் கண்ணன் (எ) சுந்தரகிருஷ்ணன்

11–08–2024 ஆம் நாள் இயற்கை எய்திய கவிஞர் அழகுக் கண்ணன் (எ) சி. சுந்தரகிருஷ்ணன் அவர்கள் 89 வயது வரை நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார்கள். சென்னை கிறித்துவக் கல்லூரி மேனிலைப் பள்ளியில் மூத்த தமிழாசிரியராகப் பணியாற்றியவர். அண்ணாநகர் கார்காத்தார் சங்க ஆயுள் உறுப்பினர். சிதம்பரம் பகுதி சிறகிழந்த நல்லூர்க்காரர். ஆங்கிலம், சமஸ்கிருதம் மொழிகளிலும் பயிற்சி பெற்றவர். எம்.ஏ.; பி.எட் பட்டங்கள் பெற்றவர்.

'வண்ணப் பூங்கொத்து' – என்னும் கவிதை நூலுக்கு ஆசிரியர். சென்னை வானொலியில் கவிதைப் பூங்கா நிகழ்ச்சியில் கவிதைகள் பாடி அசத்திய பெருமைக்கு உரியவர். ஆங்கிலத்தில் Nursery Ryms உள்ளதைப் போல் தமிழில் இல்லையே என்னும் குறையைப் போக்கும் வகையில் 'மழலைச் சந்தங்கள்' என்னும் பெயரில் எளிய, இனிய பாடல்கள் புனைந்து இரண்டுதொகுதிகள் வெளியிட்டுள்ளார். அவை தமிழில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

அவர், திருக்குறளுக்கு மிக எளிய உரை எழுதியுள்ளார். அவ்வுரை நூலில் புகுமுக உரையாக, அவர் விடுத்துள்ள அதிசய வேண்டுகோள் என்ன தெரியுமா ?

1. இளைஞர்களே! இளம் தம்பதியினரே!!

திருவள்ளுவர் உங்களுக்காக இன்பத்துப் பாலில் இனிய கருத்துக்களைக் கூறியுள்ளார். படித்து மகிழுங்கள் இல்வாழ்க்கை இன்பங்களை அனுபவியுங்கள்.

2.மாணவச் செல்வங்களே! இதோ உங்கள் வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற அதிகாரங்கள் : கல்வி, கல்லாமை, கேள்வி, ஊக்கம்உடைமை, மடிஇன்மை, சிற்றினம் சேராமை.

3.நிர்வாகிகளே! Adninistrators! தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினைசெயல்வகை, வினைத்திட்பம் முதலிய அதிகாரங்களைப் புரட்டுங்கள். உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைக் காணுங்கள்.

4.தமிழ் அறிஞர்களே! திருவள்ளுவர் உங்களுக்காகவே திருக்குறள் என்னும் இந்த அருமையான நூலை இயற்றியுள்ளார்.

5.நீங்கள் எல்லாரும் நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு என்னும் அதிகாரங்களைத் தவறாமல் படியுங்கள்.

– பேரா. முனைவர்,
கு. விவேகானந்தன், சென்னை.
9445391580

இரக்கமும் இருக்கமும்

Dr. A. சுகாசினி, சிதம்பரம்.

இரக்கம் கொள்ளுதல் அன்பின் வெளிப்பாடு. உன்னத பண்புகளில் முக்கியமானதில் ஒன்றாக கருதப்படுவது இரக்க குணமுமாகும். மனித குலத்திற்குள் பல்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளை கடந்திடவும் களைந்திடவும் இரக்கமே இணைப்புப் பாலமாக இருக்கிறது. இரக்கமுள்ளவன் இதயத்தில் குடியிருப்பான் 'இறைவன்' என்பார்கள். ஈகை குணம் கொள்பவனாய் இருக்க இரக்கமுள்ளவர்களால்தான் முடியும் எனச் சொல்வார்கள். இரக்கத்தின் விளைவாய் வரும் தானமென்ற பரோபகாரத்தின் மூலமாகத்தான் நம் சமூகத்தில் நல்லிணக்கத்தை வளர்க்க ஏதுவாகுமென்பர்.

மன அழுத்தம் மிக்கவர்களே இறுக்கமானவர்களாக கருதப்படுவார்கள். இக்குணமுள்ளவர்கள் தேவையற்ற கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு தானும் மகிழச்சியாய் வாழாமல் உடன் உள்ளோர்களையும் சுதந்திரமாய் சிந்திக்கவோ நேரடியாய் சந்திக்கவோ சுயமாய் நடந்திடவோ விடமாட்டார்கள். மன இறுக்கம் மனப்புலம்பலுக்கு வழிவகுத்துவிடும். மனதில் ஏற்படும் ஆராத புண்ணானது உடல் நலமும் குறைந்திட வித்திட்டதாகிவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக இரக்கம் போன்ற மனித நல பண்புகள் முளைத்திட இறுக்கமானது முட்டுக்கட்டை போட்டுவிடும். இக்குணமுள்ளவர்கள் கடுமையான கொள்கைகளை அவர்களே விதித்துக்கொண்டு தானும் கடைபிடிக்காமல் மற்றவர்களையும் எதையும் முறைப்படி செய்யவும் விடமாட்டார்கள். ஒரே அமைப்பில் பணிபுரிபவர்கள் ஒருவரையொருவர் புரிதல் அவசியமானதால் அத்தகையசூழ்நிலை உருவாவதற்கு மன இறுக்கமானவர்கள் தடுத்துவிடுவார்கள்.

இறைவனானவன் தனக்கு பிடித்த காணிக்கைகளை கொடுத்து அருளை பெற விரும்புபவர்களைவிட தன்னால் பிறருக்கு முடிந்த அளவு பொருளைக் கொடுப்பவர்களையும் ஆறுதலாய் இருப்பவர்களையும் மட்டும்தான் அளவுகடந்து நேசிப்பதாக சொல்வர். இரக்ககுணம் இதயத்திலிருந்து வருவதாகவும் இறுக்கம் எண்ணத்தில் உருவாகுவதாகவும் உளவியல் நிபுணர்கள் கூறுவார். 'எங்கெங்கெல்லாம் இரக்கம் உள்ளதோ அங்கெல்லாம் தர்ம சிந்தனை உருவாகும் என்றார் காந்திஜி அவர்கள். மான்களை வேட்டையாடி உணவாக்கும் சிங்கம் புலிகள் கூட மான்குட்டிகளை நக்கி விளையாடும் காட்சிகளை டி.வி யில் பார்க்கலாம். இரக்கமுள்ள இடத்தில் அருளுடமை தானாக தழைக்கும் என்றார் வள்ளலார். 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற அவரது மென்மையான மனோதனமான அருட்சொல் இரக்கத்தின் மேன்மையைக் காட்டுகிறது அல்லவா!

தன்னிடமுள்ள அனைத்தையும் அள்ளிக்கொடுப்பவரை கர்ணன் என்போம். கர்ணனைப்போல் ஒருசேர அனைத்து பண்புகளை கொண்டவர்களும் ஈரம் கொண்ட நெஞ்சுடையவர்களும் புவனியில் வேறு ஒருவன் கூட பிறக்கவில்லை என்பார்கள். மகாபாரதப்போர் நடந்து கொண்டிருக்கிறது. போர்களங்களில் மாலை 6 மணிக்கு சங்கொலி எழுந்தவுடன் போரை நிறுத்திவிடுவார்கள். ஒரு நாள் சங்கொலி எழுப்பும் காவலன் சரியான நேரத்தில் கண் அயர்ந்துவிடுகிறான். அர்ஜுனனின் தேர் சாரதியான கிருஷ்ணபரமாத்மா மாலை 6 மணியானதை ஞானக்கண்ணால் அறிந்து பாண்டவர்களை போர் நிறுத்தம் செய்யச் சொன்னார். சங்கு சத்தம் கேட்காத காரணத்தால் மன இறுக்கத்திலிருந்த போர் முடிந்ததை போர்களத்திலிருந்த கர்ணன் உணராது எதிர்வரிசையில் ஆயுதங்களை களைந்து அரண்மனைக்குதிரும்பநிராயுதபாணியாய்நின்றிருந்த அர்ஜுனனை நோக்கி அம்பை விட தனது வில்லை வளைக்கிறான். இதைக்கண்ட கிருஷ்ணபரமாத்மா "கர்ணா! போர் முடிந்த பிறகு வில்லை வளைப்பது மாபாதக செயல் அன்றோ" என கூக்குறலிடுகிறார். உடன் சங்கொலியும் கேட்டிட கர்ணன் தன் தவறை உணர்ந்து கிருஷ்ணபரமாத்மாவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு திரும்பிச் சென்றான். இந்த கர்ணனின் இரக்க குணம் நீதி வழுவா பண்பினை உணர்த்திடுவதால் மகாபாரதம் வேறுதிசையில் பயணித்தது என்றால் தவறாகாது. வெள்ளமாய் பெறுக்கெடுத்துஓடும்நீரை விட உலக உயிரினங்களின் இதயத்தில் சுரக்கும் இரக்கமெனும் சிறு துளிகள்தான் உலகை உவகையோடு ஆண்டுவருவதாய் ஔவை பிராட்டி கூறிச் சென்றுள்ளார்.

ஞானிகள் யோகிகள் தவிர பூமியில் எப்போதாவது மன இறுக்கம் கொள்ளாதவர்கள் எவரும் இலர். குறிப்பாக வேலை நிமித்தம் காரணமாய் உறுதியானஇறுதியானமுடிவுகளைதினம்தினம்எடுக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள் மற்றவர்களைவிட அதிகமான இறுக்கம் கொண்டவர்களாக இருப்பார்கள். இறுக்கத்தின் வலிமை குறைந்திட, பிரார்த்தனை, யோகாசனம், பக்தி பயணம் போன்ற செயல்கள் உதவிடுமாம். இறுக்கம் இல்லாத வாழ்க்கை

சொர்க்கம் நோக்கி போகிறது என்றொரு ஆங்கிலப் பழமொழியுமுண்டு.,இறுக்கமேவந்திடாதிருக்கமுயற்சி செய்வதை விட்டுவிட்டு வந்தபின் ஏற்கும் வழிமுறை பயிற்சி கொள்வது சாலச்சிறந்தது. இறுக்கத்தோடு வாழவேண்டிய நிர்பந்தத்திலுள்ளவர்கள் அவசியமான முடிவுகளைக்கூட அவசரமாய் எடுக்கக்கூடாது. நிதானத்தையே பிரதான கொள்கையாய் கொள்ளல் வேண்டும். இச்சமயங்களில் நமக்குள் ஏற்படும் கோபம் தாபம் சுற்றியுள்ளோர்களை பாதிக்காத வகையில் பழக்கம் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தம்மனம் இறுக்கமாக இருப்பதை சொல்லிலோ செயலிலோ காட்டுதல் கூடாது. ஜான்சன் என்ற உளவியல் நிபுணர் சொன்னார். 'இறுக்கம் கொள்வது ஒரு நல்ல குணம். அருமையான முடிவுகளை எடுக்க இதுதான் அஸ்திவாரம்' இந்த கருத்து எதிர்மறை எண்ணமாகிலும் சிந்திக்க வைக்கிறது!

நம் அனுபவ அறிவின் காரணமாகவும் இறையருளினாலும் நாம் செய்த தான தர்மங்கள் தந்திட்ட புண்ணியத்தாலும் மேன்மையான முடிவை மட்டும் எடுப்போம் என்ற தன் நம்பிக்கை வேண்டும் என்பது வேதபாராயணங்களின் சாராம்சமாகும். மன அழுத்தம் குறைய, இறுக்கம் தவறான முடிவுகளுக்கு காரணமாய் ஆகிவிடாதிருக்க ஒரு சிறந்த நூலை வாசிக்கும் அனுபவம் பெற்றுத்தந்திடுமென்பர். வீரசிவாஜியின் குருவான ராமதாசர் தினமும் பிச்சையேந்தி (உஞ்சவிருத்தி) உணவு எடுப்பவர். ஒரு நாள் ஒரு வீட்டின் முன் கையேந்தி நின்றார். அந்த வீட்டு வேலைக்காரி கோபமாக பசுஞ்சாணியினை கரைத்த நீரில் ஒரு துணியை நனைத்து அந்த துணியினை ராமதாசர் முகத்திலே வீசினாள். அந்த பெண் சுய நிலையில் இல்லையென்றும் அவளது மனக்குமுறல் கண்களை புண்களாக்கி பாவச் செயலில் உச்ச கட்டத்தை செய்திட வைத்துள்ளது என்பதையும் யூகித்த ராமதாசர் அந்த துணியினை எடுத்துச்சென்று துவைத்து, நூல்யிழைகளாக பிரித்து, திரிகளாக திரித்து, விளக்கேற்றி "இராமா! அந்த பெண்ணின் மனப்பாரம் குறைய ஏதேனும் செய்யுங்கள்" என இறைவனிடம் இறைஞ்சினாராம்.

உதவியென்ற இன்சொல் இரக்கத்தின் விளையேயன்றி வேறில்லை. இரக்கம்பால் தோன்றும் பலன் நோக்கா உதவி பார்கடலை விட பெரியது என்றார் வள்ளுவர்.

ஸ்ரீ விநாயகா டிராவல் ஏஜென்ஸி

கழனிவாசல் - மங்கைநல்லூர்-மயிலாடுதுறை.

காசி, அயோத்தி புனித யாத்திரை

(மிகமிக குறைவான பயணக் கட்டணத் திட்டம்)

புறப்படும் நாள்: 05-02-2025 நாட்கள் : 12

கட்டணம் : IIIrd A/c.20,500/- (OR) Non A/c. Sleeper 17,000/-

(கட்டணம்: ரயில், பஸ், தங்குமிடம், உணவு, ஒரு வேளை காபி உட்பட)

பார்க்கும் ஸ்தலங்கள்:

காசி, கயா, புத்தகயா,

அலகாபாத், சீதாமரி, அயோத்தி

இறைபணியில் என்றும்....

S.ராஜு B.Sc., கழனிவாசல்.

செல்: 94436 17870

சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

எண்ணிப்பார்க்காமல் பேசுவது குறி பார்க்காமல் சுடுவது போன்றது.

நம்பிக்கையோடு இருப்போம்!.

அரசன் ஒருவன் ஒருத்தனுக்கு மரணதண்டனை விதித்துவிடுகிறான் அரசே எனக்கு மன்னிப்பு கொடுங்கள் என்று கேட்கிறான் என்னால் முடியாத காரியம் ஏதாவது உன்னால் செய்து காட்டமுடியுமானால் உனக்கு மன்னிப்பு வழங்கலாம்...அப்படி ஏதாவது செய்ய முடியுமா உன்னால் ?. முடியும் மன்னா ! அரண்மனையில் இருக்கிற உங்கள் குதிரையை என்னால் பறக்கவைக்க முடியும் !.அப்படியா ? ஆமாம் ! ஆனால் ,அதற்கு ஒரு வருடம் அவகாசம் தேவைப்படும் ! அப்படியா சரி...பரவாயில்லை.உனக்கு வழங்கப்பட்ட இந்த தண்டனையை ஒரு வருட காலம் தள்ளி வைக்கிறேன்அடுத்த வருட காலம் இதே நாளில் இந்த குதிரை பறக்கவேண்டும். அப்படி நீ செய்துவிட்டால் உனக்கு விடுதலை !. சரி...மகாராஜா !.அவன் விடுவிக்கப்பட்டான்.

ஒருநாள் அவனுடையநண்பன்கேட்டான்ஏன்டா !குதிரையைப்பறக்கவைக்கிறேன்னுசொல்லிபுட்டியே அது நடக்கிற காரியமா ?அப்போது அவன் சொன்னானாம்: இதோ பாருப்பா !இன்னும் ஒருவருடம் இருக்கு... எதுவும் நடக்கலாம்....இன்னும் ஒரு வருசத்துக்கு இந்த மன்னர் இருப்பாராங்கறதும் நிச்சயமில்லை. இன்னும் ஒரு வருசத்துக்கு நான் இருப்பேனாங்கறது நிச்சயமில்லை.இன்னும் ஒரு வருசத்துக்கு இந்தக்குதிரை இருக்குமாங்கறதும் நிச்சயமில்லை.ஆக ...மன்னர் சாகலாம்...அல்லது நான் சாகலாம்...அல்லது குதிரை சாகலாம்...அல்லது ....இன்னும் ஒரு வாரத்தில் இந்த குதிரை பறந்தாலும் பறக்கலாம் !

யாருக்குத்தெரியும். நம்பிக்கையோடு இருப்போம் !.

இன்பமோ, துன்பமோ எது வந்தாலும்

சிறுவன் சங்கரன் தேர்வில் மதிப்பெண் அதிகம் பெற்றால் சந்தோஷத்தில் குதிப்பான்.குறைந்து விட்டால் அம்மா மீதே எரிச்சல் கொள்வான். ஒரு நாள் அவனைப் பார்க்க கிராமத்திலிருந்து பாட்டி வந்திருந்தாள். சங்கரனுக்கு தின்பண்டங்கள் கொடுத்தாள். அனால் தலைவலியால் அவதிப்பட்ட அவன் வெறுப்பை வெளிப்படுத்தினான். இன்ப துன்ப அனுபவங்களை யாரும் தவிர்க்கமுடியாது.இதனை உணர்த்த விரும்பிய பாட்டி மறுநாள் காலையில் தெருவழியாக முதுகில் அழுக்குத் துணி மூட்டையைதூக்கிச்செல்லும் கழுதையைக் காட்டினாள். சலனம் இன்றி பாதையில் அது சென்று கொண்டிருந்தது....சங்கரா இந்த கழுதையை உற்றுப்பார் ! மதலையில் அது திரும்பும்போது உண்மை புரியும்...என்றாள். பகலில் துணிகளைத்துவைத்து உலர்த்திய பின் அவற்றை மூட்டையாகக் கட்டி கழுதையின் மீது வைத்தார் துணிவெளுப்பவர்.மீண்டும் மாலையில் கழுதை ஊருக்குள் வந்தது.

அதைக் கண்டதும் பாட்டி.....சங்கரா ! இந்தக் கழுதையைப்பார் ! அழுக்குத்துணியோ,வெளுத்தத் துணியோ எதைச் சுமந்தாலும் தன் பணியைச் சரிவரச்செய்கிறது கழுதை.இந்த உண்மையை உணர்ந்தவர்கள் இன்பமோ,துன்பமோ எது வந்தாலும் பிறரை பழிப்பதில்லை,வருத்தத்திற்கு ஆளாவதில்லை....என்றாள் பாட்டி.

விடுகதைகள்

1. வீட்டுக்கு வீடு வாசற்படியிலே போட்டுக்கிடக்குது பூப்பந்தல்.அது என்ன ?
2. வித்தின்றி முளைக்கும் விடிந்நததும் குடை பிடிக்கும்.அது என்ன ?
3. விண்ணை சிரிக்கச் செய்வாள் .கண்ணைப்பறிக்கச்செய்வாள்.அவள்யார் ?
4. வளைந்து நெளிந்து போனாலும் வழியைச் சொல்வான் சரியாக.அவன்யார் ?
5. வாலால் அடிக்க வலியால் துடிப்பார்.அவர்யார் ?
6. மேகத்தின் பிள்ளை அது.தாகத்தின் நண்பன் அது.அது என்ன ?
7. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க தண்ணீர் .அது என்ன ?
8. மீன் பிடிக்கத் தெரியாது.ஆனால் வலை பின்னுவான்.அவன்யார் ?

உடல் பருமனைக் குறையுங்கள்

ஆம். இந்த நோயற்ற வாழ்வை உங்களையொத்த சிறுவர்கள் அண்மைக் காலங்களில் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?. சிறுவர்களில் சுமார் 15 சதவிகிதத்தினர் அதிக எடையோடு உடல் பருமனுடன் இருக்கின்றனர், மேலும் 15 சதவிகிதத்தினர் அதிக எடைக்கு உள்ளாக வாய்ப்புள்ளதாகவும் அறிந்துள்ளனர். குறிப்பாக சுறு சுறுப்பற்ற வாழ்க்கை முறையும் , உடல் உழைப்பின்மையும் அதிகரித்து வருவதும்தான் இதற்குக் காரணம். அதாவது உட்கொள்ளும் உணவு அளிக்கும் சக்தியைவிட உடலில் பயன்படுத்தப்படும் சக்தி குறைவு என்பதுதான்.நீங்கள் உட்கொள்ளும் துரித உணவு வகைகள் உடலில் அதிகப்படியான சக்தியை குவித்துவிடுகின்றன.

விளையாட்டு உடற் பயிற்சி இவையின்மையால் செலவிடும் சக்தி குறைகின்றது. உடல் பருமன் அதிகம் இருந்தால் இதனால் வரும் பிரச்சனைகள் என்ன கொஞ்சமா ?

இந்த பட்டியலைப் பாருங்கள்.

1. சமூகத்தில் பலரோடு இணையாக பழகுதற்கு இயலாது தனிமைப்படுத்தப்படுகிறீர்கள்.
2. நடப்பதற்கு ,குனிந்து நிமிர்வதற்கு, இயல்பாக அசைவதற்கு சிரமம் ஏற்படுகிறது.
3. இரத்த அழுத்தம். நீரிழிவுநோய் மற்றும் இதயம்தொடர்பான நோய்களும் வர வாய்ப்பு ஏற்படுகிறது. மற்ற குழந்தைகளுடன் இணைந்து விளையாட முடிவதில்லை.
4. கார்பன்டையாக்சைடு தேக்கமடைந்து சவாசித்தலில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. மூச்சுவிடுதலில் தற்காலிகத்தடை ஏற்படுகிறது.வேகமாக ஓடமுடியாது.விளையாட முடியாது.
6. கொலஸ்டிரால் அளவு அதிகரிப்பதால் பித்தப்பை தொடர்பான பிரச்சனைகள் தோன்றுகின்றன.
7. எடை அதிகரிப்பதால் மூட்டுவலி , குடலிறக்கம் ஏற்படுகிறது.

இவைகள் தேவைதானா ? இவற்றினின்று விடுபட்டிருந்தால் எத்துணை மகிழ்ச்சி ?

1. உடல் பருமனைக் குறைக்க நிறைய காய்கறிகளை, பழங்களை, உங்கள் அம்மா கொடுக்கும் சத்தான உணவை உட்கொள்ளுங்கள். பிட்சா, பர்கர், நூடுல்ஸ் போன்ற துரித உணவை தவிர்த்திடுங்கள்.
2. தினந்தோறும் நிறைய சுத்தமான தண்ணீர் குடியுங்கள். பழரசங்கள், மோர், இளநீர் குடியுங்கள். பெப்சி, கொக்கோகோலா போன்ற இரசாயன பானங்களைத் தவிர்த்திடுங்கள்.
3. கம்ப்யூட்டர்,தொலைக்காட்சிபெட்டி முன்பாக அமரும் நேரத்தை,வீடியோ கேம் விளையாடும் நேரத்தை குறைத்திடுங்கள்.வீட்டிலேயே அடைந்து இராது நண்பர்களுடன் கால்பந்து,சைக்கிள் ஓட்டுதல் இவற்றில் ஈடுபடுங்கள்.ஓடி,ஆடி விளையாடுங்கள்.உடற் பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
4. உடல் ஆரோக்கியமாக இருக்க போதிய உறக்கம் தேவை.எட்டு அல்லது பத்து மணிநேரம் உறக்கம் தேவை. குறைவான உறக்கம் படிப்பை பாதிக்கும்.

2000ஆயிரம் ஆண்டுகட்கு முன்பாக வாழ்ந்த மருத்துவத் தந்தை ஹிப்போகிரட்டஸ் தந்த மருத்துவ அறிவுரை:
நமது உணவே மருந்தாக இருக்க வேண்டும், நமது மருந்தே உணவாக இருக்க வேண்டும்.

போதி மரம்!

பள்ளி மாணவன் பரிட்சையில் தேர்ச்சி பெறவில்லை.எனவே தனது வாழ்க்கையே வீணாகிவிட்டதென்பதாக தற்கொலை செய்து கொள்ளப்போகிறேன் என்று தாயை பயமுறுத் தினான். அடேய் பாவி!என்னப் பண்ணப்போறே என்று தாய் பதறினார்.கயிற்றில் தொங்குவேன்என்றான். பெற்றவயிறு பதைபதைக்க அவனை ஓர் அறைக்குள் தள்ளி வெளியே கதவைப் பூட்டினாள்.வீடு முழுக்க தேடி எல்லாக் கயிறுகளையும் தீ வைத்துக் கொளுத்தினாள்.அவனோ அறைக்குள்ளிருந்த எலி விஷத்தை எடுத்துக்காட்டிஇதைத்தின்னு செத்துப்போவேன்என்றான்.உள்ளே ஓடிப்போய் அதைப்பிடுங்கி ஜன்னலுக்கு வெளியேஎறிந்தாள்.அதனால்என்ன ?கரண்டுலகையைவைப்பேன்...கருகிசெத்துடுவேன்என்றுமிரட்டினான். ஓடிப்போய் மெயின் சுவிட்சை அணைத்தாள்.இப்படியெல்லாம் என்னைத்தடுத்தா நான் தப்பிடுவேனா ?பாரு சோறு திங்காம தண்ணி குடிக்காம பட்டினி கெடந்து தற்கொலை பண்ணிக்கிடுவேன்என்று புலம்பினான். வெறுத்துப்போன தாய் போடா! போயி சாவுஎன்று கதவைத் திறந்துவிட்டாள்.

திகைத்து நின்ற மகனைப் பார்த்து. எப்படி எப்படி சாவே சொல்லுஎன்றாள்.ஒன்னு விஷம் குடிப்பேன... இரண்டு தூக்கில் தொங்கிடுவேன், மூணு கரண்ட்டுல கையை வைப்பேன். நாலு நாள் பட்டினி கிடந்து சாவேன்என்று பட்டியலிட்டான்.

நிறுத்தடா நாயே ....சாவறத்துக்கே இத்தினி வழி இருக்குன்னா வாழறத்துக்கு எத்தினி வழி இருக்கும் ?யோசிச்சியாடா ?என்றாள்.அந்தப் புத்தருக்கு இது போதிமரம் ஆனது! விழித்துக் கொண்டான்.

குறைவாகப் பேசுங்கள்

தவளைகளும்,தேரைகளும் இரவு பகலாக கத்திக்கொண்டே இருந்தாலும் யாருமே அதை கண்டுகொள்வதில்லை.ஆனால் சேவல் அதிகாலையில் மட்டுமே கூவுகிறது.என்றாலும் சேவல் குரல் கேட்டு அனைவரும் காலையில் எழுந்து விடுகிறோம்.அதிகம் பேசுவதால் நல்லது எதையும் சாதித்துவிட முடியாது. சரியான நேரத்தில் சரியாக பேசுவதுதான் முக்கியம். ஆங்கில வரலாற்று ஆசிரியர் எச்.ஜி.வெல்ஸ் தத்துவமேதை டாக்டர். இராதாகிருஷ்ணனுக்கு லண்டனில் விருந்தளித்தார்.அதில் பெர்னாட்ஷா,பெர்டிராண்ட. ரஸ்ஸல்,பேராசிரியர் ஜோட் போன்ற மாபெரும் மேதைகள் கலந்து கொண்டார்கள். அவ் விருந்தின் போது நீண்ட நேரம் வாக்குவாதங்கள் நடை பெற்றன. பேராசிரியர் இராதா கிருஷ்ணன் அதிகம் தாமாக பேசமாட்டார்.விருந்தில் கலந்து கொண்ட இவர் ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை. மௌனமாக இருந்தார்.ஏன்இப்படி மௌனம் சாதிக்கிறீர்கள் என்று அனைவரும் கேட்டனர்.எல்லோரும் பேசுகிறவர்களாக இருந்துவிட்டால் எப்படி ? அதைக் கேட்பவர்களும் வேண்டுமல்லவா ? நமக்கு இரு காதுகள் இருப்பதும் ஒருவாய் இருப்பதும் நாம் பேசுவதைவிட இருமடங்கு காது கொடுத்து கேட்கவேண்டும் என்பதற்காகத்தானே என்றார் தமக்கே உரித்தான நகைச் சுவையோடு.சிறந்த தலைவர்கள் அனைவருமே கவனிக்கும் கலையில் சிறந்தவர்கள்.இன்றுமுதல் பேச்சைக்குறைத்து பேசுவதைக்கேளுங்கள்.

அந்த அரசியல்வாதி அவசரம்!

ஒரு விமானம் பறந்து கொண்டிருக்கிறது.அதில் ஒரு விமானி,ஒரு ஆன்மீகப் பெரியவர்,ஒரு அரசியல்வாதி,ஒரு பள்ளிச்சிறுவன் ஆகியோர் இருந்தனர்.திடீர் என விமானி ஓர் அபாய அறிவிப்பை வெளியிடுகிறார்.இப்போது விமானத்தில் எரிபொருள் தீர்ந்துவிட்டது!நாம் எல்லோரும் கீழே குதித்துத்தான் தப்பிக்க வேண்டும். நாம் இருப்பதோ நாலுபேர்..நம்மிடம் இருப்பதோ மூன்று பாரசூட்கள்தாம!....

இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போதே திடீர் என்று அரசியல்வாதி எழுந்தார்.எனக்கு நிறைய ஆற்றவேண்டியகடமைகள் இருக்கு நான் முதலில் பாரசூட்டைக் கட்டிக் கொண்டே குதித்துவிடுகிறேன்என்றவாரே அதைஎடுத்து அணிந்துகொண்டு குதித்துவிடுகிறார்.விமானி சொல்கிறார் நாம் இப்போது மூன்றுபேர் இருக்கிறோம் தப்பிக்கணுமே!இரண்டு பாரசூட்கள்தானே இருக்கிறது.என்ன செய்வது ?பள்ளிச்சிறுவன் சொன்னான் கவலைப்படாதீங்க நாம் மூணுபேருமே உயிர்ப்பிழைக்கலாம். அந்த அரசியல்வாதி அவசரத்துல பாரசூட்னு நெனச்சு என் புத்தக மூட்டையை முதுகிலே கட்டிக்கொண்டு குதிச்சுவிட்டார்.

ஆசிரியர் தினம்

இந்தியாவில் ஆசிரியர் தினம் செப்டம்பர் 5 ம் தேதி கொண்டாடப்படுகிறது.

பூடான் நாட்டில மே.2
பொலிவியா நாட்டில் சூன் .6
பிரேசில் நாட்டில் அக்டோபர்.15
பல்கேரியா நாட்டில் அக்டோபர்.5
சிலி நாட்டில் அக்டோபர்.16
கொலம்பியா நாட்டில் மே.15

சிறந்த ஆசிரியர்கள் யார்?

நடந்ததைச் சொல்பவர் – சரித்திர ஆசிரியர்.
நடக்கப்போவதைச்சொல்பவர் – பத்திரிக்கை ஆசிரியர்.
நடக்கப்போவதை கணிப்பவர் – ஜோதிடர்.
நடக்கக் கூடியதை ஆராய்பவர் – விஞ்ஞானி.
நடக்கச் சாத்தியமற்றதை நடத்தி முடிப்பதாக க் காதில் பூச்சுற்றுபவர் – அரசியல் தலைவர்.

ஒரு முல்லா கதை

ஒரு நாள் துருக்கி மன்னனும் ,முல்லாவும் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தனர்....உங்களைப்பற்றி எல்லோரும் பெருமையாகப் பேசுகிறார்கள் !ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் மனதிற்குள் எடைபோட்டுப்பார்த்த அவரது மதிப்பைக்கூறி விடுவீர்களாமே!. .என்றார் மன்னர்..

....இறையருளால் எனக்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கிறது என நினைக்கிறேன....என்றார் முல்லா....சரி இப்போது என உண்மையான மதிப்பு என்ன...கூறுங்கள் பார்க்கலாம்...என்றார் மன்னர்.

முல்லா மன்னரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ...மன்னரே ! தங்களின் உண்மையான மதிப்பு பத்து பொற்காசுகள்...என்றார்.

மன்னருக்குத் தூக்கிவாரிப்போட்டது.முல்லா தன்னை அவமரியாதை செய்வதாக ஆத்திரப்பட்டார்....என்னைக் கேவலப்படுத்துகிறீரா ?என இடுப்பில் உள்ள கச்சையின் மதிப்பு பத்துப்பொற்காசுகள் இருக்குமே ?...என்றார் சீற்றமுடன்.

மன்னரே ! நான் குறிப்பிட்டதும் தங்களின் கச்சையின் மதிப்பைத்தான்.உடலை ஒரு காசுகூட மதிப்பிட முடியாதுஇந்த உடலால் எத்தனை காலம் உலகில் வாழமுடியும் ? உயிர் அகன்றுவிட்டால் மன்னர் என்னும் மரியாதை இருக்குமா ?அழியும் உடம்புக்கு என்ன மதிப்பு இருக்கும் ? என்றார் முல்லா.முல்லாவின் பதில் கேட்ட மன்னருக்கு ஆத்திரம் அடங்கியது.அறிவுக்கண் திறந்தது.

கல்வியில் நாட்டம் செலுத்துங்கள்!

இளைஞர்கள் நிரம்பிய அரங்கு .பேச்சாளர் தன்பையினின்று ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து உயர்த்திப் பிடிக்கிறார்.அனைவரின் பார்வையும் அதில் படுகின்றன.இவர் கேட்கிறார். இந்த நூறு ரூபாய் நோட்டு யாருக்கு வேண்டும் ?அரங்கிலிருந்த அத்தனை பேர்களின் கைகளும் மேலே உயர்ந்தன. உங்களிடம் கொடுக்கும் முன்பாக ஒன்று செய்கிறேன் என்று சொல்லிவிட்டு நோட்டை தனது கைகளால் நன்கு கசக்கினார்.அப்புறம் கேட்டார்.இந்த நோட்டு யாருக்கு வேண்டும் ?தூக்கிய கைகளை எவரும் இறக்கவில்லை. பேச்சாளர் நோட்டை மண்ணில் போட்டார்,காலால் மிதித்து அழுக்காக்கினார்.

இப்போது சொல்லுங்கள் ,யாருக்கு வேண்டும் ? என்றார்.தூக்கிய கைகளை எவரும் இறக்கவில்லை. இப்போது அந்தப் பேச்சாளர் தொடர்ந்தார்,இளைஞர்களே! இப்போது கவனியுங்கள்.இந்த நோட்டினை கசக்கினேன்,காலில் மிதித்து அழுக்காக்கினேன், என்றாலும் இதனை வேண்டும் என்றுதான் சொல்கிறீர்கள். இதன் மதிப்பு குறையவில்லை. நாம் வாழ்விலும் இப்படித்தான் கசக்கப் படுகின்றோம்,

மிதிக்கப் படுகின்றோம்.அழுக்காகி விடுகிறோம். நமக்கு மரியாதை இல்லை! நாம் பயனற்றவன்! என மனதால் கசங்கிவிடுகின்றோம்.ஆனால் உண்மை அதுவல்ல.நடப்பது எதுவாயினும் நாம் மதிப்பில் குறைந்து விடுவதில்லை.துன்பம் வரும் நிலையில் மனம் உடைந்து விடாதீர்கள்.அறிவு அற்றம் காக்கும் கருவி என்கிறார் வள்ளுவர்.இவ் அறிவைப் பெறுவதற்கான கல்வியில் நாட்டம் செலுத்துங்கள்! மகிழ்வோடு வாழுங்கள்!

உன் நாய் கடிக்குமா?: ஒரு சிறுவன் வீதியில் நின்றுகொண்டிருந்தான்.

அவனருகில் மிக அழகான உயர்ந்த ரக நாய் உட்கார்ந்திருந்தது.அந்த வழியாக வந்த அவன் பள்ளித்தோழன் அந்த நாயைப்பார்த்தும்அதைத் தடவித்தர ஆசைப்பட்டான்.அந்தச்சிறுவனிடம் உன் நாய் கடிக்குமா ?என்றான். கடிக்காது.என்று பதில் வந்தது.

அவன் அந்த நாயின் நெற்றியில் கை வைத்ததும் அது அவனைக் கடிக்காத குறையாக உறுமி அவன் மீது பாய்ந்தது.வெலவெலத்துப்போன அவன் உன் நாய் கடிக்குமா என்று நான் கேட்டேன் .சீ அது கோபக்கார நாய் (Ferocious dog) என ஏன் சொல்லவில்லை என்று கேட்டான் என் நாய் சாதுவானது.அது வீட்டில் இருக்கிறது.இது என் நாயல்ல,வேறு யாருடையதோஎன அவன் அமைதியாகச் சொன்னான்

விடுகதை விடைகள்

1.கோலம் 2.காளான் 3.மின்னல் 4.சாலை 5.தேள் 6.மழை 7.கிணறு 8.சிலந்தி



வாழ்க மணமக்கள்

கார்குல கொடை வள்ளல் உயர்திரு **S. வெங்கடேசன் பிள்ளை** – திருமதி **V. ஞானாம்பிகை** ஆகியோரின் முன்னிலையில் இருவரின் நல்லாசியுடன்... கடலூர் மாவட்டம் கீரப்பாளையம் வட்டம் பூர்வீகம் T.நெடுஞ்சேரி பல்லவராயன் கோத்திரம் தெய்வத்திருவாளர்கள் V. சட்ட பெருமாள் பிள்ளை – C. சாவித்திரி இவர்களின் மகன்வழிப் பெயரனும் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் கழனிவாசல் கிராமம் எருக்குடையான் கோத்திரம் திரு. அ. பாலசுப்பிரமணியன் – திருமதி பா.ஜெயலட்சுமி இவர்களின் மகள் வழி பெயரனும் திரு. C. பாலச்சந்திரன் – திருமதி. B. பிரபாவதி ஆகிய எங்களின் குமாரனுமான திருவளர்செல்வன் **Dr. பா. ஆகாஷ் யுவன்**, MBBS என்கிற மணமகனுக்கும்... கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டம் பூவிழந்தநல்லூர் கொங்கராய கோத்திரம் தெய்வத்திருவாளர்கள் V.ரங்கநாதன் பிள்ளை – R.சிவகாமி இவர்களின் மகன்வழி பெயர்த்தியும், மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் திருவிடைக்கழி பருவுட கோத்திரம் வானின்று வாழ்த்தும் திரு. S. சண்முகம் பிள்ளை – நலமுடன் திருமதி. S. ராஜேஸ்வரி இவர்களின் மகள் வழி பெயர்த்தியும் திரு V.R. ஞானம் – திருமதி S.விஜயலட்சுமி ஆகிய எங்களின் குமாரத்திமான திருவளர் செல்வி **Dr. ஞா. சக்தி சௌமியா** MBBS என்கிற மணமகளுக்கும் மங்கலகரமான குரோதி வருடம் ஆனி மாதம் 26ம்தேதி 10.07.2024 புதன்கிழமை சிதம்பரம் G.M.வாண்டையார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்கும் மற்றும் நெய்வேலி வட்டம் –24 திருமண மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு விழாவிற்கும் வருகை தந்து கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து நல்ல உள்ளங்களான உறவுகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

V.R. ஞானம், ஆசிரியர்
S. விஜயலட்சுமி, பட்டதாரி ஆசிரியை
Dr.G. சக்தி சுவேதா, MBBS

ச. பாலச்சந்திரன், B.E,
பா. பிரபாவதி, BSc., MA
பா. கைலாஷ், B.Tech, MS(UK)

K.K.R இல்லத் திருமண விழா

K.R.விக்னேஷ்ராஜ் - R.பார்கவி
இவர்களின் திருமணம்
02.06.2024 அன்று மயிலாடுதுறை
SIGNATURE MAHAL -ல்
சீருடனும் சிறப்புடனும் நடைபெற்றது.
திருமணம் மற்றும் வரவேற்பு விழாவை
தங்கள் வீட்டு விழாவாக கருதி சிறப்பாக
நடத்திக்கொடுத்து பெருமை சேர்த்த
கார்குல வள்ளல்
திரு.S.வெங்கடேசன் பிள்ளை அவர்கள்,
மற்றும் CREW நிர்வாகிகள்.
மாநில சங்கம், இணைப்புச்சங்கம்,
மகளிர் அணி, இளைஞர் அணி, KBF
உள்ளிட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,
அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.
நன்றி! நன்றி!! நன்றி!!!



















Dr.KKR.K.சுரேஷ் @ ராஜசுந்தரம் பிள்ளை
ஆனந்தி ராஜசுந்தரம்
K.K.நகர், சென்னை.

K.ராஜாமோகன் பிள்ளை
கற்பகம் ராஜாமோகன்
திருச்சி.

வாழ்க மணமக்கள்



கடலூர் மாவட்டம், புவனகிரி தாலுக்கா, பு. உடையூர் தெய்வத்திருவாளர்கள் P. ராஜாமணி பிள்ளை – சுசீலா அம்மாள் அவர்களின் மகன் வழி பேத்தியும், தெய்வத்திரு N. சுந்தரேசன் பிள்ளை நலமுடன் சுப்புலட்சுமி அவர்களின் மகள் வழி பேத்தியும் R. ஜெயக்குமார் பிள்ளை திருமதி விஜயா அவர்களின் குமாரத்தி **J. நந்தினி,** B.Tech க்கும் சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம் வட்டம் தெய்வத்திருவாளர்கள் K. பழனியாப் பிள்ளை–வைரம் அம்மாள் அவர்களின் மகன் வழி பேரனும் தெய்வத்திருவாளர்கள் C. பெரியசாமி பிள்ளை – காந்திமதி அம்மாள் இவர்களின் மகள் வழி பேரனும், P. பொன்னுசாமி பிள்ளை – திருமதி பேபி சுகந்தி இவர்களின் குமாரன் **P. கீர்த்திவாசன்,** B.E, அவர்களின் திருமணம் கடந்த 10.07.2024 புதன்கிழமை அன்று சிதம்பரம் ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மஹாலில்

மாண்புமிகு **மு. சண்முகம்,** M.P., பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை.

அவர்களின் ஆசீர்வாதத்துடன் உறவினர்களும் நண்பர்களும் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியவர்களுக்கும், 14.07.2024 அன்று பெங்களூர் உத்சவ கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திருமண வரவேற்பில் கலந்துகொண்டு வாழ்த்திய உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

P. பொன்னுசாமி
பேபி சுகந்தி பொன்னுசாமி
S. நடராஜன்
ஐஸ்வர்யா நடராஜன்

R. ஜெயக்குமார்
விஜயா ஜெயக்குமார்
R. ரவிச்சந்திரன்
சீத்தாலட்சுமி ரவிச்சந்திரன்
R. ஞானப்பிரகாசம்
ஷீலா ஞானப்பிரசாசம்

Affigenix®
• Devise • Develop • Deliver
CREW GROUP OF COMPANIES

WE HAVE ENTIRE SOLUTIONS FOR
NEW LAB SETUP

CHENNAI RADHA
ENGINEERING WORKS (P) LTD.,

BIOCHEMISTRY REAGENTS

- Ammonia
- Albumin
- AST/SGOT
- ALT/SGPT
- Bilirubin Direct
- Bilirubin Total
- Cholinesterase
- Gamma-GT
- Total Protein
- Alkaline Phosphatase
- Uric Acid
- Glucose
- Urea – GLDH
- Cholesterol
- Creatinine
- Triglycerides
- Urea – Berthelot
- HDL Precipitation
- Direct HDL Cholesterol
- Direct LDL Cholesterol
- CK-MB
- Lipase
- CK-NAC
- Calcium
- Bicarbonates
- α – Amylase
- Homocysteine
- Phosphorus
- Magnesium
- Lactate dehydrogenase

TURBIDIMETRY REAGENTS

- D-Dimer
- Cystatin-C
- Allergens (IgE)
- C-Reactive Protein (CRP)
- Anti-Streptolysin O (ASO)
- Anti-Cyclic Citrullinated peptide (Anti-CCP)
- Ferritin
- Vitamin D
- Procalcitonin (PCT)
- Hemoglobin A1C (HbA1c)
- Microalbumin (MAU)
- Rheumatoid Factor (RF)

RAPID CARDS

- Luteinizing Hormone (LH)
- Follicle Stimulating Hormone (FSH)
- Human Chorionic Gonadotropin (hCG)
- Chikungunya Antibody (IgM)
- Typhoid Antibody (IgG/IgM)

BLOOD GROUPING KITS

- Anti - A1 Lectin
- 22% Bovine serum albumin (BSA)
- Anti A (IgM) monoclonal Antibody
- Anti B (IgM) monoclonal Antibody
- Anti D (IgM + IgG) Monoclonal Antibody
- Anti AB (IgM) Monoclonal Antibody
- Anti-Human Globulin (AHG)- Coomb's Sera



Semi-automated Biochemistry analyzer

CALL FOR MORE INFO
+91 9444 978 209

VISIT OUR WEBSITE
www.affigenix.com

MAIL US
sales@affigenix.com

R & D CENTER: 5/1F, KSSIDC Industrial Area, Bommasandra, Anekal Taluk, Bangalore, Karnataka - 560 099.

IVD MANUFACTURING FACILITY: #88 & 89, SIDCO Industrial Estate, Alathur, Chengalpet Dist.Tamil Nadu - 603 110.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நினைவாக!

(11–7–1925 – 15–4–1995)

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன். 9578286891



ஞானப் பழம் வேண்டி
கோபக் கனல் தெறிக்க
குன்றின் மீது
சென்றமர்ந்த குழந்தை

குணத்தில் வடிவம் பெற்று
குன்றக்குடி அடிகளாய்
உருவம் பெற்று
உலக இயலை ஆராறு
உருவெடுத்து வந்ததோ என
உள்ளமெலாம்
வியப்பு எமக்கு!

பழுத்த பழமாய்
பனித்த கண்களோடு
அன்னைத் தமிழுக்கு
ஆராதனை செய்த
ஆன்மீகத் தலைவர் இவர்!

முன்னைப் பெருமைகளை
மூவேந்தர் சிறப்புகளை
வில்லின் அம்புகளாய்
சொல்லத் துடிப்போரே!

நான்காம் வேந்தர்
ஒருவரோடு
நற்றமிழ் வளர்த்த
அடிகளாரோடு
நாமும் வாழ்ந்தோம்
என்ற பெருமையை
நாடு முழுக்கப்
பறை சாற்றுங்கள்!

"காந்தி கிராமம்"
இதுவோவென
காண்போர் வியப்புற
மத்திய அரசு
விருது அளிக்க
"மாதிரிக் கிராமம்"
அமைத்தவர் அடிகளார்!

மண்ணின் மைந்தர்களின்
எண்ணங்களுக்கு எழிலூட்டி
விண்ணின் ஆராய்ச்சிக்கும்
வித்திட்ட வேந்தர் இவர்!

பனிவிழும் இரவுகளில்
அடிகளார்
பாண்டிய நாட்டு மேடைகளில்
பாங்குடனே தலைமையேற்க
பட்டி மண்டபம் களைகட்டும்!
பைந்தமிழ் முரசு கொட்டும்!

நிர்வாகத்திற்கு
இலக்கணம் கண்டார்!
நிம்மதிக்குப்
பிறப்பிடமானார்!

மனமெல்லாம்
தெளிவு பெறட்டும்!
அடிகளார் வழியில்
மனிதர்களெல்லாம்
மகத்துவம் பெறட்டும்!

ஆசிரியர்களுக்கு ஓர் சமர்ப்பணம்

அறிவைப் புகட்டி,
ஆற்றலைக் கூட்டி,
இன்சொலால் வழி நடத்தி
ஈதலைக் கற்பித்து
உறுதியை வளர்த்து
ஊதாரித்தனத்தைக் கண்டித்து
எளிமையை நடைமுறைப்படுத்தி
ஏற்றத்திற்கு வழிகாட்டி
ஐயமின்றி தெளிவித்து
ஒற்றுமையை வளர்த்து
ஒதுவித்தலால் நமை உயர்த்தி
ஔவியத்தை மறக்கடித்து
எஃகாக எமை வலிமைப்படுத்திய
அனைத்து ஆசிரிய பெருந்தகைகளுக்கும்
சமர்ப்பணம்
கற்றலை மேம்படுத்தி, காணலைச் சரியாக்கி
கிளறலைத் தூண்டி, கீதத்தைக் கற்பித்து
குரல்வளத்தை சீராக்கி, கூர்ந்து கவனிக்கவைத்து
கெடுதலைப் புறந்தள்ளி, கேட்டலை ஊக்குவித்து
கைகளால் உழைக்கச் செய்து, கொடுத்தலை
ஆதரித்து
கோபுரமாக உயர்த்தி கௌரவமாக வாழ்தலை
தள்ளி நின்று எம் மாணவன் இவனென மார்தட்டும்
ஒரே மனிதர் ஆசிரியர் மட்டுமே!
ஒவ்வொரு துறையும் ஒன்றில் மட்டுமே சிறக்கச்
செய்யும்;
ஆயின் ஆசிரியரால் மட்டுமே பல்துறையும் சிறப்புறும்!

– நிர்மலா ராஜவேல்.

மாகேஸ்வர பூசை என்றால் என்ன?

சித்தாந்த ரெத்தினம் தி. கபீர்தாஸ்,
65/64 எஸ்.ஆர். நகர், சிதம்பரம். 9445473386

மாகேஸ்வர பூசை என்றால் அன்னம் பாளித்தல். அன்னதானம் செய்தல் போன்றவைதான். இதில் ஒன்றுக்கொன்று சிறு மாறுபாடுகள் உண்டு.

அறத்தில் சிறந்தது உணவிடுதலே. உண்டிக்கொடுத்தவர் உயிர் கொடுத்தவர். பசித்தவருக்கு புசி என்பவர் இவர்களை அன்னதான பிரபு என்றும், அன்னமிட்டகை என்றும் போற்றி புகழ்கின்றனர். பசியும் ஒரு நோய்தான். அதை நீக்குபவர் பசிபிணி மருத்துவர். பசி வந்திட பத்தும் பறந்துபோகும் என்பர். பத்து என்பது பத்து பொருள்கள். இதற்கெல்லாம் மருந்து உணவேயாகும்.

பெரிய புராணத்தில் சில நாயன்மார்கள் போர் செய்தும், சூதாடியும், களவு செய்தும், கொலையும் செய்தும் பொருள் ஈட்டினர். அதனைக் கொண்டு அன்னதானம் செய்தனர். அதனால் அவர்கள் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டனர். அதனால் தான் தானங்களில் சிறந்த தானம் அன்னதானமே என்று உலகம் போற்றுகிறது.

அன்னதானத்தில் பலவகை உண்டு உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்துக் கொண்டாடி உண்பதற்கு ''விருந்து'' என்று பெயர். அம்மா தாயே பசிக்குது என்போர்க்கு கொடுப்பது ''ஐயம் இடுதல்'' என்று பெயர். கோயிலில் அன்னத்தை இறைவனுக்குப் படைத்து அதை பக்தர்களுக்கு விநியோகிப்பதை ''பிரசாதம்'' என்று கூறுவர். இதில் திருவருள் பிரசன்னம் ஆவதால் அது பிரசாதம் ஆனது. சிவநெறி செல்வர்கள். தீட்சைப் பெற்ற சிவனடியார்கள், ஆசாரியர்கள், யோகிகள், ஞானிகள், சித்தர்கள் போன்றவர்களுக்கு உணவு அளிப்பதை ''மாகேஸ்வரபூசை'' என்பார்கள். மகேஸ்வரபூசை அல்ல, மாகேஸ்வரபூசை. மகேஸ்வரன் இவர்களின் வடிவில் வந்து பூசையை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.

மாகேஸ்வரபூசை செய்ய சில வழிமுறைகள் உண்டு. பக்தியும் பரிவும் கயிலாய அமிழ்தளிப்பாய் மலர்தலும் வேண்டும். சிவனடியார்களை அன்புடன் வரவேற்க வேண்டும். பாதபூசை செய்ய வேண்டும். இருக்கை கொடுத்து அமரச் செய்ய வேண்டும். ''ஓம் நமசிவாய'' போன்ற மந்திரங்களைக் கூறி மலர் வழிபாடு செய்ய வேண்டும். தூப தீபம் கற்பூரம் காட்ட வேண்டும். பின் அவர்களிடமிருந்து திருநீறு பெற்று ஆசி பெற வேண்டும்.

தலைவாழை இலை போட்டு அவர்களை அமரச் செய்து அறுசுவை உணவை பரிமாற வேண்டும். திருமுறைகள் ஓதி அடியார்களுக்கும் திருவமுதிற்கும் கற்பூரம் காட்ட வேண்டும். அடியார்களை வணங்கி உண்ணுமாறு வேண்டுதல் வேண்டும். அதுவரை யாரும் உண்ணக்கூடாது. உண்டு முடிந்ததும் இலையைச் சுற்றி நீர் உலாவி எஞ்சிய உணவை பரிகல சேடமான உணவாக குரு பிரசாதமாக எண்ணி குடும்பத்தார் உண்ணவேண்டும். பின் இலையை மூடாமல் நிறைவு செய்ய வேண்டும். இதுவே மாகேஸ்வரபூசை ஆகும். இப்பூசையை சிலர் மிக விரிவாக ஒரு சடங்கையும் விடாமல் செய்வர். சிலர் நேரம் கருதி சில சடங்குகளை விட்டு சுருக்கமாக நிறைவு செய்வார்கள்.

மாகேஸ்வர பூசையால் ஏற்படும் நன்மைகளாவது சிவனடியார்களுக்கு அளிக்கும் பொருள்கள் மும்மூர்த்திகளுக்கும், 21 தலைமுறை முன்னோர்களுக்கும் சேரும். ஒரு ஞானிக்கு அளிக்கும் ஒரு வேளை உணவு 1000 அறங்களுக்கும் மேலானது. சிவ தத்துவத்தில் மாகேஸ்வரத் தத்துவம் செல்வங்களைக் கொடுததும், செல்வங்களை மறைத்தும் வைத்திருக்கும். மாகேஸ்வரபூசையால் குபேர வாழ்வும், சிவ பெருமானின் முழு அருளும் கிட்டும்.

சிவஞான போதம் தமிழ்நூல் - ஆய்வு

சென்ற இதழ் தொடர்ச்சி...

சித்தாந்த ரத்தினம். இர. சீனிவாசன். (எம்.பில்), சிதம்பரம்.

மேலும் நந்தியெம்பெருமான்பால் ஞான உபதேசம் கேட்ட முனிவர்களில் திருமூலரும் ஒருவராவார். அவர் திரு மந்திரத்தில்

''இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே''

என்று வாக்குமூலம் அளித்துள்ளார். பரஞ்சோதி முனிவருக்கு முற்பட்டவர் திருமூலர். ஆகவே தமிழ்மொழியில்தான் வேத ஆகம நூல்கள் முதலில் தோன்றின என்பதை நாம் அறியலாம். எனவே சிவஞானபோதம் வடமொழியில் இருந்து மொழி பெயர்க்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இரௌவ ஆகமத்தின் கையெழுத்துப்படிகள் இப்போது கிடைத்துள்ளன. அவற்றில் வடமொழிச் சிவஞானபோதம் காணப்படவில்லை. அவ்வாறாயின் சிவஞான சுவாமிகள் அவ்வாறு கூறியதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இதற்கு விடையாக ''சைவசமயதோற்றமும்வளர்ச்சியும்'' என்றநூல்.பக்கம் 106 இல் டாக்டர். திரு. டி.பி. சித்தலிங்கம் அவர்கள் விளக்கியுள்ளகருத்துபின்வருமாறு.''சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே ஆகும். சிவஞான போதத்தின் கருத்துக்களை வடமொழி உலகிற்கு எடுத்துக் காட்டியவர் அதனை தமிழில் இருந்து வடமொழிக்கு மொழி பெயர்த்து, அதற்குச் சிறப்பிடம் தருவதற்காக இரௌவ ஆகமத்தில் பாசமோசனப் படலத்தின் ஒரு பகுதி என்று குறிப்பிட்டிருக்கலாம். இதனை பின் வந்தவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்''. என்று சிறப்பான விளக்கத்தைக் கூறியுள்ளார்கள். எனவே சிவஞான போதம் மொழி பெயர்ப்பு நூல் இல்லை என்றும் முழுக்க முழுக்க தமிழில் தோன்றிய

முதல் நூல் என்றும் அறியலாம்.

மேலும் ஓர் எடுத்துக்காட்டு, தமிழ் முருகக் கடவுளை "வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி" என்று அழைக்கிறோம். இங்கு ஓர் வினா? வள்ளியை முருகப் பெருமான் முதலில் மணந்தாரா இல்லை தெய்வானையை முருகப் பெருமான் முதலில் மணந்தாரா ? தெய்வானையை முதலில் முருகன் திருமணம் செய்து கொண்டார். தெய்வானை, வள்ளி சமேதய என்று எழுதாமல், சொல்லாமல், மாற்றி வள்ளி, தெய்வானை சமேத என்று கூறுகிறோம். காரணம் வேடர் குலத்தில் தோன்றிய வள்ளியைப் பெருமைப்படுத்தவே என்பதை நாம் அறிகிறோம். இதே போல் தான் சிவஞானபோதம் வடமொழியில் வந்தது என்று கூறுவர். இது உண்மை அல்ல. ஆரியர்கள் செய்த சூழ்ச்சிதான் காரணம். மேலும் தமிழில் முதலில் தோன்றிய நூல்கள் எல்லாம் வந்தன என்று கூறுவர். இது சரியில்லை. முற்றிலும் தவறுடையது.

மேலும் ஓர் எடுத்துக்காட்டு. தமிழில் தோன்றிய திருக்குறள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதை இன்று உலகில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் தாய்மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். ஆனால் யாரோ ஒருவர் வேறுமொழியில் இருந்து குறளை தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்தனர் என்று கூறினால், அது நகைப்புக்கு உரிய செய்தியாகும். அதே போல்தான் சிவஞானபோதம் வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்த்தனர் என்று கூறுவது பொருந்தாது ஆகவே சிவஞானபோதம் என்னும் நூல் தமிழில் தோன்றிய முதல் நூல் என்பது உள்ளங்கையில் நெல்லிக்கனி என்பது போல தெளிவாகின்றது.

இறுதியாக உலகில் தோன்றிய மொழி தமிழ் என்பதும், தமிழ்மொழி இந்தியா மட்டும் இல்லாமல் உலகம் பரவி பேசிய மொழி என்பதும் தெளிவாகின்றது. பரஞ்சோதி முனிவருக்கு முன்பட்டவர் திருமூலர் என்பதும்,பரஞ்சோதிமுனிவர்தமிழ்நாட்டில்தமிழ்மொழி பேசிய மக்களுக்கு தமிழில், மெய்கண்டாருக்கு அருள் உபதேசம் செய்தார் என்பதும் தெளிவாகின்றது. மேலும் இரௌவ ஆகமத்தில் இப்போது கிடைத்துள்ள நூலில் வடமொழியில் உள்ள சிவஞானபோதம் இல்லை என்பதாலும், இதற்கு விடை திரு. டி.பி. சித்தலிங்கம் ஐயா அவர்கள் கூற்று ஏற்றுகொள்ளும்படியாக உள்ளது. ஆகவே முற்றிலும் சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே என்று ஐயமின்றி தெரிகிறது. சிவஞானபோதம் மெய்கண்டாரைக் குறித்துத் தாயுமானவர்,

"பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்துவித
மெய்கண்டநாதன் அருள் மேவுநாள் எந்நாளோ,"

என்று அருளிச் செய்தார்.

மெய்கண்டார் திருவடிகள் போற்றி ! போற்றி!

சிவாயநம!

உறவுகளுடன் உல்லாசப் பயணம்

அரியலூர் நகர கார்காத்தார் உறுப்பினர்கள் எட்டு குடும்பத்தைச் சார்ந்த 17 உறுப்பினர்கள் 28–05–2024 முதல் 30–05–2024 முடிய மூன்று நாட்கள் உல்லாசப் பயணம், 27–ஆம் தேதி நள்ளிரவு 12.00 மணிக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய வேனில் புறப்பட்டோம். 28–ஆம் தேதி முதல் நாள் காலை 6.00 மணிக்கு மருதமலை முருகன் கோயில் சென்றடைந்தோம். அங்கு குளித்து, காலை சிற்றுண்டி முடித்து முருகனை தரிசித்தோம். பின்னர் ஈஷா யோக மையம் பார்த்து மதிய உணவு உண்டோம். அங்கிருந்து வ.உ.சி வன உயிரியல் பார்த்துவிட்டு அருகில் இருந்த அரசுப் பொருட்காட்சியை பார்த்து இரவு உணவுக்குப் பின் ஆனைமலையில் உள்ள ரிசார்ட்டில் தங்கினோம். இரண்டாம் நாள் காலை மாசாணியம்மன் கோயில் தரிசனம், காலை சிற்றுண்டி முடித்து டாப் சிலிப் சென்று அங்குள்ள வேனில் சுற்றிப் பார்த்தோம். யானைக் கூட்டம், காட்டு எருமை, மயில், கருங்குரங்கு போன்ற உயிரினங்களையும் இயற்கையை ரசித்தும் தேநீர் அருந்தி அங்கிருந்து புறப்பட்டு பரம்பிக்குளம் புலிகள் காப்பகம்சென்றோம். அங்கிருந்துவனத்துறை அலுவலர் வழிகாட்டுதலுடன் பரம்பிக்குளம் அணைக்கட்டும், வனவிலங்குகளையும் கண்டு மகிழ்ந்தோம். மதிய உணவு முடித்து ஆழியார் அணை வழியாக இரவு வால்பாறையில் தங்கும் விடுதிக்கு இரவு உணவுடன் எல்லோரும் அவரவர் அறைக்கு சென்றோம்.

மூன்றாம் நாள் காலையில் குளித்து முடித்து விடுதியில் காலை உணவு முடித்து வால்பாறை புகழ்பெற்ற பாலாஜி கோயில் சென்று தரிசனம் செய்தோம். கோயிலுக்கு 1 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டும். அப்படி மலைமேல் ஏறியது முதியவர்களுக்கு கடினமாகவும் அதே சமயம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. பின் மதிய உணவு முடித்து கல்லார் அருவி, கூழாங்கல் அருவி ஆகியன கண்டு மகிழ்ந்தோம். மாலை வால்பாறையிலிருந்து திரும்பி வரும்பொழுது அறிவுத் திருக்கோயில் பார்த்து இரவு ஒட்டன்சத்திரத்தில் சிற்றுண்டி முடித்தோம். பின்னர் அங்கு வேன் ஓட்டுநர் சிறப்பாக பணியாற்றியமை குறித்து பொன்னாடை அணிவித்து பாராட்டினோம். சுற்றுலா சென்று வந்ததின் நினைவாக உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

சுற்றுலாவின் போது எங்களுடன் வந்த திரு. இரா. பாலகிருஷ்ணன் வனத்துறையில் பணியாற்றியவர். அதனால் அவர் பரிந்துரை செய்ததின் பேரில் சலுகைகளை பெற்று தந்தார்.

சுற்றுலாவிற்கு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட்ட சங்கத் தலைவர் திரு. கு. பாலகிருஷ்ணன், இணைச்செயலாளர் திரு. S. மகாலிங்கம் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூற உல்லாசப் பயணம் இனிதே நிறைவேறியது.

"அவ்வினைக்கு இவ்வினையாம்"

– கோலாகலன்

நரிக்குடி ஏரிக்கரை. அதில் அடர் நிழல் தரும் அழகிய ஆலமரம் அதனடியில் சிவகாமிசித்தர். அவர் எதிரில் ஏழெட்டுப் பேர். அக்கூட்டத்தைக் கண்ட ஆண்டால் உடன் நின்றது. இறங்கிய ஆறு பேரும் தருமையாதீன சைவ சிந்தாந்தப் பயிற்சி மாணவர்கள். தன் இன்முகத்து இன மறுவலால் வரவேற்ற சித்தரை வணங்கினர் மாணவர்கள். சித்தரின் விழிமொழி அவர்களை அமரச் சொன்னது.

அறிமுகத்துக்குப்பின் குஞ்சிதபாதம் ஐயா "அவ்வினைக்கு இவ்வினையாம்" என்பதற்குப் பொருள் விளக்கம் சொல்லியருள வேண்டும் சுவாமி என்றார்.

சிரித்த சித்தர் பேசறுற்றார். "பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் பாண்டிய மன்னன் தனது அரண்மனை உப்பரி கையில் இருந்தான். செந்தமிழ்ச் சொற்களை நெஞ்சிலே நினைத்து போற்றிக் கொண்டிருந்தான். கயிலாயத்தைக் காண வேண்டும் என்ற விண்ணப்பம் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஏதோ ஒன்று மேலிருந்து கீழே விழுந்தது. அதனை எடுத்து நிமிர்ந்தான் மன்னன். ஒரு சித்தர் விண்ணிலிருந்து இறங்கினார்.

அதனைக்கண்ட மன்னன் அதிர்ச்சியும்வியப்பும் அடைந்தான். அவற்றினின்றும் மன்னன் மீள்வதற்குள் சித்தர் "தென்னவா! தமிழ் மன்னவா! வணக்கம். நீ குனிந்து எடுத்த குளிகை என்னுடையது. நான் சித்தன். அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவன். இலகிமா வழி என் உடலை மிகவும் இலேசானதாக எடையின்றி மாற்றிக்கொள்வேன். குளிகையை வாயில் போட்டுக் கொண்டதும் விமானம் போல் பறவையைப் போல் விண்ணில் விரைந்து செல்வேன். குளிகையில்லை என்றால் என்னால் இயங்க வியலாது. எனவே அருள் கூர்ந்து என் குளிகையை என்னிடமே தரவேண்டுகிறேன் மன்னா"

"தமிழ்ச்சித்தரே! முதலில் வணங்கி வரவேற்கின்றேன். உங்கள் பொருள் உங்களிடமே வரும். கவலையற்க. ஆனால் தாங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும். "முடிந்ததைச் செய்கிறேன், விருப்பத்தைக் கூறினால் "எனக்கு திருக்கயிலாயம் சென்று இறைவனைத் தரிசிக்க விருப்பம்", மன்னன், "இது என்னால் இயலும், புறப்படலாம்." குளிகை கைமாறியது. மன்னன் தன் செங்கோலுடன் புறப்பட்டான்.

சித்தரும் அரசரும் திருக்கயிலாயம் சென்றனர். மலை, மண்ணாலும் கற்பாறைகளாலும் ஆன ஒன்று. ஆனால் கயிலாயம் பொன் மண்ணாலும் பொற்பாறைகளாலும் ஆனது. திருமுன்னர் செங்கோலுடன் செல்வது தகாது. அருட்செங்கோலோச்சி வரும் இறைவன் முன் இது வேண்டாம் என்று எண்ணிய மன்னன் செங்கோலை பொன்மண்ணில் நட்டு வைத்து விட்டுப் புறப்பட்டான். முருகர், விநாயகர், நந்நி, அம்மையப்பர் ஆகியோரைக் கண்ணறக்கண்டான் சித்தரின் உதவியால். அனைத்துத் தேவர்கள், பூத கணங்கள், மால், அயன் என எல்லோரையும் காணும் வாய்ப்பினைப் பெற்றான்.

திரும்புகையில் தான் நட்டு வைத்தத்தனது செங்கோலை எடுத்தான். அதன் அடியில் பொற்றுகள் மண்போல ஒட்டியிருந்தன. அதனைத்துடைத்து அகற்ற எண்ணினான். உடனே மனம் மாறியது. கயிலாயப் பொன் மண் நம் நாட்டிற்குக் கொண்டு செல்வது சிறப்பும் புனிதமும் அல்லவா என்று எண்ணினான். பொன் மண் ஒட்டிய அச் செங்கோலுடன் சித்தர் உதவியால் அரண்மனை வந்தடைந்தான் அரசன். சிவன் சொத்து செங்கோலுடன் மதுரை வந்துவிட்டது. கொடுத்த சொத்து தங்கும். எடுத்த சொத்து உரியவனிடமே சென்று சேரும். இதுவே அறம்.

திருவாதவூரர் அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். அறிவிற் சிறந்த அவரை அரிமர்த்தன பாண்டியன் தன்னுடைய நாட்டுக்குத்தலைமை அமைச்சராக்கினான். தென்னவன் பிரம்மராயன் என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தான். அவர் நடுவு நிலைமை தவறாமல் நீதியை நிலைநாட்டி வந்தான்.

ஒரு நாள் மன்னன் அச்சரை அழைத்தான். நம்நாட்டில் குதிரைப் படை எண்ணிக்கையில் குறைந்துவிட்டது. களப்போரில் பாதிக்குதிரைகள் வீரமரணம் அடைந்தன. காலக்குதிரை மீதிக்குதிரைகளை முப்பாக்கிவிட்டது. எனவே தாவும் குதிரைகள் நம் படைக்குத் தேவை. எனவே நீங்கள் வழித்துணையுடன், அறந்தாங்கிக்கு அருகில் உள்ள ஏம்பல் நகருக்குச் செல்லுங்கள். அங்கு பல தேசத்து வாளிப்பான குதிரைகள் வந்துள்ளன என ஒற்றர் தலைவன் வந்து உரைத்தான். இதோ பன்னீராயிரம் பொற்காசுகள். நல்ல குதிரைகளைப் பொறுக்கி வாங்கிக் கொண்டு வாருங்கள்!" "உத்தரவு மன்னா!" என்ற அமைச்சர் சோமசுந்தரம் பெருமானை வணங்கிவிட்டு ஏம்பல் நோக்கிப் புறப்பட்டார். திருப்பெருந்துறையை நெருங்கினார். செவிகளில் ஓம் நமசிவாய ஒலி மெல்ல புகுந்தது. பயணம் தடைபட்டது. ஒலி வந்த திசையை நோக்கிச் சென்றார். அங்கு மாணவர்கள் அமர்ந்திருக்க எதிரில் குருவடிவில் ஒருவர் குந்தியிருந்தார். இவர் பார்த்தார். ஈர்ப்பின் வேகம் அதிகமானது. அருகில் சென்றார். குருவின் கையில் ஓர் ஓலைச்சுவடி. எட்டிப்பார்த்துப் படித்தார். தலைப்பு "சிவஞானபோதம்" என்று எழுதியிருந்தது. உடனே தலையமைச்சர் தான் இத்தலைப்பில் ஏதும் படிக்கவில்லையே. இது என்னவாக இருக்கும் என்று எண்ணினார். உடனே அது என்னவென்றார்; அதன் பொருள் என்னவென்றார்.

தொடரும்...

மின்னொளி நகரில் பொன்னொளி வீசிய நெய்வேலி சைவ வேளாளர் நலக்கழகம் - பொன் விழா.

சங்க பொன் விழா ஆகஸ்ட் 10 மாலை கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் தங்கள் திருக்கரங்களால் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து அனைவருக்கும் அருளாசி மற்றும் அருளுரையும் வழங்க இனிதே பொன்விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. சுவாமிகளின் அருட்கரங்களால் பொன்விழா மலரும் வெளியிடப்பட்டது. மகளிர் அணியினர் வழங்கிய உறவுகளே எதை நோக்கி என்கிற சமூக நாடகம் சமகால அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் அதனால் சிதைவுற்ற மனித மனம் எவ்வாறு உறவுகளை விட்டு விலகிச் செல்கிறது. மீண்டும் உறவுகளை ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தை காட்சிகளாக்கி கதாபாத்திரங்கள் வசனம் எதுவும் பேசாமல் பார்வையாளர்களைப் பேச வைத்துவிட்டனர்.

அடுத்து விவசாயத்தின் முக்கியத்துவம் உணர்த்திய நேற்று இன்று நாளை வேளாளர்கள் எக்காலத்திலும் தங்களின் வேர்த்தொழிலை மறக்கக் கூடாது. வேளாண்மை நம் உயிர் என்பதை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அருமையான கதைக்கரு. அதற்கேற்ற பாடல்கள். பின்புலக் காட்சிகள் என நாடகம் நெஞ்சை அள்ளியது.

மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் மதிப்பிற்குரிய முனைவர் திரு. கே.கே.ஆர்.கே. சுரேஷ் பிள்ளை அவர்கள் நிகழ்த்திய சிறப்புரையில் மேடையில் அரங்கேறிய நாடகத்தை மேற்கோள் காட்டி சமகால உறவுச்சிக்கல்களைப் பற்றிக் குறிப்பிட்டார். சைவ சமூகத்தின் குரல் "ஒப்புரவு" இதழை தொடர்ந்து நடத்த நிதி தேவைப்பட்டபோது நெய்வேலி சைவ நலக்கழகத்தினர் பெரிதும் நிதி திரட்டி உதவியதை மகிழ்வோடு நினைவூட்டினார்.

ஆகஸ்ட் 11–ஆம் தேதி ஆரோக்கிய வாழ்வுக்கு யோகா என்னும் உரையுடன் தொடங்கின காலை நிகழ்ச்சிகள் திருமணத்துக்குப் பிறகு மகிழ்ச்சியாக இருப்பது ஆண்களா? பெண்களா? என்கிற தலைப்பில் சுவாரசியமான பட்டிமன்றம் நடைபெற்றது. உடற்பயிற்சியின் தேவை குறித்து செய்முறை விளக்கங்கள் வல்லுனரால் நிகழ்த்திக் காட்டப்பட்டன. அதற்குப்பிறகு வயது முதிர்ந்தவர்களுக்கு, தம்பதிகளுக்கு, குழந்தைகளுக்கு ஆண்கள் பெண்கள் குழுக்களுக்கு, தனித்திறன் படைத்தவர்களுக்கு என ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற கலகலப்பான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. வென்றவர்களும் வெற்றி வாய்ப்பை நெருங்கியவர்களும் தங்களை மறந்து குழந்தைகளாக உருவெடுத்த அற்புதமானத் தருணங்கள் அவை.

மாலையில் மகளிர் அணியினர் பங்கேற்ற சர்வம் சிவசக்தி மயம் கண்ணப்ப நாயனாரின் அதீத பக்தியை முன்னிறுத்தி கண்ணெதிரே கயிலாயத்தையும், ஈசனையும் உமையவளையும் கொண்டு வந்து நிறுத்தி பார்வையாளர்களை சில மணித்துளிகள் பிரம்மாண்டத்தின் உச்சிக்கே கொண்டு சென்றனர். பக்தி பரவசத்தில் மண்டபம் தேவலோகமானது வாழ்த்துரை வழங்கிய ராதா இஞ்சினியரிங் நிறுவன நிர்வாக இயக்குனர் திரு. வி.ஆர். செந்தில்குமார் அவர்கள் மறைந்த மாமனிதர் விளாகம் ராமலிங்கம் பிள்ளை அவர்களின் தொலைநோக்கு பார்வையை நெய்வேலி சைவ வேளாளர் நலக்கழகம் பொன்விழாவில் நிறைவேற்றினார்கள் என்று பாராட்டினார். சிறப்புரை நிகழ்த்த வந்த மரபின் மைந்தன் முத்தையா அவர்கள் நாடகத்தின் பிரம்மிப்பில் தானும் அமிழ்ந்து தனது அற்புத உரையால் அரங்கத்தையும் மூழ்க வைத்தார். சிவநெறி குறித்தும் கண்ணப்ப நாயனாரின் பக்திப் பெருக்கு குறித்தும் அழகாக உரையாற்றிய முத்தையா அவர்கள் சமகாலத்தில் நாம் செய்ய வேண்டிய இறைக் கடைமைகள் குறித்தும் அழகாக உரையாற்றினார். நிகழ்வில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய சாதனையாளர்களுக்கு விருதுகளும், கல்வியில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு முன்னாள் பொறுப்பாளர்களுக்கு நினைவுப்பரிசுகளும், பொன்னாடைகளும் வழங்கப்பட்டன.

நெய்வேலி சைவ வேளாளர் நலக்கழகத்தின் தலைவர் திரு. வை. சேகர் பிள்ளை, பொதுச்செயலாளர் திரு. ச. பாலச்சந்திரன் பிள்ளை பொருளாளர் திரு. பா. சத்தியமூர்த்தி பிள்ளை, துணைத்தலைவர் திரு. ஆ. ஆறுமுகம் பிள்ளை, துணைசெயலாளர் கு. திருவரசன் பிள்ளை, மகளிரணித் தலைவி திருமதி. ஸ்ரீவித்யா நடராசன் ஆகியோர் விழா நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்தி பொன் விழாவை வெற்றிகரமாக நடத்தி சிறப்பித்தார்கள்.



ஊழ்வினை

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஞான. அம்புலி.

இந்து மதம் இறையருள்பால் அமைந்துள்ளது. ஆதலால் மறு பிறவி, வினைப்பயன் போன்றவற்றில் இம்மதத்தோற்கு ஆழ்ந்த ஈடுபாடு உள்ளது. இறைவனைப் பற்றிய செய்திகளை மறுத்திடும் சமணமும் பௌத்தமும் மறுபிறவியின் அடித்தளத்தை ஏற்றுக்கொள்கிறது. வினைப்பயனைப்பற்றி பெருவாரியாக ஒப்புக்கொண்டாலும் அதனை விதிப்பயன் என குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் ஊழ்வினையின் பெறும்பான்மை விஷயங்களை விதிப்பயனோடு ஒப்புக்கொண்டாலும் விதிப்பயனை எவராலும் கூட்டிடவோ கழித்திடவோ முடியாது எனத் தீர்மானமாக கருதுகின்றனர். இருந்தாலும் இறையருள் பெற்றோர், கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கும் போது அவைகளின் தாக்கத்தின் தன்மை குறைவாகவே இருப்பதை இந்துமதம் ஆயிரம் விளக்கங்களோடு நிறுபித்துள்ளது.

தனது செய்வினைகளிலிருந்து எந்த உயிரும் எள்ளளவும் தப்பிக்க முடியாது. பூவான நிலையில் பூத்துக் குலுங்கிடும் மலர்கள் காயாய் கனியாய் ஆகும்போது இலைமறை காயாய் இருப்பது போல் வினைப்பயன் ஒளிந்திருந்து உரிய தருணத்தில் அனுபவிக்க வேண்டிய காரியங்களை அனுபவித்தேவாழவிடும். உதாரணத்திற்கு கண்ணகி கோவலன் வரலாறு; கள்வன் என்று பழிசுமத்தப்பட்டு கோவலன் சாகடிக்கப்படும் நிலையில் பொங்கியெழும் கண்ணகியின் கொடுஞ்சொற்களால் மதுரை மாநகரமே தீயிக்கு இறையாயிற்று. இச்செயல்கள் திடீரென தற்காலிகமாக நிகழ்ந்தவை அல்ல என்று சொன்ன இளங்கோவடிகள் இது சம்மந்தப்பட்ட முன்வினை நிகழ்வினையும் குறிப்பிட்டுள்ளார். சங்கமன் என்ற வணிகன் தன் மனைவி நீலியுடன் வணிகம் செய்து கொண்டிருந்தபோது பரதன் என்ற ஒருவன் சங்கமனை ஒற்றன் என அரசனிடம் பொய் கூறி கொலை செய்திட காரணமாகிறான். கொதித்தெழுந்த சங்கமனின் மனைவி நீலி எனக்கு மீளா துன்பம் இழைத்தவனின் மனைவி என்னைப்போல கதறவேண்டும் எனச் சொல்லி தற்கொலை செய்துகொள்கிறாள். இந்நிகழ்வில் சம்மந்தப்பட்ட பரதன் அடுத்தஜென்மத்தில்கோவலனாகப் பிறந்து ஊழ்வினையால் உயிர் துறக்க பின்னர் கண்ணகி மதுரையையே எரித்துவிட்டு தன்னுயிர் துறக்கும் சம்பவம் நடைபெற்றது.

மனித இனவாழ்க்கை கூட்டுக்குடும்பம் Concept-ல்இயங்கிவருகிறது. குடும்ப உறுப்பினர்களின் நலன்களை பாதுகாப்பது, துக்கங்களை பங்கு கொள்வது, சொத்தில் பங்கு கொடுப்பது போன்ற நிகழ்வுகளை நடத்தும்போது ஊழ்வினைப்பயன் உருவாகி அவைகள் குடும்ப தலைவனின் ஊழ்வினை தொகுப்பில் சேரும் காரணத்தால் அந்ததொகுப்பில் ஒரு பாகத்தை வாரிசுகளிடம் கொடுத்திட முடியுமா என கேள்வி அவ்வப்போது எழுப்பப்படுகிறது. இது பற்றி ஒரு அலசல்.

ஊழ்வினை என்பது ஒரு மனித குலம் சார்ந்த ஒரு தனிப்பட்ட உயிரின் வாழ்க்கை முறையில் செயல்பட்ட காரியங்களுக்கான வரவு செலவு எனலாம். இந்த கணக்கில் அத்துணை அம்சங்களும் ஒரு தனி மனித வாழ்க்கையின் மொத்த விபரமாகும். எனவே இதனை பிரிக்கவோ அல்லது வேறு ஒருவரின் வினைப்பயன் தொகுப்பில் சேர்க்கவோ முடியாது. தனது குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன செய்ய வேண்டும். எப்போது செய்ய வேண்டும். எவ்வளவு செய்ய வேண்டும். போன்றவைகளெல்லாம் Compulsory-யும் இல்லை. செய்யப்படாததால் தனிநபர் ஊழ்வினை தொகுப்பில் கூட்டலோ கழித்தலோவும் இல்லை. இறைவன் படைப்பில் அனைத்தும் அனைவருக்கும் ஒரே வழி என்பது பொது விதி அல்லவா! எனவே ஒருவரது வினைப்பயன் எந்த காரணத்தாலும் எந்த நிலையிலும் வேறு ஒருவரின் வினைப்பயனியில் சேர்த்திடல் ஆகம விதிகளுக்கு புறம்பானது. ஆதனின் இம்மியளவும் இயலாதது எனலாம். நெறிசல் வாழ்க்கையில் தனித்துவம் காப்பாற்றப்படும் என்பது காலம் நமக்கு கற்பித்த பாடமாகும். ஊழ்வினை அது தரும் சுக துக்கங்களுக்கு அப்பால் தனித்தன்மை வாய்ந்ததே! வேறு மாசுபடமுடியாத இறைவன் அளித்த வரப்பிரசாதம் ஆகும் ஒரு உயிர் ஒரு பிறவியின் காலத்தில் ஓடியாடி சேர்த்த ஊழ்வினை எனும் சொத்தோடுதான் மறுபிறவியில் பிறந்து வாழ்ந்திட இயலும் என்பது இயற்கையின் நியதி. நல்ல ஊழ்வினையானது கடைசி பிறவி என்றொன்று உண்டெனில் அது வரை உடன்வரும் உறுதுணைவன், ஆபத்பாண்டவன் ஆவான்.

'நாம் செய்யும் செயலுக்கேற்ற விளைவே வினை. வினைதான் விதி! வினை வேறு விதி வேறல்ல! அவனவன் செயலுக்கேற்ப இன்பமும் துன்பமும் நிழலாய் தொடரும்' என்றார் கவிஞர் பூங்குன்றனார்.

வினையும் விதியும் ஒன்றென்றால், நற்றினை மட்டும் செய்திட்டு விதியை வெல்ல நினைக்காமல் விதி வழி செல்வது சாலச் சிறந்தது என யோசித்தல் நலமே. ஆயின் ஆயிரம் பிறவிகள் எடுத்தாலும் செய்த நற்பயன் நம்மை காக்கும் என்பதால் 'விதி வழி கொடியது விதியை மதியால் வெல்லலாம் போன்ற வாசகங்களை தூக்கி எறிவோம். வேறு வழி இல்லை என்பதறிந்ததோடு மட்டுமல்லாமல் பிறவிப்பலன் பெறுவதற்குத்தான் வாழ்க்கை எனப்புரிந்து விதி வழி வாழ்க்கை நலன் பல தரும் என்பதை உள்ளுணர்ந்து உய்வோம். எடுத்துக்கொள்ளும் காரியத்தின் உச்சம் தொட வழியை முடிவு செய்தாலும், நம்புலன்களுக்கு புலப்படாமல் வேறு ஒரு பாதையில் பயணிக்க நேர்ந்தால் அதுவே 'வினைவழி விதிப்பாதை' எனக்கொள்ளலாம். எத்துணை பிறவிகளும் எடுத்தாலும் அத்துணையிலும் நல்லதே மட்டும் நடந்திட்டால் ஊழ்வினையின் தாக்கம் தாமரை இலை தண்ணீராய் வழிந்தோடிவிடும்.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/9 செல்வி **Dr. V. Priyadharshini** Uthradam 4th Patham Koodaluda பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram விருப்பம் : Middle / Upper Middle Class Carring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor.	Jan. 1995 5' - 2"	Internal Medicine M.D., .	Sr. Resident Doctor at a Private Medical College, Chennai Rs. 12-18 Lakhs/PA	திரு. J. Venugopalan, B-703, Solitaire Appartments, Mount Poonamallee High Road, Porur, Chennai - 600 116 Cell : 99404 77263, 98949 28283 E-mail : venugopalan_ j@yahoo.com
B 2/9 செல்வி **R. சுகன்யா** ரேவதி முதனுட பூர்வீகம் : பெரியகோட்டகம் – காட்டுமன்னார்கோவில் விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன்	04.09.93 5' - 4"	B.E. (CSE)		திரு. K. இராஜேந்திரன், பெரிய கோட்டகம், செட்டித்தாங்கள் (அஞ்சல்), கடலூர் மாவட்டம் – 608 304. Cell : 90944 14719, 99521 55584
B 3/9 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் 4ம்பாதம் பழுவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : 94447 11045, 99416 20355
B 4/9 செல்வி **S. கமலலெட்சுமி** அவிட்டம் காலிங்கராய பூர்வீகம் : திருநெல்வேலி விருப்பம் : பணியில் உள்ள வரன்	9.1.2000 160 cm	MCA	System Engineer, Infosys Chengalpet, Rs. 4 Lakhs/PA	திரு. S. சண்முகம், No. 5, லட்சுமி நகர், மேலமையூர், வல்லம் POST, செங்கல்பட்டு Dt. - 603 002. Cell : 74023 74666
B 5/9 செல்வி **S. சுவாதிபிரியா** சுவாதி சாத்தனுட பூர்வீகம் : பெருந்தோட்டம் (சீர்காழி–மயிலாடுதுறை மாவட்டம்) விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன்	3.6.2001	MCA		திரு. M. சண்முகம், 6/97D, கல்லூரி சாலை, மேலையூர், பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம் Cell : 94436 77775, 94437 15368
B 6/9 செல்வி **ஜெ. வினோதினி** ரோகிணி பொன்னாமுட பூர்வீகம் : கெளுத்தூர்	29.6.2000 153 cm	BE (EEE)	Cognizant Rs. 7.5 Lakhs/PA	திரு. ச. ஜெயக்குமார், 323/2, மூப்பனார் நகர் முதல் தெரு, உள்ளூர், செட்டி மண்டபம், தஞ்சாவூர் மாவட்டம் Cell : 97877 39086
B 7/9 செல்வி **S. விஷ்ணுபிரியா** ரோகிணி காங்கவராயர் பூர்வீகம் : மலைக்குடிபட்டி, புதுக்கோட்டை மாவட்டம். விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன்	23.08.2000	B.E (CSC)	IT - Pobo Technologies, Trichy Rs. 3.6 Lakhs/PA	திரு. S. சண்முகவேலாயுதம், IOB Opp. மலைக்குடிபட்டி, இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை (DT) – 622 102. Cell : 90807 62237
B 8/9 செல்வி **S. ஹேமா (எ) கீர்த்திகா** பூசம் வானதுறையான் பூர்வீகம் : சூரியனார்கோவில்	28.11.99 156 cm	M.Com., .		திரு. M. செந்தில்முருகன், 1/26, வடக்கு வீதி, சூரியனார்கோவில் (PO), திருவிடைமருதூர் (Tk), தஞ்சாவூர் (DT) Cell : 99763 36172, (W) 75981 95683

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 9/9 செல்வி **M. கௌஷிகா** திருவோணம் குருவில்ராய பூர்வீகம் : திருவிளையாட்டம் விருப்பம் : நல்ல பணியில் உள்ள பொருத்தமான வரன்.	13.8.2000 161 cm	M.Pharm.,		திரு. K. மணிவாசகன், NO. 1/182, NH3, Periyar Cross Street, Maraimalai Nagar - 603 209. Cell : **94436 71437, 94457 77365**
B 10/9 செல்வி **பி. பத்மபிரியா** பூரம் 1ம் பாதம் களப்பாலுட பூர்வீகம் : மறையூர் – மயிலாடுதுறை வட்டம் விருப்பம் : சமபடிப்பு, நிரந்தர பணி	29.09.97 5'	B.Tech. (Bio Technology)		திரு. கோ. பிச்சைரெத்தினம், HIG 3, தாமரை நகர் முதல் தெரு, திருவண்ணாமலை – **606 603.** Cell : **94439 11424, 94867 50636**
B 11/9 செல்வி **V. அக்ஷயா** ஆயில்யம் சேஷதரிய பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம் விருப்பம் : ஏற்ற வரன்	11.08.99 5'	B.Tech.,	Episource India P Ltd., Chennai Rs. 30,000/PM	திரு. C. வேல்முருகன், நந்தீஸ்வரமங்கலம் (PO), ஸ்ரீமுஷ்ணம் (TK), - 608 702. Cell : **99762 52642, 93616 06299**
B 12/9 செல்வி **வேம்பரசி (எ) தீபா** அஸ்வினி விஸ்வராய பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம் விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள வரன்.	13.08.98 155 cm	B.Com.,	IQ Back Office Ambattur, Rs. 4.6 Lakhs/PA	திரு. R. திருவரசமூர்த்தி, **117**, வேளாளர் தெரு, நந்தீஸ்வரமங்கலம் & PO, ஸ்ரீமுஷ்ணம் TK., கடலூர் DT. - 608 702. Cell : **93455 11868**
B 13/9 செல்வி **சீ. சிவநந்தினி** திருவோணம் காருட பூர்வீகம் : பூர்த்தங்குடி, சிதம்பரம்	25.11.98 167 cm	B.E., (EEE)	CAP Gemini Technology P Ltd., Chennai Rs. 10 Lakhs/PA	திரு. கி. சீனுவாசன் (லேட்), **13**, தேரடி பிள்ளையார் கோவில் தெரு, சிதம்பரம் – **608 001.** Cell : **97910 69494, 94871 69851**

ஆசிரியரைப் போற்றுவோம்

ஆசானாய் இருந்து ஆசனத்தில் அமர
வைக்கும் அற்புதமே!
நின்ற இடத்தில் நின்றிருந்து நிலாவைச்
சுற்றிக் காண்பிக்கும் வான்வெளியே!
பேனாவின் மைத்துளியாய் நாங்கள் முன்னேற
பாடுபடும் வியர்வைத் துளியே!
தன் பிள்ளைபோல் மற்ற பிள்ளைகளைப்
பார்க்கும் அன்னை தெரசாவே!
பனியாய் உருகி நதியில் நீரைப் பெருக்கும்
தியாகச் சுடரே!
மரமாய் வளர்ந்து சுவையான கனிகளை
அளிக்கும் தருவின் ஆணிவேரே!
கல்விச் சுடரை அணையாமல் காக்கும்
தூண்டுகோலே!
புத்தகமாய் நீ இருந்து எமக்கு பக்கங்களைக்
காட்டிய வழிகாட்டியே!
வானமாய் நீ இருந்து தாகத்திற்கு தண்ணீர்
தரும் மழைத்துளியே!
உப்பில்லா பண்டம் குப்பையிலே! நீ இல்லா
நாங்கள் இருட்டினிலே!
ஓடும் போது கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கும்
ஊன்றுகோலே!
முள்ளில்லா பாதையில் நாங்கள் வெற்றி
நடைபோட வெளிச்சம் காட்டும் ஒளிவிளக்கே!
மரம் நீ! கனி நாங்கள்! நீங்கள் எமக்கு கூறும்
தாரக மந்திரம் 'மீண்டும், மீண்டும் முளைத்து
வா'!
இதனை நினைவிலிறுத்தி அனைத்து
ஆசிரியரையும் வணங்கும்,

கார்த்திகா.

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/9 செல்வன் **மு. அருண்குமார்** விசாகம் –2ம் பாதம் களப்பாள பூர்வீகம் : குழுமூர் விருப்பம் : MBBS படித்த வரன்	15.10.96 175 cm	M.B.B.S., M.D.,		திரு. ஆ. முருகேசன், பெருமாள் கோவில் தெரு, குழுமூர், செந்துறை (Tk), அரியலூர் (DT) – 621 714. Cell : 97870 87695, 95859 15613 (W)
G 2/9 செல்வன் **இரா. சீத்தாராமன்** பூரட்டாதி இளமாங்குட பூர்வீகம் : இடைக்கட்டு	29.9.93 170 cm	DME (Tool & Die)	Dhanam Infra Chennai - 600 037. Rs 35,000/PM	திரு. சோ. இராமகிருஷ்ணன்பிள்ளை, லெட்சுமி ஸ்டோர் (மளிகை கடை), இடைக்கட்டு, உட்கோட்டை அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம் – 612 905. Cell : 96298 89261, 96298 89262 (W)
G 3/9 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyar	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	Zoho Corporation Chennai Rs. 24 Lakhs/PA	திரு. T. Ramalingam, 1/183, Perumal Koil Street, Sendurai Tk., Ariyalur Dt., Cell : 99655 57000
G 4/9 செல்வன் **V. கார்த்திகேயன்** அவிட்டம் அதுக்கனுட பூர்வீகம் : கருவாழக்கரை, மேழையூர் விருப்பம் : பணியில் உள்ள வரன்	18.11.96 175 cm	B.E. (CSC)	Hexaware, Siruseri Chennai Rs. 6 Lakhs/PA	திரு. V. வெங்கடாசலம் (LIC Advisor), 144, வண்டிக்காரத் தெரு, 5-A/84C, ரோஸ் நகர், லட்சுமி நகர், சித்தர்காடு, மயிலாடுதுறை – 609 003. Cell : 94431 09443, 94877 09443
G 5/9 செல்வன் **எஸ். சுதர்சன்** ரோகிணி நெப்புடையான் பூர்வீகம் : அம்பிகாபுரம்	28.08.97 170 cm	B.E (CS) MBA	System Engineer TCS, Chennai	திரு. S. சுகுமார், அம்பிகாபுரம், சோழமாதேவி – 612 902. கோடாலிகருப்பூர் வழி, Cell : 94435 64662, 63809 28662 E-mail : mohanskss64@gmail.com
G 6/9 செல்வன் **R. ரிஷிகேஷ்** சித்திரை 1ம் பாதம் வண்ணமுட பூர்வீகம் : காவனூர் – நெய்வேலி	06.11.99 166 cm	B.E., (Mechatronics)	ESIC, K.K. Nagar, Chennai Central Govt. Rs. 6L/PA	திரு. S. ரெங்கசாமி NLCIL, No. 181, NCV நகர், Old Neyveli - 607 802. Cell : 81440 50401
G 7/9 செல்வன் **Er. ப. செந்தில்குமார்** உத்திரம் செம்பதரிய பூர்வீகம் : நெடுவாசல் விருப்பம் : குணமுள்ள குடும்ப பாங்கான பெண்	13.04.95 180 cm	B.E. (EEE)	Molex Singapore Pte. Ltd., Singapore Rs. 2 Lakhs/PM	திரு. கு. பரமசிவம், வெள்ளாழ தெரு, நெடுவாசல், நல்லுச்சேரி (PO), சங்கரன்பந்தல் – 609 308, தரங்கம்பாடி (TK), மயிலாடுதுறை (Dist.) Cell : 98432 37325, 96296 96512
G 8/9 செல்வன் **SD. வெங்கட்ராமன்** அசுவினி முதல் பாதம் சாத்துகுட பூர்வீகம் : அவளிநல்லூர்	05.09.93 174 cm	B.E. Mechanical Engineering	Quality Engineer, Radha Engg. Works (P) Ltd., Oragadam Chennai Rs. 4,75,000/PA	திருமதி. D. நிர்மலா, W/o. S. தசரதன்பிள்ளை (Late), 78, 5வது கிழக்குத் தெரு, ஞானம் நகர், மாரியம்மன் கோவில் (அ) தஞ்சாவூர் – 613 501. Cell : 75983 09657, 84894 04647

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/9 செல்வன் **காளிச்சரண்** பில்லாலலூட பூர்வீகம் : திருமாந்துறை	12.09.96 177 cm	B.Tech. (IT).,	Automation Engineer, Bangalore Reliance JIO	திரு. G. சுவாமிநாதன், 7/1744, முருகையா நகர், பிள்ளையாம் பேட்டை, மேல அம்மாசத்திரம் (அஞ்சல்), திருபுவனம் வழி, கும்பகோணம் – 612 103. Cell : 99443 05331, 96006 32510
G 10/9 செல்வன் **M. வெங்கட்குமார்** ரேவதி மாயலுடையான் பூர்வீகம் : கோடாலிகருப்பூர் விருப்பம் : படித்த வரன்	01.02.90 180 cm	B.E., (CSE)	ஸ்ரீ நவசக்தி விநாயகா டிரான்ஸ்போர்ட் Rs. 65,000/PM	திரு. R. மகாலிங்கம், 66, G2, சிவாலயா காம்ப்ளக்ஸ், முத்தமிழ் நகர், உதப்பூர், சிதம்பரம் Cell : 77086 58280, 95978 00801
G 11/9 செல்வன் **R. குருபிரசாத்** அவிட்டம் 1ம் பாதம் கடலுட பூர்வீகம் : வாளூர்	24.09.96 180 cm	B.E. (Computer Science)	Software Engineer, Inatech Software, Rs.7.5 Lakhs/PA Chennai	திருமதி. R. ராஜேஸ்வரி, ஆற்றங்கரைத் தெரு, வாளூர், கீரனூர் Post, நன்னிலம் TK., Cell : 98424 78018, 99700 34222
G 12/9 செல்வன் **வா.வைரமுத்து** சதயம் விஸ்வராய பூர்வீகம் : பேரூர்	27.09.93 5' - 6"	B.E. (EEE), M.E. (Power System)	Working in Qatar	திரு. வா. செந்தில் நாயகம், 2/395, வடக்கு தெரு, பேரூர் & Post, காட்டுமன்னார்கோயில் TK – 608 701. Cell : 08123409169 E-mail : muthuvageesan@gmail.com
G 13/9 செல்வன் **இ. ஹரிஹரன்** பூராடம் மருங்குட பூர்வீகம் : ஹரிஹரன்கூடல் (அரசலங்குடி)	04.10.92 167cm	B.E. (EEE),	Hair Traders, Agriculture Farming, Automobile Battery Shop Rs. 6 Lakhs/PA	திரு. தி. இளங்கோ, 119, வெள்ளாளர் தெரு, ஹரிஹரன்கூடல் தரங்கம்பாடி TK, நாகை Dt Cell : 83004 61541
G 14/9 செல்வன் **G. விக்னேஷ்** பூரம் பொன்னாருடை பூர்வீகம் : மேலப்பாவூர்	03.07.95 167cm	B.E. (CS), CCNA (Global Certified) MCSA	IT Executive, Go Colors Go Fashions India Ltd., Chennai Rs. 4.20 Lakhs/PA	திரு. C. கணபதி, 10/41, ஜெயின் நகர், ஆறுமுகநேரி PO, திருச்செந்தூர் TK, தூத்துக்குடி Dt - 628 202. Cell : 94880 70504, 94880 70523

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு குழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்ணாநகர் :

சங்க கூட்டம் 15–8–2024 அன்று சங்க ஆலோசகர் டாக்டர் விவேகானந்தன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தை துவங்கி வைத்து தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். சங்க உறுப்பினரும் திரு. ஆனந்தகுமரன் அவர்களின் தந்தையும், திரு. வி.க. பள்ளியின் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியருமான புலவர் திரு. சுந்தரகிருஷ்ணன் அவர்களின் மறைவிற்கும், திரு. எஸ். சிவப்பிரகாசம் அவர்களின் அண்ணன் நுங்கம்பாக்கம் திரு. மணிப்பிள்ளை அவர்களின் மறைவிற்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மயிலாப்பூர் திரு. ஜி. கண்ணன் அவர்கள் அவரது மகள் திருமணம் செப்டம்பர் 16–ந் தேதி மயிலாடுதுறை வாசுகி மகாலில் நடைபெற இருப்பதாகவும், அதற்கு எல்லோரும் வருகை தந்து வாழ்த்த வேண்டும் என கேட்டுக்கொண்டு திருமண அழைப்பிதழை வந்திருந்தவர்களுக்கு வழங்கினார்.

ஆண்டு விழாவை அண்ணாநகர் டி.கே. கல்யாண மண்டபத்திலேயே நடத்த முடிவு செய்யப்பட்டது. சிறப்பு விருந்தினர்கள் யார் யாரை அழைப்பது என ஆலோசிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக திருமாந்துறை எஸ். அருணாச்சலம், தலைமை பொறியாளர், (ஓய்வு) தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை அவர்களையும், மாநில கார்காத்தார் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களையும் கூப்பிடவும் முடிவு செய்யப்பட்டது. இந்த முறை ஆண்டு விழாவிற்கு வருகை தருபவர்களுக்கு சுவர்க் கடிகாரம் வழங்கவும், அதற்கான தொகையை செயற்குழு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என ஆலோசகர் சொன்ன யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிறைவாக அரும்பாக்கம் திரு. வெங்கடேசன் அவர்கள் நன்றியுரை சொன்னதும் கூட்டம் முடிவு பெற்றது. நன்றி!

- N. ஆனந்தகணபதி,
செயலாளர்

பெருங்களத்தூர் :

செயற்குழு கூட்டம் 18–08–2024 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. திரு. V. ஆறுமுகம் – மஞ்சு குடும்பம் நமது சங்கத்தில் உறுப்பினராக செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் B. பாபு மற்றும் G. முத்துகுமாரசாமி மூலமாக இணைந்துள்ளார்கள். மற்ற செயற்குழு உறுப்பினர்களும் தங்கள் பகுதியிலுள்ள கார்குல சொந்தங்களை உறுப்பினராக இணைக்கவும்,

2025–ம் ஆண்டிற்கான மாதாந்திர காலண்டரில் விளம்பரங்களை சேகரிக்க செயற்குழு உறுப்பினர்களை கேட்டுக்கொண்டும் உறுப்பினர்களின் கையேடு மற்றும் அடையாள அட்டை தயாரித்து வழங்குவது பற்றி நமது குல முன்னோடிகளை கலந்து ஆலோசித்து முடிவெடுக்கவும் இந்த ஆண்டிற்கான விளையாட்டு மற்றும் ஏனைய போட்டிகள் சிறப்பாக நடத்திட அடுத்த கூட்டத்தில் முடிவெடுக்க தங்கள் பகுதியிலுள்ள உறுப்பினர்களின் கருத்துரைகளை பெற்று வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

G. இராஜகோபாலன்,
செயலாளர்.

போரூர்

செயற்குழு உறுப்பினர்களின் மாதாந்திர கூட்டம் திரு. ரெத்தினசபாபதி இணை செயலாளர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. செயற்குழுவில் முடிவு செய்தபடி சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா 29/09/2024 ஞாயிறு அன்று ராமகிருஷ்ண நகர் R K C திருமண மண்டபத்தில் மதியம் 2மணி அளவில் நடைபெறும் எனவே அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்

போரூர் கார்காத்தார் சங்க நிர்வாகிகள்

காட்டுமன்னார்கோயில் ஒன்றியம்

சங்கத்தின் 42–வது ஆண்டு விழா 14–08–2024 புதன்கிழமை காட்டுமன்னார் கோயில் லலிதா மஹால் திருமண மண்டபத்தில் துவங்கியது. ஒன்றிய தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை அவர்கள் சங்கக் கொடியை ஏற்றி வைத்தார். மகளிர் அணியினர் குத்துவிளக்கு ஏற்றிய பின் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. நம் சொந்தங்களில் இவ்வாண்டு இறந்தவர்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மகளிர் அணி செயலாளர் திருமதி. S. விஜயலட்சுமி அனைவரையும் வரவேற்றார். ஒன்றிய செயலாளர் திரு. R. ஞானம் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் V. ராமகிருஷ்ணன் 23 – 24–ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். அனைவரும் அதனை ஏற்றனர். ஒன்றியத் தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை அவர்கள் தமது தலைமை உரையில் கார்குலக் கர்ணன் திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்கள், கறவை மாடுகள் வாங்க மற்றும் தையல் இயந்திரங்கள் வாங்க வட்டியில்லாக் கடன் வழங்குகிறார். அதனை பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி. Dr. C. சாந்தி அவர்கள், CREW அறக்கட்டளை நிர்வாகியான கார்குல வள்ளல் திரு. R. வெங்கடேசம் பிள்ளை அவர்களின் உதவிகளைப் பட்டியலிட்டு பாராட்டினார். திரு. A. சிவன் அவர்கள் முன்னேறிய வகுப்பினர் என்று சொல்லக்கூடிய சிறுபான்மையினரை ஒன்றுதிரட்டி ஒரே கூட்டமைப்பாக செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அவர் தான் பொறுப்பில் இருக்கக்கூடிய (AIMPA) அகில இந்திய முதலியார் பிள்ளைமார் சங்கத்தின் நோக்கங்கள் செயல்பாடுகள் ஆகியவற்றை விளக்.கினார். மாநிலச் சங்க துணைத்தலைவர் திரு. V. சிவராஜன், இம்மாதிரியான விழாக்களில் இளைஞர்கள் அதிகம் கலந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார் நம்முடைய குழந்தைகளை நமது இன பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றைக் கூறி, நன்னடத்தை உள்ளவர்களாக வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஒன்றிய மகளிர் அணி தலைவர் திருமதி. B. திரிபுரசுந்தரி, குழந்தைகள் தவறான வழியில் செல்லாமல் நல்வழிப்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். இளைஞர் அணி தலைவர் திரு. S. மோகன்குமார் கல்வெட்டில் காட்டுமன்னார்கோயில் அன்றும் இன்றும் என்ற நூலை விருந்தினர்களுக்கு வழங்கினார். 10 & 12–ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப்பிடித்த மாணவ, மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. கார்சிட் என்ற வகையில், குலுக்கல் முறையில் 30 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மொபைலில் தனது SPOUSE-ன் போட்டோவை வைத்திருப்பவர்களை, மேடைக்கு அழைத்து மகளிரணித் தலைவர் திருமதி. B. திரிபுரசுந்தரி ரொக்கப்பரிசுகளை தமது சொந்தப் பணத்தில் வழங்கினார். பெண்களுக்கு கோலப்போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. சிறப்பான இரவு விருந்துக்குப்பின் சுமார் 9 மணி அளவில் விழா இனிதே நிறைவு பெற்றது.

V.R. ஞானம், செயலாளர்.
Cell No: 9444876164

சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 3.8.24 அன்று தலைவர் K. ஜெயசந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது..

ஆகஸ்ட் 15–ந் தேதி சுதந்திர தினத்தன்று சங்க கட்டிடத்தில் உறுப்பினர்கள் முன்னிலையில் தலைவர் தேசிய கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

ஏழ்மை நிலையில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவிதொகை வழங்கப்பட்டது.

(i)	V. ரக்ஷிதா IInd Std	2000
(ii)	B. சஞ்சனா VII thd Std	3000
(iii)	R. வர்ஷா VIIIth Std	3500
(iv)	ஆனந்து ஸ்ரீ கோகுல கிருஷ்ணன் VIII th Std	3500
(v)	S. ஸ்ரீமதி IX th Std	4000
(vi)	S. பிரித்திகா IXth Std	4000
(vii)	G. சர்வேஸ்வரன் IXth Std	4000
(viii)	M. ஹேமதர்ஷினி IXth Std	4000
(ix)	M.S. விமலேஷ் IX th Std	4000
(x)	M. ஸ்ரீமுகுந்தன் Xth Std	4000
(xi)	A. கிருத்திகா Xth Std	4000
(xii)	M. ரித்தீஸ் Xth Std	4000
(xiii)	S. ஷர்மித் XI th Std	5000
(xiv)	R. நடராஜன் XI th Std	5000
(xv)	S. பாலமுருகன் XIIth Std	5000

சுமார் Rs. 59,000 கல்வி உதவிதொகையாக சங்கத்திலிருந்து வழங்கப்பட்டது.

சங்க உறுப்பினர் திரு. M.A. சீனிவாசன் பிள்ளை அவர்கள் தந்தையை இழந்த உறுப்பினரின் இரு குழந்தைகளுக்கு தலா Rs. 5000/– Rs. 10,000 கல்வி உதவிதொகை வழங்கினார்கள்.

(1) S. திவ்யநிலா XI, (2) S. கவிசரன் VII

சீர்காழி நகர கார்காத்தார் சங்கத்தின் சிறப்பு மங்கல சந்திப்பு 18–08–24 ஞாயிற்றுக்கிழமை காலை சீர்காழி நாடார் உறவின் முறை A/C திருமண மண்டபத்தில் தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில், மகளிரணி குத்துவிளக்கு ஏற்றி சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு பேச்சாளர் நல்லாசிரியர் திரு. R. செல்வகுமார் அவர்கள் கலந்து கொண்டு திருமண உறவின் புனிதத்தை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். ஆசிரியர்கள் திரு. V. அகோரமூர்த்தி மற்றும் M.A. சீனிவாசன் ஆகியோர் வரன்களை அறிமுகப்படுத்தினார்கள்.

மங்கல சந்திப்பின் பணிக்குழு உறுப்பினர்கள் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை மற்றும் திரு. M. அகோரமூர்த்தி பிள்ளை அவர்கள் மிக சிறப்பாக வழி நடத்தினார்கள். விருந்தினர்கள் பலரும் தங்களின் பாராட்டுகளை வெளிப்படுத்தினார்கள். விழாவிற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் பொன்னாடை போற்றி கவுரவிக்கப்பட்டது.

செயலாளர் திரு. சி. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற மங்கல சந்திப்பு நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

சி. அகோரம், செயலாளர்.

மணிக்கிராமம்

சங்கத்தின் 21–ம் ஆண்டு நிறைவு விழா 11–08–2024 அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. K.K.R. சுரேஷ் பிள்ளை அவர்கள் தேசியகொடியை ஏற்றி வைத்தார்கள். மகளிர் அணியினர் குத்துவிளக்கு ஏற்ற திருமதி. சிந்தாமணி விஜயகுமார் இறைவணக்கம் பாடினர் திருமதி. லதாகண்ணன் வரவேற்புரை நிகழ்த்த சங்க தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமை உரையாற்ற, செயலர் திரு. G. அன்பழகன் ஆண்டறிக்கை வாசிக்க, பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு அறிக்கை வாசித்து ஒப்புதல் பெற்றார். மண்டல இளைஞர் அணி பொருப்பாளர் திரு. S. பிரபாகரன் போட்டிகளை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாநில சங்க தலைவர் திரு. K.K.R. சுரேஷ் பிள்ளை கிராமத்தில் நடைபெறும் ஆண்டு விழாவை பற்றி பெருமையாக பேசினர். திரு. கைலை சண்முகம் பிள்ளை அவர்கள் (மாநில சங்க அமைப்புச் செயலர்) சிறப்புரையாற்றினார். பணி நிறைவு பெற்ற மணிக்கிராமத்தை சார்ந்தவர்கள் திரு. S. சுரேஷ், திரு. M. பரமசிவம், திரு. K. முரளிதரன் ஆகியவர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மயிலாடுதுறையை சார்ந்த விருந்தோம்பலில் மிக சிறப்பாக சேவை செய்து வரும் திரு. T. பிரபாகரன் பிள்ளை திரு. G. சிங்காரவேலு பிள்ளை அவர்களையும் பாராட்டி சால்வை அணிவிக்கப்பட்டது. மருத்துவ துறையில் சேவை செய்து வரும் திரு. Dr. R. ஜெயபிரகாஷ் M.B.B.S. அவர்கள் Health Tips ஐ பற்றி பேசினார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக சால்வை அணிவித்து பாராட்டப்பட்டது. பத்தாவது, பனிரெண்டாவது பொது தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பொருளர் T. கபிலன் பரிசு வழங்கினார்.

திரு. R. தியாகராஜன் பிள்ளை முன்னால் சங்க தலைவர் அவர்கள் முன்னிலையில் கீழ்கண்டவர்கள், திரு. சண்முகம் பிள்ளை துணைத்தலைவர் மயிலாடுதுறை மண்டலம், திரு. S. குஞ்சிதபாதம் குடவாசல் மண்டலம் துணைத்தலைவர் அவர்கள், திரு. L. ராமசெல்வம், மண்டல செயலர் செம்பனார் கோவில், திரு. S. சீனிவாசன் பிள்ளை மயிலாடுதுறை மண்டல செயலர், திரு. K. ஜெயச்சந்திரன் சீர்காழி கார் சங்க தலைவர், திரு. T. முத்துகுமரசாமி பிள்ளை இராதாநல்லூர் கார் சங்க தலைவர், திரு. A. நடனம் பிள்ளை இலையமுது கூடம் கார் சங்க தலைவர், திரு. N. பாண்டியன் பிள்ளை மேலையூர் கார் சங்க தலைவர், திரு. S. தர்மதுரை மணிக்கிராமம் சங்க துணைத்தலைவர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. மாணிக்கவேல் (AEO ஓய்வு) அவர்கள் திருக்குறளைப் பற்றியும் அதன் அவசியத்தை பற்றி பேசி, ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கினார்கள். அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக சால்வை அணிவிக்கப்பட்டது. சங்கம் சார்பாக ஏழை மாணவர்களுக்கு கல்விதொகை வழங்கப்பட்டது.

மாணவ, மாணவியர்களுக்கு ஓவியப்போட்டி, பேச்சு போட்டி, பாட்டு போட்டி, லக்கி கார்னர் போட்டிகள் திருமதி. இராஜலட்சுமி பரமநாதன் – (மகளிர் அணி) போட்டிகளை நடத்தி வைத்தார்கள். அவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்த கார்குல சொந்தங்களுக்கு காலை 11 மணிக்கு Biscut தேநீர் மற்றும் மதியம் 1.30 மணிக்கு விருந்து வழங்கப்பட்டது. இறுதியாக திருமதி. ரம்யா சுவாமிநாதன் நன்றியுரை ஆற்ற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

சங்கத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். திரு. G. அன்பழகன் – தலைவர், திரு. T. கபிலன் – செயலாளர், திரு. S. பரமநாதன் – பொருளாளர்.

- G. அன்பழகன்

மயிலாடுதுறை

சங்க செயற்குழு கூட்டம் 04–08–2024 அன்று திரு. R. முருகானந்தம் தலைவர் (பொ) அவர்களின் தலைமையில், மகளிரணியின் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

திருநெல்வேலி மாநகர மேயராக நமது கார்குல இனத்தை சேர்ந்த திரு. கிட்டு (எ) ராமகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பெற்றதற்கு நமது நகர சங்கம் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

கேரளாவின், வயநாட்டில் இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட இழப்பிற்கு நமது நகர சங்கம் ஆழ்ந்த வருத்தங்களை தெரிவித்துக்கொள்கிறது.

திரு. முத்துகுமரசாமி அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுப்பெற்றது.

சு. முருகானந்தம்,
தலைவர் (பொ)

செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் 06–08–24 அன்று செம்பனார்கோவில் குமரகுருபரன் தெருவில் வசிக்கும் ஆசிரியர் திரு. G. முத்துகுமரன் இல்லத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு. கி. இராமநாதன் பிள்ளை தலைமையில் இறைவணக்கம் செல்வன் மு.சு. ஐங்கரன் பாடிடவும் வரவேற்புரை திரு. முத்துகுமரன் ஆற்றிடவும் சென்ற மாத கூட்ட அறிக்கை மு..மண்டல செயலர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும் வரவு செலவு அறிக்கை பொருளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. தலைவர் தனது உரையில் மாநில சங்க செயற்குழு கூட்டம் மதுரையில் நடைபெற்றது பற்றியும் அதில் கூறபட்ட செயற்குழு தீர்மானம் பற்றியும் சீர்காழி சங்கத்தில் நடைபெறவுள்ள மங்கல சந்திப்பு பற்றியும் விரிவாக பேசினார்கள். மேலும் சங்க உறுப்பினர் திரு. A.M. சேகர், S. மதியழகன் நல்ல பல கருத்துக்களை பேசினார்கள். திரு. V. வாசன் அவர்கள் சிவனுக்கு உருவம் இல்லை என்பது பற்றி விளக்கமாக கூறினார்கள். சங்க மகளிரணி மூத்த உறுப்பினர் திருமதி. க. ரெத்தினாவதி ஓய்வு பெற்ற ஆசிரியை அவர்கள் தருமை ஆதீனம் 27–வது குருமகா சந்நிதானம் அவர்கள் முன்னிலையில் ஆதி குரு முதல்வர் குருபூஜை முன்னிட்டு 31–5–23 முதல் 10–06–23 முடிய "சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றமைக்கு 27–வது சந்நிதானம் அவர்களால் வழங்கப்பட்ட சான்றிதழை சங்க கூட்டத்தில் காண்பித்து வாழ்த்துக்களை பெற்று கொண்டார்கள். மேலும் தனது பெயரன் S. ரெத்தினகுமார் நபாக் மெட்ரிக் பள்ளியில் 5–ம் வகுப்பு அளவில் மாநில அளவில் நடைபெற்ற யோகா பயிற்சியில் முதலிடம் பெற்றமைக்கு வழங்கப்பட்ட பரிசை சங்க கூட்டத்தில் காண்பித்து வாழ்த்துக்களை பெற்று கொண்டான். கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. கு. முத்துகுமரன் பற்றி மு.மா.து. தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை பேசுகையில் முத்துகுமரன் தகப்பனார் திரு. குருநாதன் அவர்கள் தன்னுடன் ஆசிரியர் பயிற்சி பெற்றது சொந்த வாழ்க்கையில் அவருடன் தான் நண்பராகி பழகியது பற்றியும் அவரது குடும்ப வாழ்க்கை பற்றியும் தெளிவாக பேசினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கம் சார்பாக சால்வை அணிவிக்க பெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட குலுக்கல்முறையில் ஆண்களுக்கான பரிசு திரு. விசுசேகர் பிள்ளைக்கும் பெண்களுக்கான பரிசு திருமதி. லலிதா வடிவேலுக்கும் வழங்கபட்டது கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக அனைவருக்கும் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை நன்றி கூறிடவும், பரசலூர் சிவஜோதி நகரில் வசித்து வந்த ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் திரு. பட்டாமணியார் என்று அழைக்கப்பட்ட க. சண்முகம் அவர்கள் இயற்கை எய்தமைக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

S. நெடுஞ்செழியன்.

பரசலூர்

04–08–2024 அன்று சங்க கூட்டம் பிரதான சாலை திரு. G. சேகர் பிள்ளை இல்லத்தில் V. ஹர்ஷவர்தன் இறைவணக்கம் பாட S. வெங்கடேஷ் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது.

சென்ற மாத மாதாந்திர அறிக்கை மற்றும் மாத நிதிய அறிக்கையை பொருளர் S.M. விஜய் பிள்ளையும் மு.அ. நிதிய அறிக்கையை க. கோவிந்தராஜன் பிள்ளை வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. சங்க வளர்ச்சிக்காக உறுப்பினர்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டது.

சென்னை CREW கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்காத மாணவர்கள், மாணவிகள் விரைவில் விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

திருநெல்வேலி மாநகராட்சி 25–வது வார்டு உறுப்பினர் திரு. கிட்டு என்கிற ராமகிருஷ்ணனை (மூன்றுமுறைஉறுப்பினர்)மேயராக்கியதமிழகமுதல்வர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

சிறப்புக் குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு A. ஜெயகுமார், பெண்களுக்கான பரிசு கோ. சித்ராவிற்கும் முறையே சேகர், வள்ளி, வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் சேகர், வள்ளி அவர்களுக்கு முறையே சண்முகம், பானுமதி கோவிந்தராஜன் சால்வை அணிவித்தார்கள்.

கேரளா மாநிலம் வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் உயிர் இழந்த குடும்பங்களுக்கும், நமது சங்க சிறப்புத்தலைவர் சண்முகம் பிள்ளை (பட்டாமணியார்) இயற்கை எய்தியதற்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. T. ராமலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன்.

Cell : 9894960438

விசலூர் :

சங்க கூட்டம் 18–08–2024 அன்று சித்தி விநாயகர் திருக்கோயில் வளாகத்தில் தலைவர் பொன். சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் செயலர் L. ராமசெல்வம் பிள்ளை முன்னிலையில் செயலர் அறிக்கை வாசிக்க பொருளர் S. கந்தசாமி பிள்ளை பொருளாதார வரவு செலவு சொல்ல இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது.

கூட்டத்தில் எதிர்வரும் 22–8–2024 விசலூர் சிவன் திருக்கோயில் கும்பாபிஷேக நாள் (17 ஆண்டு) கொண்டாடுவது பற்றியும் முடிவு எடுக்கப்பட்டது. வேள்வி பூஜையுடன் காலை 10–மணிக்கு தொடங்கி 1 மணிக்கு முடிவுற்றது. ஆலய அர்ச்சகர் செந்தில்குமார், ரமணி, அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள். கிராமவாசிகள் பொருளாதார உதவியோடு அன்னதானம் செய்யப்பட்டது. சிவன் திருக்கோயில் தொல்லியல் துறை அனுமதியுடன் தமிழக அரசு மூலம் திருக்குடமுழுக்கு செய்ய இறைவன் அருள் பெற்று ஆய்வு நடைபெற்றுள்ளது மேலும் சங்க கூட்டம் தொடர்ந்து நடைபெற வாழ்த்து நன்றிகள் நவில கூட்டம் இனிதே சுபம் ஆனது.

– ராமசெல்வம், செயலர்.

9940255240

இலையமுதுகூடம்

சங்க கூட்டம் 10–08–2024 அன்று செயலர் திரு. G. சுப்பிரமணியன் அவர்கள் இல்லத்தில் தலைவர் A. நடனம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன சங்க பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

மணிக்கிராமம் கார்காத்தார் சங்க ஆண்டு விழா அழைப்பினை ஏற்று பொறுப்பாளர்கள் கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நம் சங்க உறுப்பினர் திரு. C. அகோரம் அவர்கள் எதிர்பாராத விதமாக காலில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதை அறிந்து வருத்தம் தெரிவிக்கப்பட்டு அவர் சுகமாக குணமடைய கூட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது.

செயலர் வழங்கிய தேநீருடன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

A. நடனம்,

தலைவர்.

மேலையூர் (பூம்புகார்) மையம் :

சங்கத்தின் கூட்டம் செயலருடைய இல்லத்தில் இறைவணக்கத்துடன், புதிய தலைவர் N. பாண்டியன் தலைமையில் தொடங்கியது.

CREW TRUST மூலம் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை விரைவாக, முறையாக நிறைவு செய்து கொடுக்குமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

புதிதாக, அடுத்த மாதத்திலிருந்து பொறுப்பேற்க இருக்கும், வெள்ளையனிருப்பைச் சேர்ந்த R. வெங்கடேசனுக்கு முன்னாள் பொருளர் T. ஜெயபாலன் பொன்னாடை அணிவித்து உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

நமது சங்கத்தைச் சேர்ந்த 80 வயது நிறைவு செய்த உறுப்பினர்களுக்கு, திருக்கடையூர் ஆலயத்திற்குச் சென்று அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து அவர்களின் இல்லத்திற்குச் சென்று பிரசாதம் அளித்து நூலாடை அணிவித்து, ஆசிகள் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இன்று உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்கிய G. முத்துக்குமாருக்குச் சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– தி. ஜெயபாலன்,

பொருளர்.

9443568722

திருவாரூர்

சங்க கூட்டம் 11–8–2024 அன்று கூட்டத்தினை சங்க துணைத்தலைவர் கண்ணபிரான் பிள்ளை அவர்கள் தலைமையேற்றும் திருமருகல் பாலசுப்ரமணிய பிள்ளை ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். திரு. கந்தசாமி பிள்ளை திருசெங்காட்டாங்குடி அவர்கள் இறைவணக்கம் பாடி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். தலைவர் உரையில் நமது உறுப்பினர்கள் வருகையை அதிகரிக்க அனைத்து கிராமங்களுக்கும் சென்று உறுப்பினர்களை ஊக்குவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் 60 வயதுக்கு மேற்கூடியவர்கள் இருக்க கூடிய கடைபிடிக்க வேண்டியநடைமுறை அன்றாடநிகழ்ச்சிகளை சுவைபட எடுத்துக் கூறினார்கள். மற்றும் நமது மும்மாவட்ட தலைவரும் முதுபெரும் அறிஞருமான திரு. T.S. தியாகராஜன் பிள்ளை அவர்களின் புகழ்களை கூறி அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து கொள்ள கேட்டுக் கொண்டார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் திரு. T.S.T. அவர்களுக்கும் நமது உறுப்பினர் திருமதி. ரேவதி குழந்தைவேலு அவர்களின் தகப்பனார் இறைவனடி சேர்ந்ததற்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் சிற்றுண்டி செயலாளர் சோமசுந்தரம் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது.

கடைசியாக திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள் நன்றியுரையுடன் கூட்டத்தில் கஷ்டங்களை பாராமல் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்கள்.

– அ. சோமசுந்தரம்,
செயலாளர்.

கும்பகோணம் :

அருள்மிகு அபிமுகேஸ்வர் ஆலய திருமண மண்டபத்தில் 09–08–2024 ஆடி நான்காவது வெள்ளிக்கிழமை திருவிளக்கு பூஜை நடைபெற்றது. அச்சமயம் பூஜையில் கலந்து கொண்ட கார்குல மகளிர், மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் சங்கத்தின் சார்பில் செயலாளர் எஸ். விஜயகுமார் அவர்கள் வரவேற்றார்கள். இந்நிகழ்வை திருமதி. நீலா ராஜசேகர் அவர்கள் தலைமையில், பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்கள் ஒருங்கிணைப்பில் குணசீலன் திரு. தியாகராஜன் திரு. ராஜேந்திரன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் திருமதி. மைதிலி அவர்கள் நன்றி கூறினார்கள். பூஜை பொருட்கள் அனைத்தும் உறுப்பினர்களின் பங்களிப்பில் நடைபெற்றது. பூஜை நடப்பதற்கு இடம் அளித்த உதவிய திரு. எம்.சி.எஸ்.ஆர். சம்பந்தம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. பிரசாதம் மற்றும் அனைவருக்கும் உணவளித்த திரு. எம்.ஆர்.கே. பாண்டியன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கும்பகோணம் ராஜ ராஜேந்திரன் பேட்டை விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலயத்தில் ஐந்தாவது மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை சைவப் பெருமக்களால் முற்றோதுதல் நடைபெற்று வருகிறது. இன்று (18–08–24) ஆவணி மாதம் 2–ஆம் தேதி நடைபெற்ற முற்றோதுதலில் கலந்து கொண்ட அடியார்கள் மற்றும் கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் திரு. சீ. விஜயகுமார் அவர்கள் பங்களிப்பால் அறுசுவையுடன் கூடிய மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

– சீ. விஜயகுமார்,
செயலாளர்.

திருச்சி கார்காத்தார் சங்கம் முப்பெரும் விழா.

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் 21–வதுமங்கல சந்திப்பு விழா, 51–வது ஆண்டு விழா, ஒப்புரவு எழுச்சி விழாவும் சேர்ந்து முப்பெரும் விழாவாக ஆகஸ்ட் 15 அன்று திருச்சி ஆனந்த் ஹோட்டலில் மிக சிறப்பாக நடைபெற்றது. 367 வரன்கள் பதிவு செய்யப்பட்டு, அத்தனை வரன்களும் வண்ண புகைப்படத்துடன் சிறப்பான புத்தகமாக வெளியிடப்பட்டது. வரன்களை வரன்களின் பெற்றோர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு புதிய நிகழ்ச்சியாக அமைந்தது. இந்த நிகழ்ச்சி மதியம் 1.00 மணி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. உணவுக்குப் பிறகு புத்தகத்தைப் பார்த்து யார் யாருடன் பேச வேண்டும் என்று கேட்டார்களோ அவர்களை சம்பந்தப்பட்டவர்களுடன் பேச வைத்து கலந்துரையாடல் நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது. ஜாதக பொருத்தம் பார்ப்பதற்கு நமது உறவினர் ஒரு ஜோசியரும் வந்திருந்து ஜாதகங்களை பொருத்தம் பார்த்து தந்தார்கள் அது மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

மங்கல சந்திப்பின் அமைப்பாளர் நவிலு திரு. N.B. பாலசுப்பிரமணியன் தலைமையில், இணை அமைப்பாளர் திரு. C. சபாபதி அவர்கள் இந்த நிகழ்ச்சியை செயலாளர், பொருளாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து

சிறப்பாக செய்தார்கள். MRF திரு. G. ரவிக்குமார் மற்றும் காட்டூர் திரு. G. சநரவணன் அவர்கள் மங்கல சந்திப்பு வரன்களின் அறிமுக நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள்.

மாலை முதலில் மகளிர் சங்க ஆண்டு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. திருமதி. சரஸ்வதி தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் செயலாளர் திருமதி. மஞ்சுளா குமார் அவர்கள் ஆண்டறிக்கை வாசிக்க திருமதி. வசந்தி பாலசுப்பிரமணியன் கணக்கு வழக்குகளை சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருமதி. வனஜா இளங்கோவன் அவர்கள் தற்போது திருச்சி சங்கத்தின் உதவியுடன் நமது இனத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளை தொகுத்து ஒளி, ஒலி நிகழ்ச்சியாக வெளியிட இருப்பதாக தெரிவித்தார்கள். அதற்காக செலவிடப்பட்ட தொகையையும் மாநில சங்க நிதியிலிருந்து கொடுத்து உதவுமாறு கேட்டு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர். திருச்சி சங்கத்தை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பின்னர் ஒப்புரவு எழுச்சி விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. நிகழ்ச்சியில் சென்னை சங்கத்தின் தலைவர் திரு. S. சோமசுந்தரம் அவர்கள் முன்னிலை வகிக்க ''கார்காத்தார் ஒப்புரவின்'' சிறப்புகளை தலைமை உரையாற்றிய திரு. பாலசுப்ரமணியன் எடுத்துரைத்தார். பின்னர் மாநில தலைவர் கே.கே. ஆர். சுரேஷ் அவர்களும் திரு. கைலை. சண்முகம் அவர்களும், துணை ஆசிரியர்கள் திரு. தியாகராஜன் மற்றும் திருமதி. வனஜா இளங்கோவன் அவர்களும் ''கார்காத்தார் ஒப்புரவு'' சிறப்புகளை எடுத்துரைத்து தமிழகத்தில் உள்ள அத்தனை கார்காத்தார் குடும்பத்தினரும் ஒப்புரவு வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

திருச்சி சங்க முன்னாள் செயலாளரும் பிரபல பேச்சாளருமான திரு. G. சிவகுருநாதன் தனது சிறுவயதிலிருந்து கார்காத்தார் சங்கமும், ஒப்புரவும் அவர் வாழ்க்கையில் எந்த அளவிற்கு உதவியது என்று அதன் சிறப்புகளை தமக்கே உரிய பாணியில் எடுத்துரைத்தார். அடுத்த நிகழ்ச்சி ஆக திருச்சி சங்கத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. மண்டல செயலாளர் திரு. V. குணசேகரன் முன்னிலை வகிக்க, தலைவர் திரு. M. பாலசுப்பிரமணியன் தலைமை உரை ஆற்ற, செயலாளர் திரு. சுப்பிரமணியன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. பாண்டியன் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தார். இந்த நிகழ்ச்சியில் சென்னையை சேர்ந்த சர்வதேச வேளாளர் சங்க நிறுவனர் டாக்டர் J.S. ராஜ்குமார் அவர்களும், முதல் குரல் டாக்டர். ரவீந்தரன் அவர்களும் கலந்து கொண்டு சிற்ப்புரை ஆற்றினார்கள். சங்கத்தின் ஒற்றுமையும் வலிமையும் பற்றி தலைவர் கே.கே.ஆர் சுரேஷ் அவர்கள் சிறப்பாக உரை ஆற்றினார். திருச்சி சங்கத்தின் சார்பாக முன்னாள் மாநில செயலாளர் திரு. எம்.எஸ். முத்தையா பிள்ளை அவர்களது பணிகள் சிறப்பாகபாராட்டப்பட்டது.முன்னாள்துணைத்தலைவர் திரு. முனியப்ப பிள்ளை அவர்கள் பணி காலத்தில் சங்கத்திற்கு செய்த உதவிகளையும் பாராட்டி அவர்கள் இருவருக்கும் சிறப்பு செய்யப்பட்டது.

பாராட்டு பெறுவதற்காக அழைக்கப்பட்டிருந்த மனிதநேயர் திரு. டி.என். முத்துக்குமாரசாமி பிள்ளை உடல் நல காரணமாக வர இயலாததால் அவருடைய சிறப்புகளை எடுத்துரைக்க பின் மன்றத்தில் இருந்த அத்தனை பேரும் அவருக்காக எழுந்து நின்று கைதட்டி அவரது சேவைகளை பாராட்டினார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த முன்னாள் மாநிலத் தலைவர் கேப்டன் ஜெகதீசன் அவர்களுக்கும் பொதுச் செயலாளர் திரு. வேலாயுதம் பிள்ளை அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியினை மிக சிறப்பாக திருமதி. திலகவதி மணிவண்ணன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். மிகச் சிறப்பாக நாள் முழுவதும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை சற்றும் அயராமல் நிகழ்ச்சிகளை சிறப்பாக வடிவமைத்து கலந்து கொண்ட தலைமை நிலைய செயலாளர், திரு. குமார் மண்டல செயலாளர் திரு. V. குணசேகரன், KBF. சோமசுந்தரம் திருவாளர்கள், S. நடராஜன், T. வேணுகோபாலன், UKT. T. மணிவண்ணன், V. கொளஞ்சி கண்ணன், P. மனுநீதிசோழன், G.V. சரவணன், V. ராமகிருஷ்ணன், R. சிவராமகிருஷ்ணன், S. ராஜ்குமார், V. ரவி, மகளிர் அணியை சேர்ந்த திருமதி. மல்லிகா சேதுராமன், வள்ளி சிவகுமார், ராஜலக்ஷ்மி ரமேஷ்குமார், மேகலா சுப்ரமணியன், மீனா மோகன்குமார், மகளிர் அணி செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. வந்திருந்த அழைப்பாளர்கள் அனைவரும் கலையாமல் கடைசி வரை இருந்து நிகழ்ச்சிகளை சிறப்பித்தது பெருமைக் குரியதாக இருந்தது.

சொ. சுப்ரமணியன், செயலாளர்.

மதுரை :

18–08–2024 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. திரு. இரா. கணேசன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார்.

தலைவர் முனைவர் K. சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது உரையில் சங்கத்தின் பவளவிழா சிறப்பாக நடைபெற்றது பற்றியும், 11–08–24 அன்று

திருநெல்வேலியில் நடந்த அச்சங்கத்தின் 106–வது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கியது பற்றியும் 15–08–24 அன்று திருச்சி சங்க முப்பெரும் விழாவில் கலந்து கொண்டது பற்றியும் உரையாற்றினார்.

மாநிலத் துணைத்தலைவர் திரு. S. உமையொருபாகம் அவர்கள் திண்டுக்கல் சைவப்பெருமக்கள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமண மண்டப திறப்பு விழாவில் கலந்து கொண்டது பற்றி பேசினார்.

பவள விழாவிற்கு நன்கொடைகள், விளம்பரங்கள் பெற்றுத்தந்த அனைவருக்கும் குறிப்பாக மிக அதிக தொகை வசூலித்து தந்த செயற்குழு உறுப்பினர் திரு. R. பசுங்கிளி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து நிர்வாக மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தலைவர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

செயலாளர் திரு. C.M. சொக்கலிங்கம் அவர்களின் பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய செயலாளரைத் தேர்ந்தெடுத்தனர்.

துணைச்செயலாளர் திரு. S. சுந்தரராஜன் முன்மொழிய, துணைச்செயலாளர் திரு. N. இராமலிங்கம் வழிமொழிய நமது சங்க செயற்குழு உறுப்பினர் திரு. B. ரவிச்சந்திரன் அவர்கள் செயலாளராக அனைவராலும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சங்க மூத்த உறுப்பினர் மதுரை S.S. காலனி சண்முகம் பிள்ளை அவர்கள் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொருளாளர் திரு. S. முருகன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- Dr. K. சிவசுப்பிரமணியம்,
தலைவர்.

திருநெல்வேலி :

சங்கத்தின் 106–வது ஆண்டு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் 11–08–2024 (ஞாயிறு) அன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலி சந்திப்பு ஸ்ரீலட்சுமி நாராயணன் மகாலில் தலைவர் C. சண்முகம்சுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நமது கார்குலத்தை சார்ந்த உழைப்பின் சிகரம் உண்மை தொண்டன் சைக்கிள் மனிதர் வணக்கத்திற்குரிய மேயர் G. இராமகிருஷ்ணன் என்ற கிட்டு அவர்கள் மேயர் பதவி ஏற்றவுடன் முதன் முதலாக கலந்து கொண்டு சிறப்பித்த விழா என்பது பெருமைக்குரியதாகும். செயற்குழு உறுப்பினர் சுத்தமல்லி முருக. இளங்கோ அவர்கள் நாட்டுப்பண் இறைவணக்கம் பாடினார்கள். துணைத்தலைவர் சாவடி K. ஐயப்பன் பிள்ளை அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றார். நமது சங்கத்தின் ஆண்டறிக்கையை செயலர் வீரசிகாமணி செ. இராமசுப்பிரமணியன் அவர்கள் தாக்கல் செய்தார்கள். நமது சங்கத்தின் நிதி நிலை அறிக்கையை பொருளாளர் இராஜவல்லிபுரம் அ. திருஞானசம்பந்தன் பிள்ளை அவர்கள் வாசித்தார்கள். அம்பை செயற்குழு உறுப்பினர் திரு. S. கூடலரசன் பிள்ளை தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு, அனைவருடைய கரஒலி மூலம், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சிறப்பு விருந்தினர் டாக்டர். திருச்சி. S. பொன்னையா பிள்ளை M.D., சங்க வளர்ச்சி ஒற்றுமைபற்றி சிறப்புரையாற்றினார்கள். மனிதநேயம் TN. முத்து குமாரசாமி பிள்ளை வர இயலாத காரணத்தினால் அவர்கள் அனுப்பிய வாழ்த்து செய்தியை அம்பை சங்க தலைவர் சொக்கலிங்கம் பிள்ளை வாசித்தார்கள். மதுரை மாவட்ட தலைவர் முனைவர் K. சிவாசுப்பிரமணியன் பிள்ளை முன்னாள் மாமன்ற உறுப்பினர் T.N. உமாபதிசிவன் பிள்ளை, Er. S. செல்வகுமார் பிள்ளை, S. சுந்தரம் பிள்ளை அவர்களும் சங்கத்தின் வளர்ச்சி ஒற்றுமை மாணவர்களின் மேல்படிப்பு வேலை வாய்ப்பு பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு திருநெல்வேலி சங்கம் சார்பாகவும், அனைத்து கிளை சங்க நிர்வாகிகள் சார்பாகவும் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார்கள். வீரசிகாமணி விவேகானந்தா கல்வி குழுமம் தாளாளர் P. கல்யாணம்சுந்தரம் பிள்ளை மற்றும் செந்தில் விநாயகம் பிள்ளை அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். கூட்டத்தில் 400–க்கும் மேற்பட்ட குடும்ப சொந்தங்கள் கலந்து விழாவினை சிறப்பித்தார்கள். கலந்து கொண்ட அனைத்து கிளை சங்க நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. நெல்லைக்கே பெருமை சேர்க்கும் 'சொதி சாப்பாட்டுடன்'' கூட்டம் இனிதே நிறைவுற்றது.

இணை செயலாளர் சீதபற்பநல்லூர் S. கணபதியா பிள்ளை அவர்கள், நன்கொடையாளர்கள் மகளிர் அணி இளைஞர் அணி மற்றும் சங்க பொதுகுழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூற தேசீய கீதம் இசைக்க விழா நிறைவு பெற்றது.

கோவை

கோவை கார்காத்தார் வேளாளர் சங்கத்தின் 45–ஆம் வது ஆண்டு விழா 11–08–24 அன்று மிகச் சிறப்பாக கோவை மணிமகாலில் நடைபெற்றது. 150–க்கு மேற்பட்ட உறவினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

திருமதி. ஞானகுமாரி ஞானசம்பந்தம், திருமதி. டாக்டர் மணிமேகலை ஜெயபால் அவர்களும் குத்துவிளக்கு ஏற்றி திருவிளக்கு பூஜையை ஆரம்பித்து வைத்தார்கள். திருமதி. சகுந்தலா சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கோவை கார்காத்த வேளாளர் சங்கத்தை நிறுவிய தலைவர் கார்குல பொன்மனச் செம்மல் சைவ திரு. பொன்னம்பலம் பிள்ளை.

மறைந்த முன்னாள் தலைவர் திரு. நமச்சிவாய அவர்களுக்கும், திருமதி. டாக்டர். சுபத்ரா அவர்களுக்கும்திரு. மதுரநாயகம் அவர்களுக்கும் திரு. C. வைரவேல் அவர்களுக்கும் திரு. பழனிவேல் அவர்களுக்கும் திரு. A. ராஜகோபால் அவர்களுக்கும், திரு. சதீஷ் கோபால் அவர்களுக்கும் நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட உறுப்பினர்களை வரவேற்று சங்கத் தலைவர் A. அரியநாயகம் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள்.

திரு. S. ஞானசம்பந்தம் அவர்கள், முனைவர் சுந்தரேசன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

திரு. S. வள்ளிநாயகம் அவர்கள் நிதி நிலை அறிக்கையை வாசித்தார்கள். மண்டல பொறுப்பாளர் திரு. திருவேங்கடம் அவர்கள் விருந்தினர்களை உபசரித்து கார்காத்தார் ஒப்புரவு இதழ் ஆண்டு சந்தாவை பெற்றுக்கொண்டு உறுப்பினர்கள் பதிவையும் செய்தார்கள்.

திருமதி. முனைவர் R.M. சாந்தி, Principal Scientist, ICAR அவர்கள் முன்னிலை வகித்து சிறப்புரை ஆற்றினார்கள்.

தங்கச் தாரகை Dr. S. முத்துலட்சுமி அவர்களுக்கும் முனைவர் பேராசிரியர் P. முத்து சுப்பிரமணியன், கோவை தொழில் நுட்பக் கல்லூரி அவர்களுக்கும் அவர்களின் சாதனைகளை பாராட்டி பத்திரமும் நினைவு பரிசு தந்து கௌரவித்து மகிழ்ந்தோம்.

கோவை கார்காத்த சங்கம் ஆரம்பித்தது முதல் 45 ஆண்டுகளாக சங்கத்துக்காக அரும்பாடுபட்டு சங்கத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவரான திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு கார்குல செம்மல் என்ற விருது வழங்கி பெருமைப்பட்டது. திரு. எஸ். பழனி வேலாயுதம்.

திரு. சைலப்பன் ஆடிட்டர் அவர்களின் அயராத சங்கப் பணிகளைப் பாராட்டி அவர்களுக்கு மரியாதை செலுத்தி பாராட்டு சான்றிதழையும் நினைவு பரிசும் வழங்கப்பட்டன.

அடுத்த நிகழ்வாக மருத்துவ அரங்கம் நலமே சூழ்க என்ற தலைப்பில் நடைபெற்றது. Dr. K. பழனி வேலாயுதம் அவர்கள் Dr. C. சுப்பையா அவர்கள், Dr. S. ராமராஜன் அவர்கள், Dr. K. அர்ச்சனா அவர்கள், Dr. S. நடராஜன் அவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சிறப்பாக விளக்கம் அளித்தார்கள்.

திரு. B. அனந்த பத்மநாபன், Director, Timytop Engg India Pvt Ltd. திரு. V. அசோகன், Director, GM. Flowserve India Ltd, திருமதி. வளர்மதி பிரபாகர், WINMASS Babies Product ஆகியோர் கலந்து கொண்டு, வளரும் தொழில் நுழைவோருக்கு தக்க ஆலோசனைகளை சொன்னார்கள்.

டாக்டர் K. அர்ச்சனா அவர்களின் மகள்கள் R. அக்ஷரா சாய், R. அக்ஷிதா சாய், திரு. வள்ளிநாயகம் அவர்களின் மகள்கள் கலை ஸ்ரீ ரஞ்சனா, ரம்யஸ்ரீ ரஞ்சனா, முனைவர் P. முத்து சுப்பிரமணியன் அவர்களின் மகன் எம்..அத்விக், திரு. M. கோகுல் அவர்களின் மகன் ஜி தீன சரண் கலந்து கொண்டு பல பாடல்களை அழகாக பாடி மகிழ்வித்தனர். குழந்தைகள் அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பெற்றது.

திரு. C. கருணாநிதி [GM, Retd] அவர்களும், திரு. மரபின் மைந்தன் முத்தையா அவர்களும் மாவட்ட சங்கங்களும் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார்கள்.

திருநெல்வேலி மாநகர் தந்தையாக பதவி ஏற்ற வணக்கத்துக்குரிய திரு. கிட்டு என்ற ராமகிருஷ்ணன் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பெற்றது.

திருமதி. முனைவர் வசந்த ரத்னா அவர்கள் நிகழ்ச்சிகளை அழகாக தொகுத்து வழங்கினார்கள்.

திரு. சிவராஜகோபால் அவர்கள் நன்றி உரை ஆற்றினார்கள்.

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

நெய்வேலிசைவவேளார் நலக்கழகம்
பொன்விழா ஆண்டு 2024
நாள்: 10 & 11.08.2024

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது
05–01–1960

உதிர்ந்தது
17–09–2019

தெய்வத்திரு. **N. தேன்மொழி** அவர்கள்

பிறந்தது : திருக்கடையூர்
வாழ்ந்தது : இலையமுதுகூடம்

ஐந்தாண்டு நகர்ந்தாலும்
எங்களை விட்டு அகலாது உம் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகுகின்றோம்
உம்மை நினைக்காத நொடிகள் இல்லை
உம் ஆன்மா இறை பாதம் சரணடைய
எம்மானை பிரார்த்தனை செய்கிறோம்

என்றும் உம் நினைவுகளுடன் வாழும்

தெய்வத்திரு. **A. தியாகராஜன் குடும்பத்தினர்**

A. உமாபதி குடும்பத்தினர்

கணவர் : **A. நடனம்** எம்.ஏ. எம். எட்
(சீனிவாசா மேல்நிலைப்பள்ளி, மேலையூர்)

மகன்கள் – மருமகள்கள் :
N. நீலகண்டன், B.E
N. தண்டபாணி B.A
திவ்யா நீலகண்டன்
பவித்ரா தண்டபாணி

பேரன்கள் : **நீதி, நிமலன்**
த. ஹரிஹர பவிதன்
இலையமுதுகூடம்.

மற்றும் **குடும்பத்தினர், திருக்கடையூர் விழுதுகள்**
Mob : 75984 56182 / 93440 78405

இதய அஞ்சலி

மலர்ந்தது
27.11.1939

உதிர்ந்தது
02.08.2024

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

இந்த குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்
சிதம்பரம், வாகீச நகர் திரு. **வெ.சுவாமிநாதன் பிள்ளை**
ஆசிரியர் (ஓய்வு)
(மயிலாடுதுறை மாவட்டம், மாப்படுகை, தெய்வத்திருவாளர்கள்.
S.வெங்கடாஜலம் பிள்ளை-அவையம்மாள் ஆகியோரின் அன்பு மகன்)

குரோதி வருடம், ஆடி மாதம் 17 ஆம் நாள் (02.08.2024) வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணிக்கு திரயோதசி திதி அன்று வைகுந்த பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஏன்றும் நீங்கா நினைவுகளுடன்...

மனைவி: திருமதி. **S.வசந்தகுமாரி**

மகள்கள்:	மருமகன்கள்:	பேரன்கள்:
திருமதி. **சு.தமிழ்செல்வி**	திரு. **சு.இராஜசேகர்**	**R.அருண்குமார்,**
திருமதி. **சு.சிவகாமசுந்தரி**	தெய்வத்திரு. **R.முருகன்**	**M.விஜயபிரகாஷ்**
திருமதி. **சு.வளர்மதி**	திரு. **ஜெ.வை.செந்தில்**	**M.ஆகாஷ்கார்த்திக்,**
		V.S.அர்ஜீன், V.S.அஜீத்

4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.05.1964

மறைவு
24.09.2020

தெய்வத்திரு. **M. மனோகரன்** M.Com.,
(ரைஸ்மில் உரிமையாளர்),
வ.உ.சி தெரு, கழுக்காணி முட்டம்.

அன்பைக் காட்டியவரும் நீரே !
ஆற்றலைத் தந்தவரும் நீரே !
இன்முகத்துடன் வைத்தவரும் நீரே!
ஈடில்லாப் பாசம் காட்டியவரும் நீரே !
உழைப்பை உணர்த்தியவரும் நீரே !
ஊக்கத்துடன் செயல்படவரும் நீரே !
என்னை வழிநடத்தியவரும் நீரே !
ஏணியாக இருந்தவரும் நீரே !
ஐயமின்றி நேசம் காட்டியவரும் நீரே!
ஒற்றுமையை கற்றுத்தந்தவரும் நீரே !
ஓங்கி வளரவைத்தவரும் நீரே !
ஔதடமாய் வாழ்ந்தவரும் நீரே !
அஃதிணையாக இருந்தவரும் நீரே !

என்றும் கண்ணீரில் வாழும் உங்கள் மனைவி
S.புஷ்பலதா மனோகரன்
"மனோதமிழ் மாளிகை"
தங்கவேல் வாண்டையார் நகர், கழுக்காணிமுட்டம்.
Cell : 6383253423

19-ம் ஆண்டு நினைவஞ்சலி

K.N.A.

B. நடராஜன் பிள்ளை

N. ஞானாம்பாள்

கீரமங்கலம் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

புலவர். கீ.ந. அருள்பிரகாசம், எம்.ஏ.பி.எட்.,

எங்களை விட்டு 13.09.2005 பிரிந்த அன்புத் தந்தையே உங்களின் நினைவாக இவ்வாண்டும் நெஞ்சுருக நினைத்து வழிபடுகின்றோம். என்றென்றும் உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு கிட்டிட வணங்குகிறோம். பிரிவால் வாடும்....

நினைவில் வாழும்....

இணைந்து வணங்கும்

திருமதி கிருட்டிணவேணி அருள்பிரகாசம்

"ஞானராசர் குடில்"

No. 8, திருவள்ளுவர் முதல் குறுக்குத் தெரு,

முகப்பில் ஸ்ரீ வல்லப கணபதி திருக்கோயில்,

பூதாமூர், விருத்தாசலம்

செல் : 97882 58389

அருள் இராமலிங்கம், B.E., M.I.S.T.E.,

திருமதி. உஷா இராமலிங்கம், M.Sc., B.Ed.,

செல்வி. R. சுஷ்மிதா விஷாலினி, B.Arch.,

8/40-B2, Kasthuribai Nagar 2nd Main Road,
Adyar, Chennai - 600 020.
Cell : 98418 13589, 80123 65908

"PENTAGONS" (ENGINEER & ARCHITECT)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
31–07–1929

மறைவு
13–08–2024

மயிலாடுதுறை மாவட்டம், இளந்தோப்பு கிராமம் தெய்வத்திரு. சோமுப்பிள்ளை – லோகாம்பாள் ஆகியோரின் புதல்வரும், சென்னை, நுங்கம்பாக்கம் நலமுடன், திருமதி. மயிலாம்பாள் அவர்களின் கணவரும், எங்களது தந்தையுமான,

E.S. மணிப்பிள்ளை அவர்கள்,

1950களில் சென்னையில் தொழில் தொடங்கி, 1980களில் திருவிளையாட்டம் குறும்பகுடியில் வேளாண் தொழிலையும் சிறப்பாகச் செய்து, தனது தொண்ணூறு வயதிற்குமேல் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில், வீரசோழனாற்றுப் பாலம் உருவாக பெரும் முயற்சி செய்து, கால் பதித்த அனைத்திலும் வெற்றி கண்டு **செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்** என்ற நறுந்தொகை பாடலுக்கு ஏற்ப அடுத்தவரை உயர்த்தி தானும் உயர்ந்து, 95 வயதை தாண்டிக் குலம் முழுவதுமாக 10 கொள்ளுப்பேரக் குழந்தைகள் வரை தழைப்பதைக் கண்டு அழியாப் புகழுடன் நிறை வாழ்வு வாழ்ந்து, கடந்த 13–08–2024 அன்று சென்னையில் வைகுந்த பதவி அடைந்தார்கள். அவர்கள் வகுத்த பாதையில் என்றும் அவர்கள் நினைவுகளுடன்...

மகள்கள்:
சித்ரா – S. சுகுமார்
ராணி – C. கோவிந்தராஜன் (எ) பாபு
மேற்கு மாட வீதி, நுங்கம் பாக்கம், சென்னை–34

பேத்திகள்:
S. சோபனா – B. கணேஷ் (எ) சுவாமிநாதன்,
G. இந்து –S. தீபன்
G. ஐஸ்வர்யா – S. மோகன்

கொள்ளு பேத்திகள்
S. அதீரா கிரிட்டி, S. ஆத்யா,
M. சியா, S. நிலா

மகன்
M. மோகன்,
தேவி மோகன்,
தெய்வநாயகம் தெரு,
நுங்கம் பாக்கம், சென்னை–34.
Ph: 93456 37456

பேரன்கள்:
E.M. சோம்ராஜ் – அனிதா,
S. சோம்நாத் – தீப்தி,
E.M. மணிமாறன் – சிந்து (எ) சிவகாமி

கொள்ளு பேரன்கள்
D. யுவா, M. ரிதான், S. நிலன் அகஸ்தியா,
D. சித்,
M. கிருஷவ் ஆதித்யா, S. வியன் அதிதேவ்

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th September 2024

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

We express our gratitude to actor Mr. Aadhi Pinisetty, appeared in films 'Mirugam,' 'Eeram,' etc...' and actress Mrs. Nikki Galrani, known for her popular movies like 'Darling' and 'Velainu Vandhutta Vellaikaaran.' Their family's presence and blessings.

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**